
# தமிழரசு


16-8-1981 50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆடி-32







கோயமுத்தூர் மாநகராட்சி துவக்க விழா



# கோவையில்


## மாண்புமிகு முதல்வர்

22-7-'81

நலிவுற்றோர்க்குத் தொழில் கருவிகள் வழங்குதல்


கன்னியா குருகுலம்
மேல் நிலைப்பள்ளிக் கட்டடத் திறப்பு






# தமிழ்க் கவிக் காதலர்!

## மூதறிஞர் ராஜாஜி



சென்ற திங்கட்கிழமை கண்ணன் பிறந்த நாள். அந்தத் திங்கட்கிழமையே தமிழ்க் கவிதை தரும் மகிழ்ச்சியின் ரகசியம், தமிழ் வசன நடை முன்னேற்றத்தின் ரகசியம், தாளமும் ராகமும் சேர்ந்த நல்லிசையின் ரகசியம், தெய்வ பக்தி தரும் நிம்மதியின் ரகசியம், அன்பின் பரம மகிழ்ச்சி, வேஷங்களின் பொய்ம்மை, அனைத்தும் நன்றாகக் கண்ட பூரண ரசிகமணி டி.கே.சி. பிறந்த நாளும்.

ஹரியின் பூரணாவதார கண்ணனின் ஜன்ம நட்சத்திரமும், டி.கே.சி.யின் ஜன்ம நட்சத்திரமும், ஒன்றாய்ச் சேர்ந்த திருவிழாவை மகிழ்ச்சியுடன் சென்ற திங்கட்கிழமை கொண்டாடினோம். இந்தத் திருவிழாக்கள் ஞானமும் அன்பும் நாட்டில் வளரச் செய்யும்.



கண்ண பகவான் ரோஹிணி நட்சத்திரத்தில் அவதரித்தான். ரோஹிணி நட்சத்திரக் கூட்டம் சகடத்தைப் போல் இருப்பதாகக் கண்டு அதற்குப் பெயரும் சகடம் என்றே சொல்லுவது வழக்கம். வண்டியின் முக்கிய பாகம் அச்சு மரம். அச்சு மரத்துக்கு வடமொழி 'அக்ஷ', அதன் கீழ் பிறந்தான் கண்ணன் என்று விஷ்ணுவுக்குப் பீஷ்மாச்சாரியார் தந்து பாடிய ஆயிர நாமங்களில் 'அதோக்ஷஜ' என்பதும் ஒன்று, அதாவது அச்சு மரத்தடியில் அவதரித்தவன் என்று.

இந்த அச்சு மரத்தடியில் மற்றொருவர் அவதரித்தார் தமிழ்க் கவிக் காதலர் டி.கே.சி. என்ற பெயரைப் பெற்ற மகான் சிதம்பரநாத முதலியார் அவர்கள். ஸ்ரீஜயந்தி என்றால், கண்ணன் பிறந்த நாள், டி.கே.சி. பிறந்த நாள் என்றும் தமிழர் கொண்டாடும் நாள்.

கல்கி 10.9.1967

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி ஆடி—32

மலர் 12 இதழ் 4

16—8—1981

# கோவையில் மாண்புமிகு முதல்வர்



22.7.81 அன்று கோவையில் கோவை மாநகராட்சி துவக்கவிழா நடைபெற்றது. மாநகராட்சியைத் துவக்கி வைத்து மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரை யாற்றினார். அவர் உரையில் குறிப்பிட்ட தாவது.

''கோவை மாநகராட்சி'' ஆக்கப்பட்ட இதன் தொடக்கவிழா நடந்து கொண்டு இருக்கிறது என்பதை விட நடந்து முடிந்து விட்டதுஎன்பதை குறிப்பிடவிரும்புகிறேன். பெயர்ப் பலகையைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்தன. எத்தனையோ பேர் பேசுகிறார்கள். இதில் பல்வேறு உண்மைகள் உள்ளன. நாம் எத்தனை மணி நேரம் பேசினாலும் தொழிலாளர்களும், வியாபாரிகளும், மாணவ-மாணவிகளும் சிந்தித்துப் பார்த்தால்தான் இதன் உண்மையை உணர முடியும்.

"மாணவிகள் கொளுத்தும் வெயிலில் நின்று என்னை வரவேற்றார்கள்.

"அப்படிப்பட்டவர்கள் படித்து முடித்து வேலை இல்லாது அலையும் காட்சியைக் காணும்போது அவர்களது பெற்றோர் மனம் என்ன பாடுபடும். அந்தக் குழந்தைகள் வாழ்வு வளம்பெற இந்த அரசு உதவ தயாராக இருக்கிறது.

"அறிவு, ஆற்றல் எங்கெங்கு இருந்தாலும் அதற்கு வாய்ப்பு கொடுத்தாக வேண்டும்.

"தமிழ்நாட்டில் மாணவர்கள் காப்பி அடிப்பதைக் கண்டுபிடித்தால் கோபம். பேருந்துக்கு ஆபத்து. மாணவர்களின் இந்த செய்கையை ஊக்குவிப்பவர்கள் யாராக இருந்தாலும் தங்களது வாழ்க்கை உயர்வுக்காக செய்கிறார்களே தவிர வேறுஅல்ல, முடிந்த பரீட்சை முடிவுகளைப் பார்க்கும் போது ஆண்களை விட பெண்கள் தான் அதிகமாகத்தேறி இருப்பது தெரிகிறது.

"அறிவியல் துறையில் போட்டி வேண்டும். ஆற்றலுக்கு முதலிடம் தரப்பட வேண்டும். ஆற்றல் இல்லாதவர்களுக்கு அது கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

"பின்தங்கிய மாணவர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்க ஆசிரியர்களை நியமித்து அவர்களை முன்னேற்ற தமிழக அரசு முற்படும்."

இந்த விழாவில், 1,119 பேருக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டது. 40 முதியோர்களுக்கு ஒய்வு ஊதியமும், 7 பெண்களுக்கு தையல் எந்திரங்களும், 51 சலவை தொழிலாளர்களுக்கு சலவைக் கருவிகளும் 42 சவர தொழிலாளர்களுக்குச் சவர தொழிலுக்கான கருவிகளும் அரசின் சார்பில் கொடுக்கப்பட்டன.

இதுதவிர உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள்களும், 13 பேருக்கு காது கேட்கும் கருவிகளும், 16 தொழிலாளர்களுக்கு கிணறு வெட்ட தேவையான கடப்பாரை கருவிகளும் வழங்கப்பட்டன.

விதவைகளின் குழந்தை 406 பேருக்கு பாடப்புத்தகங்களும், 20 பேருக்கு கறவை மாடுகள் வாங்க அரசின் உதவித்தொகைகளும், 155 பேருக்கு நூதன விவசாய கருவிகளும் வழங்கப்பட்டன. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.


கோவை மேட்டுப்பாளையம் ரோட்டில் உள்ள உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இல்லத்துக்கு 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது.

கோவை வழக்குரைஞர்கள் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வருக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது.

முதல்வர் "சட்டத்தை உருவாக்குவது சட்டமன்றம், ஆனால் அதற்கு இலக்கணம் வகுத்துக்கொடுப்பது நீதிமன்றம். சாதாரண மனிதனுக்கும் சட்டத்தைப் பற்றி தெரியவேண்டும். அது தெரிந்த மொழியாக இருக்கவேண்டும்.

அத்துடன், நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும். அவர்கள் வழங்கும் தீர்ப்பை தடுப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். சட்டத்தின் மூலம் சமுதாயத்திற்கு பாதுகாப்ப இருக்க வேண்டும்." என்று குறிப்பிட்டார்.

அன்று மாலை பி.எஸ்.ஜி. கன்யா குருகுலத்தில் $2\frac{1}{2}$ இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை தமிழக முதல்வர் திறந்து வைத்தார். பிறகு ஒரு தென்னங்கன்றை நட்டு, மரம் வளர்ப்பு திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.



# மின் துறையின் புதிய திட்டங்கள்

## மாண்புமிகு மின் துறை அமைச்சர்
## திரு எஸ். இராமச்சந்திரன்

மனித வாழ்க்கைக்கு மின் வசதி இன்றியமையாதது. தமிழகம் முழுவதும் இவ்வசதியைத் தருவது மின்சார வாரியம். இந்தத் துறையில் இந்தியத் துணைக்கண்டத்தில் குறிப்பிடத்தக்க பெரிய மாநிலங்களில் சிறப்பிடத்தைப் பெறுவது தமிழ்நாடு. தங்குதடையின்றி வேண்டுமளவிற்கு இவ்வசதியை தமிழக மக்களுக்கு தருவதே மின்வாரியத்தின் தலையாய நோக்கமாகும்.

தமிழகத்தில் சுமார் 41 இலட்சம் மின் இணைப்புகள் உள்ளது. மின்சக்தியைப் பல்வேறு பணிகளுக்குப் பல்வேறு வகைகளில் பயன்படுத்தம் பயனீட்டாளர்கள் அனைவரையும் திருப்திபடத்தக்க விதத்தில் மின்வாரியத்தை இயக்குவதென்பது எளிதல்ல. எனினும் கடந்த மூன்று ஆண்டுகளில் கணிசமான வெற்றியை இவ்வகையில் பெற்று வருகிறோம். சென்ற ஆண்டு ஏற்பட்ட பற்றாக்குறையை முப்பது விழுக்காடு மின்வெட்டு எனும் அளவில் நிறுத்தி நிர்வகித்ததன்மையைப் பாராட்டாதார் எவருமிலர். இப்பெருமை மின்வாரிய நிர்வாகத்தினரையும், பணியாளர்களையும் சாரும்.

மின் பயனீட்டாளர்களுக்கு முழுத் திருப்தி ஏற்பட, புதிதாக மின்வசதி வேண்டுவோர்க்கு புதிய மின் இணைப்புகளை வழங்கிட, இருக்கின்ற மன் உற்பத்தித் திட்டங்க்ள் போதா. புதுப்புது திட்டங்கள் இன்றியமையாதவை. புனல் மின் திட்டங்கள், அனல் மின் திட்டங்கள், அணு மின்திட்டங்கள் ஆகியவற்றின் மூலமே மின் உற்பத்தியைப் பெருக்க முடியும். மற்ற மாநிலங்களைப் போலல்லாமல் தமிழகம் புனல் மின் திட்டங்களைப் பெருமளவிற்கு நிறைவேற்றியுள்ளது. எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவை மிகச் சிலவே. கருநாடகமும் தமிழகமும் இணைந்து நிறைவேற்ற வேண்டிய, காவிரிப் படுகையில் அமைந்துள்ள ஒகேனேக்கல் நீர் மின் திட்டம் இவற்றுள் மிக முக்கியமான ஒன்று. இது குறித்து தமிழக அரசு கருநாடக அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற கொள்கையளவில் கருநாடகம் ஒப்புக்கொண்டுள்ளது. விரிவாகவும், விளக்கமாகவும் பேசிட கருநாடக முதல்வரை தமிழக முதல்வர் அழைத்துள்ளார். கருநாடக முதல்வர் இவ்வழைப்பினை ஏற்று விரைவில் சந்தித்துப் பேசிட வருவார் என எதிர்பார்க்கிறோம். இத்திட்டத்தின் மூலம் சுமார் 800 மெகாவாட் மின்சக்தி, 640 கோடி ரூபாய் செலவில் கிடைக்கும். பற்றாக்குறை மாநிலங்களான கருநாடகமும், தமிழகமும் இதன்மூலம் பலன் பெறும்.

இதற்கிடையில், இந்திய அரசு தம் சொந்தப் பொறுப்பில் இத்திட்டத்தை நிறைவேற்றிட முன்வந்துள்ளது. இதற்கான கடிதப் போக்குவரத்துக்களை இந்திய அரசு இரு மாநில அரசுகளுடனும் நடத்தி வருகிறது. இந்தியா முழுவதும் பல்வேறு புனல் மின் திட்டங்களை நிறைவேற்றி வரும் இந்திய அரசு, தென்னகத்தில் ஒரு திட்டத்தைக் கூட நிறைவேற்றவில்லையே என்கிற குறையைப் போக்குகின்ற வகையில், ஒகேனேக்கல் நீர்மின் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு முன்வந்துள்ளது. தமிழக அரசு இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. கருநாடக அரசும் ஒகேனேக்கல் நீர்மின் திட்டத்தை, இந்திய அரசு நிறைவேற்ற ஒத்துழைக்கும் என நம்புகிறோம்.

பாண்டியாறு புன்னப்புழா, சோழத்திப்புழா, மேல் அமராவதி, சண்முகாநதி, நெல்லித்துறை, பார்சன்ஸ் பள்ளத்தாக்கு ஆகிய புதிய புனல் மின்திட்டங்கள் கேரள அரசின் சம்மதத்துடன் நிறைவேற்றப்பட வேண்டியவை. அண்மையில் சென்னையில் கேரள மாநில அமைச்சருடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் சுமுகமாக சூழ்நிலையில் நடைபெற்றன. மீண்டும் கூடிப்பேசி முடித்திட உள்ளோம். இதன்மூலம் சுமார் 300 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கும்.

அனல் மின் திட்டங்களைப் பொறுத்தவரை தமிழகத்திற்கு உள்ள வாய்ப்பு நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் படுகையாகும். நெய்வேலி அனல் மின்திட்டத்தின் மூலம் ஏற்கனவே கிடைக்கும் 600 மெகாவாட் மின் சக்தி முழுவதையும் தமிழகம் பயன்படுத்துகிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு இந்திய அரசு அனுமதியளித்

துள்ளது. அதனை ஒட்டி மேலும் 630 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது அனல் மின் திட்டம் அமைக்கப்பட உள்ளது. இந்த உற்பத்தித் திறன் முழுவதையும் தமிழகம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என இந்திய அரசு கடந்த காலங்களில் வற்புறுத்தியதன் அடிப்படையில் தமிழகம் ஒப்புதல் தந்துள்ளது. எனினும் இப்பொழுது நெய்வேலி இரண்டாவது கட்ட உற்பத்தித் திறன் 630 மெகாவாட்டில், எல்லா தென்மாநிலங்களுக்கும் பங்குபோட்டு பிரித்துத்தரப்படும் என மத்திய அரசு தாக்கீது அனுப்பியுள்ளது.

இதன்படி, 630 மெகாவாட் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த தமிழகத்திற்கு 176 மெகாவாட்தான்கிடைக்கும்நம்மைப்பொறுத்த வரையில் இது அதிர்ச்சி தரத்தக்கது.

இந்திய அரசுடன் தமிழக அரசு ஏற்கனவே செய்து கொண்டுள்ள உடன் பாட்டிற்கு இது முற்றிலும் முரணானது.

மேலும் இந்திய அரசின் மின் ஆய்வுக் குழு அறிக்கையின்படி, தென்னகத்தில் தமிழகம் ஒன்றுதான் தொடர்ந்து பற்றாக்குறை மாநிலமாக இருக்குமென்றும், தென்னகம் முழுவதும் ஏற்படும் பற்றாக்குறைக்கு, மிகப் பெரிய காரணமாக தமிழகம் விளங்கும் என்றும் அறிவித்து உள்ளது. ஆகவே நெய்வேலியில் இரண்டாவது கட்ட மின் உற்பத்தியான 620 மெகாவாட் தமிழகத்திற்கே முழுதும் கிடைக்கப் பெறல் வேண்டும். அப்படி கிடைத்தும் கூட பற்றாக்குறை தமிழகத்தில் தொடரும் என்பதும் கவனிக்கத்தக்கது. இந்நிலையை மாண்புமிகு பாரதப் பிரதமர் திருமதிஇந்திரா காந்தி அவர்களின் நேரடி கவனத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த மாதம் கடிதம் மூலம்கொண்டு வந்துள்ளார். பாரதப் பிரதமர் அவர்கள், நிலைமை உணர்ந்து தமிழகத்தின் மின்சார நெருக்கடியைப் போக்க, நெய்வேலி இரண்டாவது மின் திட்டத்தின் பலன் முழுவதும் தமிழகத்திற்கே கிடைக்க நிச்சயமாக முன் முயற்சிகளை மேற்கொள்வாரென நாம் எதிர் பார்க்கிறோம். இது குறித்து விரைவில் பாரதப்பிரதமரிடம் தமிழக முதல்வர் நேரிலும் பேசிட இருக்கிறார்.

அடுத்து வெளி மாநிலங்களில் இருந்து வரும் நிலக்கரி கொண்டு மின்தேவையை நிறைவேற்ற மேலும் சுமார் 2,000 மெகா வாட் உற்பத்தித் திறன் அளவிற்கு அனல் மின் திட்டங்களைத் தீட்டி அவற்றைக் கால தாமதமின்றி நிறைவேற்றிட உள்ளோம். 630 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம் மேலும் 710 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி அனல்மின் திட்டம், 630 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின்திட்டம் 110 மெகா வாட் திறன்கொண்ட பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம் ஆகியவற்றை சுமார் 1,200 கோடி ரூபாய் அளவில் நிர்மாணித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அணுமின் நிலையங்களைப் பொறுத்த வரையில் 235 மெகாவாட் திறன் கொண்ட கல்பாக்கம் திட்ட முதல் கட்டம் அடுத்த ஆண்டில் மின் உற்பத்தியைத்துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னகத்தில் ஒரு அணுமின் நிலையம் வரக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வணுமின் நிலையத்தை தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டத்தில் கூடன்குளம் எனும் ஊரில் அமைத்திட அனுமதி வழங்கிட வேண்டுமென பாரதப்பிரதமர் அவர்களை தமிழக முதல்வர் அவர்கள்நேரில் வேண்டியுள்ளார் என்பதை நினைவு கூரத் தக்கது.

இத்திட்டங்களை எல்லாம் இந்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்று நிறைவேற்றி வைப்பதன் மூலமே வளர்ந்து வரும் மின் தேவைகளை ஓரளவிற்காவது தமிழகத்தில் நிறைவு செய்ய இயலும்.

இதுவன்றி சூரிய ஒளியிலிருந்து மின்சக்தியைப் பெறுவது, காற்றிலிருந்து மின்சக்தியைப் பெறுவது, கடலின் வெப்ப ஏற்றத் தாழ்வுகளை வைத்து மின்சாரம் எடுப்பது, கடல் அலைகளிலிருந்து மின்சாரம் எடுப்பது, சாண எரிவாயுவிலிருந்து மின்சாரம் எடுப்பது போன்ற புதிய முறைகளிலும் மின்வாரியம் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.

இச்சூழலில், மின்வாரியம் தன்னைத் தானே நிர்வகித்துக்கொள்ளும் சக்தியை இழந்து வரும் நிலைமை கவலை தருவதாக உள்ளது. பொதுவாக அதன் நிதி ஆதாரங்கள் மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. பெற்ற மின்சாரத்திற்கு உற்ற தொகையை உடனுக்குடன் பயனீட்டாளர்கள் செலுத்தவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். செலுத்தத் தவறினால் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்து மின் துண்டிப்பு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. கட்டணம் செலுத்தத் தவறினால் மின் துண்டிப்பு, மின் துண்டிப்பு செய்து ஆறுமாதமானால் மின் சார லயனை அறவே அகற்றுதல் என்று ஏற்கனவே உள்ள சட்டவிதிகள் விருப்புவெறுப்பின்றி செயல்படுத்தப்படும்.

மேலும் ஏறிவரும் விலைவாசி உயர்விற்கு ஏற்ப கட்டண உயர்வு இன்றியமையாதது ஆகிறது. குடிசை வாழ்மக்களைத் தவிர மற்ற பிரிவினர் அனைவரும் ஓரளவிற்கு தாங்கக் கூடிய சக்தி படைத்தவர்களே! எனவே அன்றாடச் செலவுகளைக் கூட சரிக்கட்ட முடியாத நிலையில் உள்ள மின்வாரியம், உயர்த்திட எண்ணியுள்ள நியாயமான கட்டண உயர்வை ஏற்று மின்வாரியம் மேலும் செம்மையான முறையில் சேவை செய்திட, ஒத்துழைக்கவேண்டுகிறேன்.

கட்டண உயர்வின் அவசியம் பற்றி மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து வற்புறுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், அண்மையில் டில்லியில் நடைபெற்ற மின்வாரியத் தலைவர்கள் மாநாட்டின் மத்திய நிதியமைச்சர் அவர்கள் இதை மேலும் சுட்டிக் காட்டியுள்ளதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். எவ்வளவிற்கு எவ்வளவு மின்சாரம் நமக்கு பயன்பட வேண்டும் என விரும்புகிறோமோ அவ்வளவிற்கு அவ்வளவு பயனீட்டாளர்களும் மின் வாரியத்திற்கு பயன்பட வேண்டாமா? இன்றுள்ள நிலைமை பயனீட்டாளர்கள் பயனைப் பெறவும், அதனால் மின்வாரியத்திற்கு ஏற்படும் இழப்பை, ஏழைகளின் வரிப்பணம் கொண்டு சரிகட்டுவதுமாக உள்ளது.

வசதியுற்றோரிடமிருந்து வரியைப் பெற்று வசதியற்றோருக்கு வாழ்வளிப்பது தான் ஒரு அரசின் கடமை. மின்வாரியம் இயங்கும் நிலை இதற்கு முற்றிலும் முரணானது. ஆகவே, யார் யார் மின்வசதியைப் பெறுகிறார்களோ, அவர்கள் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தும் வகையில் கட்டண வீதம் திருத்தியமைக்கப்படும். பயனீட்டாளர்கள் முழு ஒத்துழைப்பு நல்கவேண்டுகிறேன்.

**(சென்னை வானொலி 2-8-1981)**

தொழில்களின் வளர்ச்சியில் இம்மாநில அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது; இக் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு, தொழில்கள் பரவலான வகையில் அமைக்கப்பட்டு அந்தந்தப் பகுதி மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. ஏனெனில், அப்போதுதான் கிராமப்புறங்களில் வாழும் ஆதரவற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வில் சீரிய மாற்றமும் முன்னேற்றமும் காணமுடியும். இந்த உயரிய நோக்கத்தை எய்திட அரசு நற்பயன் நல்கிடத்தக்க அணுகுமுறையையே பின்பற்றி வருகிறது.

தொழில்களின் மேம்பாட்டிற்குத் தேவையான அடிப்படை மூலப்பொருட்கள் அல்லது இயற்கை எரிபொருள் ஆதாரங்கள் போதுமான அளவிற்குத் தமிழ்நாட்டில் இல்லாத போதிலும் அண்மைக் காலத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் காணமுடிந்தது. சிறுதொழில்கள் வளர்ச்சியில் வியத்தகு சாதனை எய்த முடிந்துள்ளது.

இரும்பு, எஃகுக் கருவிகள், சிறு அளவுப் பொறியியல் கருவிகள், கணக்கீட்டுக் கருவிகள் அறிவியல் கருவிகள், கண்ணாடி, மட்பாண்டம், மின்சாரம், மின்னணுத் தொழிற்கருவிகள், வேளாண்மைத் தொழிற் கருவிகள், துணைக் கருவிகள், தட்டச்சுப் பொறிகள், கணக்கீட்டு இயந்திரங்கள் முதலியன தயாரிக்கும் துறைகளில் சிறுதொழில்கள் வளர்ச்சி நிறுவனம் பாராட்டத்தக்க சாதனையை எய்தியுள்ளது.


சிறுதொழில்கள் வளர்ச்சிக்கும், கிராமத் தொழில் வளர்ச்சிக்கும் முதன்மை அளிக்கும் போது பெரிய, நடுத்தரத் தொழில்களும் வளர்ச்சிபெற அரசு உரிய முயற்சிகளை எடுத்தும் வருகிறது. பெரிய தொழில்களின் வளர்ச்சி உறுதியான முன்னேற்றம் காணவும் தொடர்ந்து நிலைபெற்றிருக்கவும் அரசு முனைப்பான நடவடிக்கை எடுத்துள்ளது.

1961ல் சிறுதொழில் துறையில் பதிவு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 3000 ஆக இருந்தது. அது 1977 மார்ச்சில் 18,789 ஆக வளர்ந்தது. 1980 அக்டோபர் முடிவில் அந்த எண்ணிக்கை 32,681யை எட்டியுள்ளது. இத்துறையின் மூலம் சுமார் 4 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**மின்சாரம், மின்னணுத் தொழில்**

தமிழ்நாட்டில் சிறுதொழில் துறைகளில் அடங்கியுள்ள மின்சாரம், மின்னணுத் தொழில் பிரிவுகள், மிகவும் நுட்பம் வாய்ந்த பலவகைப் பொருட்களைத் தயாரிக்கின்றன.

மின்பொத்தான் விசைக்கருவி, உள் உறுப்புக் கருவிகள், மின் வழங்கு மின்னியல் விசை மாற்றமைப்புகள், மின்னியல் விசை மாற்றுக் கருவி உறுப்புகள், மோட்டார் மின் பொத்தான் விசைக்கருவி, வீட்டுப் பயனுக்கான மின் துணைக் கருவிகள், மின்சாரக் கருவிகள், மின்சார இரும்புச் சாதனங்கள், மின் கம்பிகள், மருத்துவ மின்னணுக் கருவிகள், மின் வழங்கு கருவிகள், வானொலி ரிசீவர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், கார்களில் பொருத்தப்படும் வானொலிப் பெட்டிகள், விண்வெளி ஆய்வுக்கான கருவிகள் முதலிய நுட்பம் வாய்ந்த மின்சார, மின்னணுத் தொழிற்கருவிகளை இந்த நிலையங்கள் தயாரிக்கின்றன.



# தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி

மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு

மின்னணுத் துறையில் ஏற்பட்ட இத்தகு வளர்ச்சியில் 80 சதவீதம் கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றமாகும். இவைமட்டுமன்றி, இந்துஸ்தான்-டெலிபிரிண்டர்ஸ், இந்தியன் டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ், விண்வெளி ஆய்வு நிலையம் முதலிய பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் துணைக் கருவிகள், மிகச் சிறந்த தொழில்நுட்ப அறிவுபெற்ற தொழிலதிபர்களால் நடத்தப்படும் தொழிற்பிரிவுகளில் தயாரிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் உருவாக்கப்படும் கட்டுப்பாட்டு மின்னணுக் கருவிகள், எஃகுத் தொழிற்சாலை, உரத்தொழிற்சாலை நெசவு ஆலைகள், அணுத் தொழிற்சாலைகள் முதலியவற்றில் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. என்பது பெருமைப்படத்தக்க செயலாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சிறுரக மின்னணுத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மிகவும் நுட்பம் வாய்ந்த கருவிகள், நாட்டின் மின்னணுக் கருவிகள் பயன்படும் நுட்பம்மிக்க தொழிற்பிரிவுகள் யாவற்றிலும் பயன்படுகின்றன. சுரங்க மின்னணுவியல், வேளாண்மை மின்னணுவியல் முதலியவை சம்பந்தப்பட்ட கருவிகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மேலும் சில தொழிற்பிரிவுகள் அடுத்த இரண்டுஆண்டுகளில் மேலும் முன்னேற்றம் காணவிருக்கின்றன.

தமிழ்நாட்டில் மின்னணுவியல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அம்சங்களில் மிக முக்கியமானது, அடிப்படை மின்னணுவியல் தொழிற்கருவிகள் தயாரிப்பிற்கு ஊக்கம் அளிப்பதுடன் அடையாறு, ஒசூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள தொழில் நிலையங்களில் மின்னணுவியல் நுண்மத்தொகுதி உருவாக்கத்தை மேலும் விரிவுபடுத்தச் சீரான முறையில் பிற துணைக்கருவிகளும் உள் உறுப்புகளும் செய்யப்படுவதற்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படுகின்றன.

இம்மாநிலத்தில் மின்னணுவியல் அது தொடர்பான தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றவும் வளர்ச்சி பெறச் செய்யவும் தமிழ்நாடு மின்னணுக் கழகம் என்ற பெயரில் தனியாக ஒரு கழகத்தை அரசு நிறுவியுள்ளது.

**இரசாயனத் தொழில்:**

இந்திய நாடு முழுவதும் இரசாயனத் தொழிலின் வளர்ச்சி எப்படி அமைந்துள்ளதோ அதுபோன்றே தமிழ்நாட்டிலும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் பெருரகத் தொழில் துறையில் இரசாயனத் தொழில்கள் குறிப்பாக 'ஆல்கஹால்' அடிப்படைத்தொழில்கள்-வேளாண்மை அடிப்படையிலானதொழில்கள், கனிம அடிப்படையிலான தொழில்கள், அடிப்படை மருந்துப் பொருள் தொழில்கள், பூச்சிக் கொல்லி இரசாயனத் தொழில்கள் முதலியவை மேலும் வளர்ச்சியடையவதற்கு மிகச் சிறந்த வாய்ப்பு உள்ளது.


*1972*ல் எடுக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் கணக்கெடுப்பு பற்றிய அகில இந்திய அறிக்கையின்படி, நாட்டில் பதிவு செய்யப்பட்ட தொழில் அலகுகளின் மொத்த எண்ணிக்கை *139, 577* ஆகும். இதில் இரசாயனத் தொழில் அலகுகள் *11,837* ஆகும். பதிவு செய்யப்பட்ட தொழில் அலகுகளில் இது *8.5* சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் இந்த சதவீத அளவு *10* ஆகும். பதிவு செய்யப்பட்ட மொத்த தொழில்அலகுகள் *16,002*. இரசாயனத் தொழில் அலகுகள் *1608* ஆகும்.

இரசாயனம் சார்புடைய உணவுப் பொருட்கள், ஊட்டச்சத்துப் பொருட்கள் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் சம்பந்தமான தொழில்களையும் கணக்கில் கொண்டால்-தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள *16,002* தொழில்கள் அலகுகளில் இரசாயன சார்புடைய சிறுதொழில்களின் எண்ணிக்கை *5473*ஆக இருக்கின்றது. மொத்தத்தில் இது *34* சதவீதமாகும்.

**தீப்பெட்டித் தொழில்**

*1977-78*ல் தமிழ்நாட்டில் *2,200* தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருந்தன. *1981* மார்ச் முடிவில் இது *3000*ஆக உயர்ந்துள்ளது. *1978*-ல் *17* சங்கங்கள் இருந்தன. இப்போது *69* சங்கங்கள் இருக்கின்றன. *20,000*பேருக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய வகையில் *1980 81*-ல் *6* தீப்பெட்டித் தொழிற்கூட்டுறவுப் பணிச்சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. அரசு நிதி உதவியின்றி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யும் திட்டத்தின்கீழ் *11* சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன.



**தோல் தொழில்**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தோல் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு வேலைவாய்ப்பளிக்கக்கூடிய இந்தப் பழமையான தொழில்-வேலைவாய்ப்பளிக்கக்கூடியதாகவும் வெளிநாட்டு ஏற்றுமதித் தொழில்களின் வரிசையில் இடம் பெறத்தக்கதாகவும் இருக்கின்றது.

*1975-76*ல் ரூ. *185* கோடி மதிப்புள்ள தோல் மற்றும் தோல் சம்பந்தமான பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. *1979 -80*ல் இது ரூ. *425.38* கோடியாக உயர்ந்தது.

இதில் தமிழ்நாட்டின் பங்கு *1975-76*ல் ரூ. *134* கோடியாகவும், *1979-80*ல் *309.47* கோடியாகவும் இருக்கின்றது. பதனிடப்பட்ட கிழக்கிந்திய தோல் எனப்படும் தோல்களுக்குத் தமிழ்நாடு பேர் பெற்றது.

இந்தியாவிலுள்ள *800* தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் *400* தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாட்டில் தோல் மற்றும் தோல் பொருட்கள் வர்த்தகத்தில் தமிழ்நாட்டிலுள்ள இத்தொழிற்சாலைகளே பெரும்பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் சென்னை, செங்கல்பட்டு திருச்சிராப்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை (வ.ஆ.) ஈரோடு, திண்டுக்கல் ஆகிய இடங்களில் பெருரக மற்றும் சிறுதொழில் துறைகளில்

தோல் பதனிடும் தொழிற்சாலைகள அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் இருந்து ரூ. 200 கோடி மதிப்புள்ள பதனிடப்பட்ட கிழக்கிந்தியத் தோல் எனப்படும் தோல்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வாணியம்பாடியில் உள்ள தோல்நிறைவு செய்யும் தொழிற்கூட்டுறவுச் சங்கம்-சிறு அளவில் தோல் பதனிடுவோருக்கு உதவுகின்றது.

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ராணிப்பேட்டையில் ஒன்றும்-மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில் ஒன்றும் துவக்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் ஒன்றும், வடார்க்காடு மாவட்டம் பேரணாம்பட்டில் ஒன்றுமாக மேலும் இரண்டு சங்கங்கள் விரைவில் துவக்கப்பட விருக்கின்றன.

1964 ஜூலையில் 24 சிறிய அளவிலான தோல் தொழில் அலகுகளைக் கொண்ட தொழிற்பேட்டை மாதாவரத்தில் முதன்முதலில் துவக்கப்பட்டது.

பதனிடப்பட்ட தோல், தோல் சம்பந்தமான பொருட்கள், காலணிகள் மற்றும் ரப்பர் சம்பந்தமான பொருட்களை இத்தொழில் அலகுகள் உற்பத்தி செய்கின்றன.

தற்போது இந்தத் தொழிற்பேட்டை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகின்றது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தோல் நிறைவு செய்யும் தொழிற்சாலை ஒன்றினை விண்ண மங்கலம் என்ற இடத்தில் நடத்தி வருகின்றது.


### கயிறு தொழில்

இந்தியாவிலேயே தென்னை உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், தென்னை பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவைப் பொறுத்தவரை மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றது. 108, 900 எக்டேரில் தென்னை பயிரிடப்பட்டு, ஆண்டுதோறும் 1094.9 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1979 கணக்கின்படி, 1655 கயிறுத் தொழிலாளர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பளிக்கக்கூடிய 10 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

கயிறுத் தொழிலுக்கு மூலப் பொருளான நார் பிரித்தெடுக்கும் பணியில் 137 கயிறு அலகுகள் ஈடுபட்டுள்ளன.

கயிறு தொழிலில் மொத்த முதலீடு ரூ.220 இலட்சமாகும். ஆண்டுதோறும் 66,400 மெட்ரிக் டன் கயிற்று நார் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு முழுவதும் 30,000 ஆண்-பெண் ஊழியர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். கயிறுகளின் விற்பனையிலுள்ள கிராமப்புறங்களில் கயிறுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் 3000பேருக்கு இந்த அலகுகள் ஒரு வரப்பிரசாதமாகும். இந்த நார் விற்பனையிலுள்ள இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகத் தமிழ்நாடு மத்திய



கயிறு விற்பனை தொழிற்கூட்டுறவு சங்கம் தஞ்சாவூரில் துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 14,000 மெட்ரிக் டன் எடையுள்ள வெள்ளை நார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது.

1980-81ல் பழுப்பு நார்த் துறைக்கு 6ம் வெள்ளை நார்த் துறைக்கு 4ம் ஆக 10 கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான திட்டத்தை அரசு அங்கீகரித்துள்ளது. இதில் அரசின் பங்கு மூலதனம் 10 இலட்சமாகும். இயந்திரம் வாங்குவதற்குக் கடனாக மேலும் ரூ. 4.70 இலட்சம் வழங்கியுள்ளது. இந்த 10 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனைத் தவிர, வேறு ஒரு சங்கமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த 11 சங்கங்களில் இரண்டு சங்கங்கள் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களின் நலனிற்காக மட்டும் செயல்படவிருக்கின்றன.


இச்சங்கங்களின் மூலம் கூடுதல் வேலை வாய்ப்பு 1,100 தொழிலாளர்களுக்குக் கிடைக்கும். அவற்றில் 10 சதவீத அளவினர் தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பார்கள்.

### தொழிற் கூட்டுறவுகள்

1977 வரை, 23,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக்கூடிய 294 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. அவை உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பு ரூ. 1053 இலட்சமாகும். விற்பனை செய்த பொருட்களின் மதிப்பு 1297 இலட்சமாகும்.

1979-80 இத்தகைய சங்கங்களின் எண்ணிக்கை 559 ஆக உயர்ந்தது. உற்பத்தி மற்றும் விற்பனையின் அளவு முறையே ரூ.2,874.25 இலட்சம். 2489.33 இலட்சம் என்ற அளவில் வளர்ந்தது. இந்தச் சங்கங்களின் மூலம் 91,000 பேர்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.

தமிழ்நாட்டில் 6190 தேயிலை உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 12 தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.



1979-80ல் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ. 719.10 இலட்சம் மதிப்புள்ள தேயிலைகளை விற்பனை செய்துள்ளன.

**மாவட்ட தொழில் மையங்கள்**

மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 14 மாவட்டங்களிலும் 4700 சிறு அளவிலான தொழில் அலகுகளில் உற்பத்தி தொடங்கி 40,000 பேர் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். இந்த மையங்கள் வங்கிகள் மூலமாக ரூ. 577 இலட்சங்களை நிதியுதவியாகப் பெற்று 2360 சிறு தொழில்களுக்கு வழங்கியுள்ளது.

**உப்புத் தொழில் :**

உப்பு உற்பத்தியில், இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. தூத்துக்குடியிலுள்ள உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிலையம்-பீவாநகரிலுள்ள மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தோடுதொடர்புகொண்டு தமிழ்நாட்டில் உப்புத் தொழிலைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. உப்புத் தொழில் மற்றும் உப்பு சார்பான இரசாயனத் தொழில்களின் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு உப்புக் கழகம் பெருந்தொண்டாற்றி வருகின்றது.

**மிகச்சிறிய தொழில்துறை**

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் சிறிய தொழில்துறை அதிக அளவில் துவக்குவதற்கு ஏதுவாக 700 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கக் கூடிய சிறு தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன

தொழில் உற்பத்தியின் குறியீட்டுஅளவு 1977ல் 140.5 ஆக இருந்தது. 1978ல் அது 164.1 ஆக உயர்ந்தது. தொழில்துறையில் உற்பத்தியின் அளவு 16.8 சதவீதத்திற்கு வளர்ச்சி பெற்றது.

சிமெண்ட் உற்பத்தி 1977ல் 5.9 சதவீதம் குறைவாக இருந்தது. 1978ல் 10 சதவீதம் அதிகரித்தது. பொது தனியார் கூட்டுறவுத் துறைகளிலுள்ள நூற்பாலைகளில், நவீனமயமாக்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்தவும், புதிய நூற்பாலைகளைத் துவக்கவும், இருக்கின்ற ஆலைகளை விரிவுப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1978-79ல் மட்டும், 572810 கதிர்களைக் கொண்ட புதிய நூற்பாலைகள் துவக்கப்பட்டுள்ளன. நாட்டின், சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு. 1977-78ல் 7.23 சதவீதமாகும். 1975-76ல் இது 4.22 சதவீதமாகவும், 1976-77ல் இது 6.85 சதவீதமாகவும் இருந்தது. கரும்பு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி கண்டு இருக்கின்றோம். 1978-79ல் உற்பத்தி செய்யப்பட்டுள்ள கரும்பின் அளவு 179.2 இலட்சம் டன்னாகும். 1975-76ல் இது 119.36 இலட்சம் டன்னாக இருந்தது.

அதனுடைய திறனைப் பயன்படுத்துவதில் வியக்கத்தக்க அளவிற்கு வளர்ந்துள்ளது. 1975-76ல் 38 சதவீதமாக இருந்தது, 1978-79ல் (சர்க்கரை ஆண்டு) 84 சதவீதமாக உயர்ந்தது.

அரைவை செய்யப்பட்ட கரும்பின் அளவும், சர்க்கரை உற்பத்தியும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளன. 1978-79ல் அரைவை செய்யப்பட்ட கரும்பு 19.69 இலட்சம் டன்; சர்க்கரை உற்பத்தி 1.80 இலட்சம் டன்னிலிருந்து 4.921 இலட்சம் டன்னுக்கு அதிகரித்துள்ளது.

தமிழகத்திலுள்ள தொழில் சார்ந்த கனி வளத்தை வியாபார ரீதியில் நன்கு பயன்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு கனிம நிறுவனமும், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனமும் செயலாற்றி வருகின்றன. இந்நிறுவனம் கரும்பாறை மற்றும் சாம்பல் நிறப் பாறைகளை வெட்டி எடுத்துப் பயன்படுத்துவது தவிர, தொழில் சார்ந்த கனிமங்களாகிய சுண்ணாம்புக்கல்,வெங்கக்கற்கள்,பெல்ட்ஸ்பார், வெளிர்சிகப்பு, வெங்கக் கற்கள், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் ஆகியவற்றை வெட்டியெடுப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறப்புமிகு தொழில் வளர்ச்சிக்கு மூல காரணமாக அமைந்தவர் எங்கள் அருமைத் தலைவரும் திறன்மிகு முதலமைச்சரும் ஆகிய மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் ஆவார். அவரது அரும்பெரும் முயற்சிகள் இன்றேல், தமிழகம் இந்தளவு தொழில் முன்னேற்றம் கண்டிராது. அவரது மனிதாபிமான அணுகுமுறை மிகச்சிறந்த பயன் அளித்து வருகிறது. தொழிலாளர் நலனிலும் தொழில் வளர்ச்சியிலும் அவர் கடைப்பிடிக்கும் சீரிய அணுகுமுறையின் விளைவாக, தொழிலாளர் அமைதியும், தொழில் முன்னேற்றமும் இங்கு நிலவுவதுடன், பொதுத் துறையிலும் தனியார் துறையிலும் தொழில்கள் மேம்பாடு காணும் நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளது.



# கவிமணியின் வாழ்த்து

**1953-ஆம்** ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாளில் குற்றாலத்தில் சேதுமாளி கையில் டி.கே.சி. அவர்களின் 'கம்பர் தரும் இராமாயணம்' பால காண்டம்-அயோத்தியா காண்டம் இரண்டாம் பதிப்பின் அரங்கேற்று விழா அந்நாளைய முதல்வர் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையில் நடை பெற்றது. அவ் விழாவையும் டி.கே.சி. அவர் களையும் பாராட்டி கவிமணி தேசிக விநாய கம் பிள்ளை அவர்கள் வாழ்த்தனுப்பியிருந் தார்கள். அதுவருமாறு:

கம்பன் கவியின் கனியமுதம் ஊட்டிநம்மை
அம்புவியில் தேவராய் ஆக்கிடுவோன் —நம்பெரியன்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பர நாதநண்பன்
சந்ததம் வாழ்க தழைத்து.

பாடிப் படித்தமுதம் பாவில் வடித்தெடுத்து
நாடி நமக்குதவும் நல்லறிஞன்-நீடுபுகழ்
செய்ய குணசீலன் சிதம்பர நாதவள்ளல்
வையமிசை வாழ்க மகிழ்ந்து.

பாவின் சுவையறிந்து பாவலரைப் பாரறிய
ஆவலொடு போற்றும் அருளாளன்-மேவு மன்பர்
சித்தம் மறவாச் சிதம்பர நாத வள்ளல்
நித்தமும் வாழ்க நிலத்து.

(ஆதாரம் 'மலரும் மாலையும்')

**ரசிகமணி எழுதிய நூல்கள்**

**கம்பர் தரும் இராமாயணம்**
3 தொகுதிகள்
- கம்பராமாயணப் பதிப்பு

**முத்தொள்ளாயிரம்**
- விளக்கவுரையும் முன்னுரையும்

**இதய ஒலி**
- இலக்கியக் கட்டுரைகள்

**கம்பர் யார்?**
- திறனாய்வுக் கட்டுரைகள்

**அற்புத ரசம்**
- வானொலிச் சொற்பொழிவுத் தொகுப்பு



# ரசிகமணி டி.கே.சி

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ஆம் நாள் அன்று திருக்குற்றாலத்தில் டி. கே. சி. யின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தைத் தமிழக அரசு தொடங்கி வைக்கிறது. இந்தக் கொண்டாட்டத்தினால் நமக்கு என்ன பயன் என்று சற்று ஆராய்வோம்.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னால், ''ரசிகமணி டி. கே. சி.யின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசே கொண்டாடப் போகிறது'' என்று அறிவித்த போது, தமிழகத்திலுள்ள எல்லா ரசிகர்களும் மகிழ்ச்சியினால் பூரிப்படைந்தார்கள். முதல்வர் அவர்களுடைய பேச்சில் டி.கே.சி.யைப் பாராட்டுவதற்கான காரணங்களில் இரண்டு சுட்டிக்காட்டப்பட்டன. முதலாவது காரணம் என்னவென்றால், ''இதுதான் கம்பன் பாடல், இது கம்பன் பாடலாக இருக்க முடியாது'' என்று டி.கே.சி.யைத் தவிர எந்தத் தமிழனாவது துணிச்சலோடு சொல்ல முடிந்ததா? டி. கே. சி. யின் வாழ்க்கையிலிருந்து தமிழர்கள் முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டியது இந்தத் துணிச்சல்தான்''. இரண்டாவது காரணம் என்னவென்றால், ''பல ஆண்டுகளாகக் ''கல்கியில்'' ரசிகமணி டி. கே. சி. கம்பராமாயணத்தை எடுத்துத் தமிழர்களுக்கு விளம்பவில்லையென்றால், கம்பராமாயணம் இருக்கும் இடமே தெரியாது மறைந்திருக்கும்.

மாண்புமிகு தமிழகச் செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் தம் பேச்சில், ''ரசிகமணிகடிதங்களி''லிருந்து ஒரு மேற்கோளை எடுத்துக் காட்டி, ''தமிழனுக்குத் தமிழே துணை'' என்று ரசிகமணி சொன்னதைப் போல வேறு எந்தத் தமிழனாவது சொன்னதுண்டா என்ற கேள்வியை எழுப்பி, ரசிகமணிக்கு இருந்த தமிழ்ப்பற்று எவ்வளவு ஆழமாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

கொறநாட்டுப் புடவையை வெறுங் கையாலேயே முழம் போட்டு விடலாம். அது பருப்பொருளாக இருப்பதால், தொட்டுப் பார்த்தே அதை எடை போட்டு விடுவோம்; கண்ணால் பார்த்தே, அதன் நீள அகலத்தை நிதானித்து விடுவோம்.

மொச்சைக் கொட்டையை அளப்பதோ அதைக் காட்டிலும் எளிது. தடித் தடியாக வல்லவா இருக்கிறது அது! உரி, உழக்கு, நாழி, பட்டணம், பக்கா என்று எத்தனையோ கருவிகள் வைத்திருக்கிறோம்; அந்தக் கருவிகளைக் கொண்டு, மொச்சைக் கொட்டையை அளந்து, மூட்டை மூட்டையாகக் குவித்துத் தள்ளி விடுவோம்.

ஆனால், சூக்ஷ்மமான பொருட்களை அளக்க வேண்டும் என்றால், கஷ்டப்படத் தான் செய்கிறோம். பண்பாடு, கலை, தத்துவம் என்று சொன்னாலே, நமக்குத் திகைப்பு ஏற்பட்டு விடுகிறது., மொச்சைக் கொட்டை மாதிரி, அவை மசிவதில்லை. நம்முடைய கண்ணை உறுத்துவதுமில்லை. கலையை முழம் போடுவதற்கு நம்மிடம் அளவுகோல் இல்லை. தத்துவத்தையும், பண்பாட்டையும் அளக்கப் பட்டணம் படி கிடையாது. கலையிலுள்ள—சிறப்பாகத் தமிழ்க் கலையிலுள்ள—தெளிவும், ஆழமும் அவ்வளவு நுட்பமாயிருப்பதால் அது நம்மோடு கண்ணாம்பொத்தி விளையாடி விடுகிறது; அதை இனம் கண்டு கொள்ள முடியவில்லை. படித்தவர்களுக்குக்கூட, கலைச்சுவை இன்னது என்று தெரியவில்லை; சுவையுள்ளது எது, சுவையற்றது எது என்று நிர்ணயம் பண்ணவும் முடியவில்லை.

கலையை அனுபவிப்பதற்குப் படிப்பிருந்தால் போதாது! உள்ளுணர்வு வேண்டும். அதோடு, பரிவும், பௌவியமும் வேண்டும். கலையுலகத்துக்குள்ளே பிரவேசிக்க வேண்டும் என்றால், காலிலே போட்டிருக்கும் செருப்பைக் கழற்றிவைத்து விட்டு, 'நான்' என்ற திமிரைக் கொஞ்சம் பம்ம வைத்துக் கொண்டு, மேல் வேட்டியை அரையிலே கட்டிக்கொண்டு, வாலிருந்தால், வாலைச் சுருட்டி வைத்துக் கொண்டு, அதற்குப் பின் தான் கலை வாசலுக்குள் எட்டி அடி வைக்க

லாம்; அல்லாதபக்ஷம், கலையுலகம் வழி திறவாது.

இப்படியெல்லாம் நோன்பிருந்து, மனசைப் பக்குவப்படுத்திக் கொண்டு, கலை உலகத்தினுள் புகுவோமேயானால், ஆணவ மற்ற ஆனந்த நிலை நமக்குக் கிட்டும், இந்த அரிய உண்மையை நேரடியாக எடுத்துக் காட்டினார்கள் ரசிகமணி டி. கே. சி.

தேனுக்குள் விழுந்து வண்டு எப்படி மயங்கிக் கிடக்குமோ, அதைப்போல, தமிழ்ப் பாடல் ஒன்றில் டி. கே. சி. இறங்கி, அதில் முங்கி, மூழ்கி, மணிக்கணக்கிலே அந்தப் பாட லோடு ஒன்றிக் கரைந்து நிற்பார்கள். அதோடு பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் நம்மை யும் அந்த அத்வைத நிலையில் இருத்தி வைக்கும் வல்லமையும் அவர்களிடம் இருந் தது.

டி. கே. சி.யே சொல்லுவார்கள் :—''கலை என்றால் எப்படி இருக்க வேண்டும்? அது நம்முடைய உணர்ச்சி தத்துவத்தில் போய்க் கலந்து நம்மை வேறு வஸ்து ஆக்கி விட வேண்டும். அதனால் நமக்கு வேறு பிறப்பு ஒன்று கிட்டுகிறது. அதுதான் கலை.''

கலையைச் சுவைப்பதெப்படி, சுவைத் துக் கணிப்பதெப்படி என்று தெரிந்து கொள் வதற்கு, ஒரு சுலபமான வழியிருக்கிறது. ரசிக மணியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு, கலையுலகத்தை ஒரு சுற்று, சுற்றி வரவேண்டும். சுற்றி வரும்போது. டி. கே. சி யின் இதயத்தோடு ஒட்டி, நாமும் விஷயங் களை அனுபவிக்க வேண்டும். அவ்வளவுதான்; கலையைச் சுவைக்கும் முறை, நமக்கு எளிதில் கைவந்து விடும்!

முதன்முதலாக, டி. கே. சி. யோடு திருச்சியில் நடந்து கொண்டிருக்கிற, திரு வள்ளுவர் கூட்டத்துக்குப் போவோம். கூட் டத்தில் எட்டுப் பேர் பேசுகிறார்கள். கெட் டிக்காரத்தனமாகவே பேசுகிறார்கள். என்ன இருந்தாலும், அவர்களில் ஒருவராவது நம்மு டைய இதயத்தையோ, வள்ளுவருடைய இதயத்தையோ தொட்ட பாடாக இல்லை.

காரணம் தெரியாமல், ரசிகமணியை ஜாடையாகப்பார்க்கிறோம். மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டே, காரணத்தை விளக்கு கிறார்கள். டி. கே. சி. :—''ஒவ்வொருவருக் கும் திருவள்ளுவர் கெட்டிக்காரர் என்று பட்டது. ஏன்? தாங்கள் நினைத்திருந்ததை அவர் சொல்லி விட்டாராம்! அப்படியானால் கெட்டிக்காரர் அல்லாமல் வேறு எப்படி இருக்கக் கூடும். எந்த விதத்திலோ, அவர் களுக்கு நம்பிக்கை இருந்தது—திருவள்ளுவர் மேல் அல்ல, தங்கள் மேல்தான்.'' டி. கே. சி. யின் விளக்கம் பேச்சாளர்களுடைய குறையை எடுத்துக் காட்டிவிட்டது. தன் மரியாதை மித மிஞ்சிப் போய்விட்டபடியால், அவர் களால் வள்ளுவருக்கு மரியாதை காட்ட முடிய வில்லை. ஆகவே, அவர்களுடைய வாய் வீச்சுக்கெல்லாம் தப்பி ஓடி ஒளிந்து கொள்ளு கிறார் வள்ளுவர்.

அரிஸ்டாட்டில், ப்ளேட்டோ என்று கத்திக்கொண்டு, ஒன்பதாவது பிரசங்கி மேடைமேல் ஏறிப் பேச ஆரம்பித்துவிட்டார். அவரும் வள்ளுவரைப் பற்றிப் பேசுவதாக ஐதீகம். ஆனால், வள்ளுவரைத் தவிர மற்ற ஆசிரியர்கள் தான் அவர் பேச்சிலே அடிக் கொருதரம் தலையைக் காட்டிக்கொண்டிருக் கிறார்கள். வள்ளுவரைப் பற்றிப் பேச்சாள ருக்குக் கவலையில்லை, தான் படித்த அபத்தப் படிப்பையெல்லாம் மாட்டித் தொங்க விடு வதற்கேற்ற 'கோட் ஸ்டாண்டு' என்று குறளா சிரியரை அவர் கருதி விடுகிறார். ஆகவே, மேற்கோள் அருவி திம் திம் என்று குதித்துக் குறளையும், வள்ளுவரையும் ஒரே அமுக்காய் அமுக்கி விடுகிறது. ஒரு குறளையாவது, வாழ்க்கையோடு பொருத்தி அனுபவித்து விட் டால், அதை அழகாகவும், உணர்ச்சியோடும் மற்றவர்களுக்கு விநியோகம் செய்துவிடலாம்.

அப்படி அனுபவிக்காதவர்கள், இரவல் சரக்கை (மேற்கோளை) விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. மேற்கோள் 'நயகரா' வின் கையில் அகப்பட்டுக் கதிகலங்கி நிற்கும் நம்மைப் பார்த்து, டி. கே. சி. உபதேசம் செய்கிறார்கள் :—''பூர்வமான இதர ஆசிரி யர்களைப்பற்றிப் பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. நானே அடிக்கடி ஆங்கில, இத்தாலிய நிபுணர்களை வரவழைக்கத்தான் செய்கிறேன்; விருந்தாளியாக அல்ல, பெட்டி யில் போட்டு வாக்கு மூலத்தை வாங்கிக் கொள்ளத்தான்; வேறொன்றுக்குமல்ல.'' ஒரு உண்மையைத் தெளிவுபடுத்திக் கொண் டிருக்கும்போது, அதற்கு ஊர்ஜிதம் கொடுப் பதற்காக, வேறு போக்கு இல்லையென்றால், மேற்கோளைக் கையாளலாம் என்று தெரிந்து கொண்டோம்.

இனி திருச்சியிலிருந்து புறப்பட்டு, ரசிக மணியின் கையைப் பிடித்துக்கொண்டே திரு வாரூருக்குப் போவோம். அங்கே தமிழ் வளர்ச்சிக் கழக விழா அலங்காரமாகவும், ஆரவாரத்தோடும் நடக்கிறது. ''காந்தி ஜிக்கு ஜே!'' என்று பலர் கத்திக்கொண்டிருக் கிறார்கள். இதையெல்லாம் கேட்ட நமக்கு, ''அடே, தமிழ் வளர்ந்துவிட்டதே'' என்ற மயக்கம் ஏற்படுகிறது. ஆனால், பக்கத்தி லிருக்கும் டி. கே. சி. ''இதெல்லாம் தமிழ் வளர்ச்சியென்று நினைத்து விடாதே'' என்று எச்சரிக்கை செய்கிறார்கள். இங்கே நடக்கும் பேச்சுகளைப் பற்றிய டி. கே. சி. விமர்சனம்



கீழ்க்கண்டவாறு :—''டாக்டர் கிருஷ்ணன் பெரிய நிபுணர். பூமி பிறந்த காலம், சூரியன் பிறந்த காலம் என்ற விஷயமாக உள்ள சில கணக்குகளைத் தமிழில் எடுத்து விளக்கினார். இது எப்படித் தமிழை வளர்த்ததாகும் சீவில்லிபுத்தூர்க்காரன் ஒருவன் மதுரைக்கு வழி இன்னது என்று எடுத்துச் சொல்லி விட்டால், தமிழ், ஆகா! வளர்ந்துவிட்டது. 'ஹே, ஹா, ஹோ' என்று கத்த வேண்டியதுண்டா?

ஆர். கே. சண்முகம் செட்டியாரும், நம் நாட்டுக்கும் இதர நாடுகளுக்கும் உள்ள பொருளாதார விஷயங்களைத் தெளிவாக எடுத்து விளக்கினார். எதில்? தமிழில், அது காரணமாகத் தமிழ் வளர்ந்து விட்டது என்று சொல்ல வேண்டியதுண்டோ ?

இந்த விஷயங்களுக்குத் தமிழ் உபயோகப்படாமல் இருந்தால், அது ஒரு பாஷை ஆகுமா? ஆனால், ஒன்று. தமிழ் வித்வான்கள் எந்த விஷயத்தையுமே தமிழில் விளக்க முடியாதுதான். இடைப் பிறவரல்கள், சிலேடைகள், மடக்குகள், ஆகிய பல அசந்தர்ப்பங்கள் வந்து விழுந்து விஷயத்தைக் குழப்பி விடும்.

'கல்கி' அவர்கள் பேசிய வந்தனோபசாரம், அபாரமாய், ரசமாய், கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாக இருந்தது—''தமிழ் வளர்ந்து விட்டது.''

தமிழ் வளர வேண்டும் என்றால் விஷயத்தைத் தெளிவாகச் சொன்னால் மாத்திரம் போதாது. உணர்ச்சியோடும் அபிநயத்தோடும் தமிழ் மொழி சல்லாபம் செய்ய வேண்டும் என்று டி. கே. சி. பேச்சிலிருந்து தெரிந்து கொண்டோம்.

திருவாரூரிலிருந்து தேரழுந்தூர் வெகு தூரமல்ல. அங்கே நடக்கும் கம்பர் விழாவுக்குப் போகிறோம். 'கம்பர் மேட்டி' லிருந்து கவிதையை விளக்கிக் கொண்டிருக்கிறார் ஒரு பேச்சாளர். கவிதையென்றால் ஒரு பொல்லாத காரியம். அதை விளக்குவதற்கு அபாரமான உள்ளுணர்வும், சொல்லாற்றலும் வேண்டும். இவருக்கோ இரண்டும் பூஜ்யம். ஆனால், ரொம்ப, ரொம்பப் படித்தவர். ஆகவே கவிதை உலகத்துக்குள்ளே புகுந்து, ஒரு கலக்கு, கலக்கிக்கொண்டிருக்கிறார், எருமை மாடு குட்டையைக் கலக்கின கணக்கில்.

பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ரசிகமணி நம்மிடம் சொல்லுவார்கள் ''இவரிடம் அமிர்தத்தையே கொடுங்களேன்: ஒரு நிமிஷத்தில் அதை அப்படியே விளக்கெண்ணெய் ஆக்கி விடுவார்.'' இப்படிக் கவிதையைத் தொட்டுக் கரியாக்கி விட்டு இவர் போய்விடுகிறார். அடுத்தாற்போல் வந்த பேச்சாளர், உப்புச் சப்பில்லாத ஒரு விருதாப்பாட்டைக் கவிதையென்று சொல்லிக் கூத்தாடுகிறார். ''வெண்ணெய் தின்கிறோம்., வெண்ணெய் தின்கிறோம்'' என்று சொல்லிக்கொண்டே, களி மண்ணை உருட்டி



டி.கே.சி.யின் நகைச்சுவை! டி.கே.சி.க்குப் பின்னால் செயலாளர் பலராமராஜா. அவர் தமையனார் ''பாலா'', மீ. ப. சோமு, ஜஸ்டிஸ் எஸ். மகராஜன், முன்னாள் மாநிலத் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளர் திரு. லட்சுமணசாமி.

உருட்டித் தன்வாயிலே போட்டுக் கொள்ளு கிறார்; 'பெரு மக்கள்' வாயிலும் திணிக்கப் பார்க்கிறார். இவரைப் பார்த்து, இரக்கமே வந்து விடுகிறது டி. கே. சி.க்கு. ''கருப்பஞ் சாறு ஆறாக ஓடிக் கொண்டிருக்கும்போது, சோளத் தட்டையைக் கடித்துச் சுவை போடு கிறார்களே!'' என்று ஆற்றாமைப்படு கிறார்கள். இதற்குள்ளாக, அடுத்த கம்ப ராமாயணப் பிரசங்கி மேடையேறிவிட்டார். கம்பர் எழுதாத பாட்டின் ஒரு அடியை எடுத்துக் கொண்டு, தனக்குத் தெரியாத பொருளை தெரிந்த பாவனையில் அவர் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறார்; 'பேரன்புமிக்க பெரு மக்களோ கொட்டாவி விட்டுக் கொண்டிருக் கிறார்கள். ரசிகமணி பிரசங்கியை ஏற, இறங்கப் பார்த்துச் சொல்லுகிறார்கள் :— ''ஐயா! கம்பனுக்குக் கிரீடம் சூட்டுவதாகச் சொல்லிக் கொண்டு, அவன் தலையில் வைக் கோல் புரியையல்லவா வளைய, வளையச் சுற்றுகிறீர்கள்!''

இனி, வைக்கோல் படப்புகளையும், சோளத் தட்டைகளையும் தாண்டி நாம் சென்னைக்கு ரயிலேறுகிறோம். போகிற வழியெல்லாம், விழாவைப் பற்றிய பேச்சுத்தான். ராமாயணப் பிரசங்கம் நடந்தபோது, கூட்டத்திலுள்ள ராமாயண விரோதி ஒருவர் ''சூர்ப்பனகை மூக்கை அரிந்தது அக்கிரமம்'' என்று கூப்பாடு போட்டாரே, அவரைப் பற்றிப் பேச்சு வருகிறது. அவர் சூர்ப்பனகைக்கு வக்காலத்து வாங்கினதற்குக் காரணம் என்ன? அரசியல் துவேஷம் காரணமாக, கம்ப ராமாயணப் பாத்திரங்களைப் பரிவோடு அனுபவிக்க முடியவில்லை அவருக்கு. பரிவில்லையென்றால், கம்பனுடைய அற்புத சிருஷ்டிகளை அனுபவிக்க முடியாது. போதாக் குறைக்கு, அரசியல் துவேஷமும் சேர்ந்துவிட்டால், கவிச்சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை மலைபோல் நின்று, அது மறைத்துவிடுகிறது. அந்த ஆசாமி பேச்சை எடுத்தவுடனேயே, டி. கே. சி. யின் மீசை துடிக்கிறது. அவரை முன்னிலைப்படுத்திக் கொண்டு 'ஏலே, சூர்ப்பனகை உங்கள் அக்காளோ, லே?'' என்று திருநெல்வேலிப் பச்சைத் தமிழில் ஒரு போடு போடுகிறார்கள்.

இதற்குள்ளாக நம்முடைய ரயில்வண்டி சென்னை வந்து சேர்ந்து விட்டது. கலையைப் பற்றியும், கவிதையைப் பற்றியும், டி. கே. சி. யோடு பேசிக் கொண்டிருக்கும்போது நேரம் போவதே தெரியாது. வெள்ளித் தண்டவாளத்தில், தங்கச் சக்கரம் பூண்டு, நேரம் ஓடிக் கொண்டிருக்கும். கலையுலகத்தில், ஒரு உண்மையோடு நாம் ஒட்டி நிற்கும்போது, காலம், இடம் என்ற தத்துவங்கள் அடங்கி ஒடுங்கி இல்லாமலே போய் விடுகின்றன.

பெரும்பாலும் நம்முடைய பேச்சாளர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு மேல் ஒரு உண்மையோடு ஒட்டி நிற்க முடியாது. மாநாட்டு விழாவிலே பேசச் சொன்னால், சங்க இலக்கியத்தைப்பற்றிப் பேசுவார்கள். கவிதை பற்றிப் பேசச் சொன்னால், உணவு உற்பத்தியைப் பற்றிப் பேசுவார்கள். சென்னையில் நடந்து கொண்டிருக்கும் தமிழ்த் திருநாளில்கூட, அநேகமாக அப்படித்தான். விதிவிலக்காக டி. கே. சி. யும் இரண்டொருவரும், தமிழ்க் கவியைப் பற்றிப் பேசுகிறார்கள். ''இப்படியும் விதிவிலக்காக நீங்கள் அமையலாமா ?'' என்று கேட்கிறோம். சிரிப்போடு வருகிறது டி. கே. சி. யின் பதில் :—''ஆம்! கவியைப் பற்றித்தான் பேசினேன். தமிழ்த் திருநாளில் அதுதானே செய்ய வேண்டும்! உணவைப் பெருக்க வேண்டும் என்ற வெற்றுரைக்கும், தமிழ்ப் புலவருக்கும் என்ன சம்பந்தமோ ? 'டிராக்டர்கள்' முதலிய எந்திரங்களைத் தமிழ்த் திருநாளில் செய்து கொண்டிருக்கவா வேண்டும்? அமெரிக்காவில், ஆங்கில பாஷையையும் அதன் இனிமையைப் பற்றியும் பேசக் கூடினால், விவசாய எந்திரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டா இருப்பார்கள்! அவைகளைப் பற்றிப்பேச மாட்டார்கள். அவைகளை வெளியிலே (நாட்டில்தான்) செய்து கொண்டிருப்பார்கள். நம்முடையவன் காரியம் எப்படி இருக்கிறதென்றால், விவசாயத்தைப் பற்றியும், 'புல்டோ'சரைப் பற்றியும் ஆலோசிக்கக் கூடினால், புறநானூற்றையும், தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தைப் பற்றியும் பேசித் தொலைப்பான். அண்டாவிலே விறகைப்போட்டு, நெருப்பை மூட்டுவான். அடுப்பிலே தண்ணீரையும், அரிசியையும் கொட்டுவான். கெட்டிக்காரன்!''

சென்னையிலிருந்து தென்காசிக்குப் போகிறோம். திருவள்ளுவர் கழகத்தின் ஆண்டு விழா அங்கே விமரிசையாய் நடந்து கொண்டிருக்கிறது. கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கான பெண்டிரும், ஆடவர்களும் வந்திருக்கிறார்கள். பொதுவாகப் பேச்சுக்கள் இங்கே ரசமாகவேயிருக்கும். ஆனால், நாம் போகும் தருணத்தில் ஓயா மொழிப் புலவர் ஒருவர் மணிக்கணக்கிலே பேசிக்கொண்டிருக் கிறார். பேச்சு இப்படியும் நீண்டுகொண்டே போகிறதே என்று செயலாளரை நாம் முறைத்துப் பார்க்கிறோம். அவர் என்ன செய்வார்!

புலவர், ''மூன்று மணி நேரத்துக்குக் குறைந்தது என்னால் பேசமுடியாது'' என்று கடிதமேஎழுதி விட்டாராம். இதைக் கேட்டுக் கொண்டிருந்த டி.கே.சி. நம்மிடம் சொல்லு கிறார்கள் :—''ஆமாம். உமியும், மணலும் குப்பையுமாக அவ்வளவு தலைக்குள் குவிந்திருக்கும்போது என்ன செய்வார், அப்பாவி! ஊருக்கு எளியவன் பிள்ளையார்கோயில் ஆண்டி, தென்காசிக்காரன் என்று கண்டு, அவ்வளவையும் அவன் தலையில் கொட்டு கிறார். கொட்டியது ஒரு வருஷத்துக்குப் போதும்.''

ஓயா மொழிப் புலவரும் ஓய்ந்து அடுத்த பேச்சாளர் பேச ஆரம்பிக்கிறார். 'அப்பாடா! என்று சபையோர் பெருமூச்சு விட்டு, விடாயாற்றிக் கொள்ளுகிறார்கள். புதிதாக வந்தவராவது புதிதாக ஏதாவது சொல்ல மாட்டாரா என்று ஏங்கி இருக்கிறோம். அவரோ பழையவன் சொன்ன குறளையே எடுத்துப் பிய்த்துப் பிய்த்து, துவையல் அரைத்துக் கொண்டிருக்கிறார். இந்த அலங்கோலத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு டி. கே. சி. விமர்சனம் செய்கிறார்கள் :—

'திருவள்ளுவர் பட்ட பாட்டை இன்னது என்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் குத்தின இடத்திலேயே குத்திக் குத்திச் சித்திரவதை செய்து விட்டார்கள்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

இந்தக் குறளைப் பாடிய முகூர்த்தம், அடடா, ரொம்ப, ரொம்பப் பொல்லாத முகூர்த்தம். தெய்வம் பட்ட பாட்டையும்

## நான்காவது அட்டையில்

அனைத்திந்திய அடிப்படையில் செயல்படுத்தப்படும் அச்சிட்ட சேலைகளின் சேகரிப்பு முறையில் சவுதாகிரி, சங்காணீர் வடிவமைப்புகள் சேலையை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமே இந்தியாவில் முதன் முதலாக வெளியிட்டுள்ளது. பல்வேறு பணிகளில் இந்தியாவில் முதன்மை யாகத் திகழும் தமிழ்நாடு, கைத்தறி விற்பனையிலும் மாபெரும் சாதனை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

தேசிய சேகரிப்பு அச்சிட்ட சேலைகளை உடுத்தியுள்ள மங்கையரின் எழிற்கோலம்.

கொழுநன் பட்ட பாட்டையும் இருவரையும் விட, புத்தி கெட்டுப் போய்த் தொழுதாளே, அந்த அம்மாள் பட்ட பாட்டையும், எல்லோரையும்விட, வள்ளுவர் பட்டபாட்டையும், லேசில் சொல்லிவிட முடியாது. இதிகாசந்தான் எழுத வேண்டும். தென்காசிக் காரனும், தென்காசிக்காரியும், பிழைத்தோம் பிழைத்தோம் என்று வீடு போய்ச் சேர்ந்தார்கள். இன்னும் ஒரு வருஷத்துக்குத் திருவள்ளுவர் சங்கத்து ஆண்டு விழா கிடையாது. சுபம்.

இனி, டி. கே. சி. யின் இருக்கையாகிய திருக்குற்றாலத்துக்குப்போவோம். ஐந்தருவிச் சாலையில் முதலிலிருப்பது டி. கே. சி. யின் இல்லம்; 'அடையா நெடுங் கத'வையுடைய இல்லம். அறுசுவையுண்டி அருந்திவிட்டு ரசிகர் குழாம் ரசிகமணியைச் சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கிறது. சாய்வு நாற்காலியிலே, துய்ய வெள்ளை ஆடை உடுத்து, அமர்ந்திருக்கிற டி. கே. சி. தமிழ்ப் பண்பாட்டின் நயங்களை எடுத்துச் சொல்லி நம்மைப் பரவசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதோ இருக்கிற நடராஜ விக்ரகத்தைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. அந்த அழகின் பல பட்டங்களையும் உணர்ந்து அனுபவிக்க, ''மனிதப் பிறவியும்வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்ற பாட்டைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்திலே அசட்டுத்தனமாக ஒருவர் குறுக்கிட்டு 'இந்தச் சிலை கல்கண்டினால் செய்ததல்லவா? இதைத் தின்று பார்த்தால் இனிப்பாயிருக்குமே'' என்று சொல்லுகிறார். இந்த விரசப் பேச்சைக் கேட்டவுடனே, தன்னை மறந்த லயத்திலிருக்கும் டி. கே. சி. நிஷ்டையைக் கலைத்து விட்டு, முகத்தைச் சுழிக்கிறார்கள்.

கல்கண்டு என்ற நினைப்பும், அதைத் தின்று பார்க்க வேண்டுமே என்ற துடிப்பும், சுயநலத்தோடும், ஆணவத்தோடும் கலந்த காரியங்கள். அப்பேர்ப்பட்ட நினைப்புக்கள் குறுக்கிட்ட மாத்திரத்திலேயே, நாம் கலையுலகத்தின் உன்னதத்திலிருந்து மண்ணுலகத்தின் படுகுழிக்குள்ளே விழுந்து விடுகிறோம்; ஆனந்தம் கெட்டு, ஆணவம்தான் மிஞ்சுகிறது. இதையே நவம் நவமான கோணங்களிலிருந்து கண்டிருக்கிறது டி. கே. சி. யின் குரல்.

நாம் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, டி. கே. சி.க்குச் சொந்தமான ஒரு வெள்ளித் தம்ளர் காணாமல் போய்விட்டது. தேடித் தேடிப் பார்த்தும் காணவில்லை. இதனால் மனசுக்குக் கொஞ்சம் கஷ்டந்தான். சில நாட்கள் கழித்து அந்த வெள்ளித் தம்ளரைக் கண்டுபிடித்து ஒரு நண்பர் டி. கே. சி.யிடமே அதை ஒப்படைத்து விடுகிறார். காணாமல் போன பொருள் கிடைத்துவிட்டதே என்று டி. கே. சி. க்குச் சந்தோஷம், ரூபாய், அணா பைசாக் கணக்கிலே, அந்த உணர்ச்சியை அவர்கள் மதிக்கவில்லை. அப்படி மதித்தால் அதில் கலைப்பாங்கு இருக்க முடியாது. சுயநலம்தானிருக்கும்; டி. கே. சி. யும் டி. கே. சி. யாக இருக்க மாட்டார்கள். எந்த அளவு கோலைக் கொண்டு அந்தச் சந்தோஷத்தை அளக்கிறார்கள் என்று பார்ப்போம் :—

''வெள்ளித் தம்ளர் கிடைத்துவிட்டது. இனிமேல்க் காணாமல்ப் போனாலும் கவலை யில்லை. காணாமல்ப்போன பொருள் கைக்கு வந்து விட்டதே. பொருள் அல்ல-விஷயம் கைக்கு வந்து விட்டதே, அதுதான் விஷயம்'' என்று சொல்லுகிறார்கள். ரசிகமணி சுயநலத்தில் இருக்கும் நாம், வெள்ளித் தம்ளர் எத்தனை ரூபாய் எடையிருக்கும். அது காணாமல் போனதால் எத்தனை ரூபாய் நஷ்டம், அது திரும்பக் கிடைத்ததால் நமக்கு எத்தனை ரூபாய் லாபம், என்ற தோரணையில் கணக்குப் போட்டுப் பார்க்கிறோம். ஆனால், ரசிகமணியின் பேரேட்டிலே, பற்று, வரவு மதிப்பே அலாதி. காணாமல் போனது, வெள்ளியாயிருந்தாலென்ன, மண்ணாங்கட்டியா யிருந்தாலென்ன, அது திரும்பக் கிடைக்கும்போது ஏற்பட்ட உணர்ச்சி இருக்கிறதே, அதுதான் மதிக்கத்தக்கது. தம்ளரைத் திரும்பவும் இழக்கலாம். ஆனால், திரும்பிக் கிடைத்த போதுள்ள உணர்ச்சியை இழக்க வேண்டிய தில்லையே! அதுபோதும்.

வெள்ளித் தம்ளர் இருக்கட்டும். அழகிலும், அறிவிலும் சிறந்த தம் அருமை மகனை ஒரே மகனை—டி. கே. சி. இழந்தார்கள். ஆணவ உலகத்திலிருந்த டி. கே. சி. க்கு எல்லையில்லாத துயரம் ஏற்பட்டது. செல்லையாவோடு (டி. கே. சி. யின் மகன்) நெருங்கிப் பழகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் தம் துயரத்தை ஒரு வெண்பாவில் வடித்து, அதை டி. கே. சிக்கே அனுப்பினார்கள்.

> எப்பாரும் போற்றும்
> இசைத்தமிழ்ச் செல்வா என்
> அப்பா! அழகிய செல்
> லையா! நான்—இப்பாரில்
> சிந்தை குளிரச்
> சிரித்தொளிரும் உன்முகத்தை
> எந்தநாள் காண்பேன் இனி,

என்பதே அந்த வெண்பா. வெண்பாவைப் பார்த்த டி. கே. சி. சோகத்தால் மூர்ச்சையாகி விழவில்லை. வெண்பா கிடைப்பதற்கு முன்னால், சோகத்தால் மொத்துண்டிருந்த டி. கே. சி. வெண்பாவைப் பார்த்த பிறகு, தன்னை மறந்த ஒரு ஆனந்த சமாதிக்குள் புகுந்து விடுகிறார்கள். பாடலைப் பாடிப் பாடித் திளைக்கிறார்கள். ''இப்படியும் ஒரு அற்புதமான கவி தமிழுக்குக்கிடைக்குமானால் உயிரைக் கொடுத்துக்கூட அதை வாங்கலாம்'' என்று சொல்லி வியக்கிறார்கள்.

மறுபடியும் பாடலைச் சவுக்கத்தில் பாடுகிறார்கள். இந்த சுகானந்த நிலையில், தந்தை—மகன் என்ற உறவு ஒழிந்தது; காலம்—இடம் என்ற கற்கோட்டை தகர்ந்தது; டி. கே. சி. என்ற மானிடன் செத்தான், டி. கே. சி. என்ற ரஸஞ்ஞானி பிறந்ததால்,

# ரசிகமணி – சில பசுமை நினைவுகள்

– ராஜேஸ்வரி நடராஜன்

ரசிகமணி அவர்களிடத்தில் என் தந்தை என்னை அறிமுகம் செய்து வைத்தபோது எனக்கு வயது பதினாறு. கல்லூரியில் காலடி எடுத்து வைத்திருந்த நேரம். என் தந்தையாருக்கு மிக நெருங்கிய நண்பர், நண்பர் என்பதை விட, குரு ஸ்தானத்திலே இருப்பவர் என்ற முறையில் அவரை நான் சிறுவயது முதலே அறிவேன் என்றாலும், அவர்களை நேரில் பார்த்துப் பேசி, பழகிப் பரவசப்பட்டு நின்றது அந்த வயதில்தான்.

நெடிதுயர்ந்த சிவந்த திருமேனி. விசாலமான நெற்றி. தீர்க்கமான மூக்கு. ஒளிவீசும் கண்கள். வாரியும் வாரப்படாமலும் சில்லென்று வெள்ளையாய்ப் பூத்துக் கிடக்கும் தலைமுடி. செழித்து வளர்ந்த மீசை. அதற்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் என்றும் மாறாத புன்னகை. ஒருமுறை பார்த்தவர்கள் எளிதில் மறக்க முடியாத தோற்றம். இந்தத் தோற்றத்தைப் பார்த்துவிட்டுத்தான் அமெரிக்க அறிஞர் டாக்டர் கெய்த்தான் என்பவர் தம்முடைய நண்பரும் டி.கே.சி.யின் நண்பருமாகிய ஏ.சி. பால்நாடார் அவர்களிடம் சொன்னார்: ''நண்பரே! இவர் ஓர் அபூர்வமான மனிதர். இவரைப் போன்ற உருவ அமைப்பும் முகப் பொலிவும் கொண்டவர்களை எங்கள் அமெரிக்காவில் காண முடியாது'' என்பதாக.

உருவம் இருக்கட்டும். உள்ளம் ஒரே அன்பு மயமான உள்ளம். பண்பு நிறைந்த உள்ளம். நண்பர்களைக் கண்டு விட்டால் கும்மாளி போடுகிற உள்ளம். கலையிலும் கவிதையிலும் ஆனந்தம் எங்கே எங்கே என்று தேடி அலைகிற உள்ளம். குற்றாலத்துத் தென்றலின் மென்மையும் சார



டி.கே.சி.க்கு முன்புறம், கீழே அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்) பேரன் தீப குற்றாலலிங்கம், பேத்தி தீப தங்கம்மாள், பேரன் தீப குமாரசாமி, நீதிபதி மகராஜன் அவர்களின் தமக்கை வேலம்மாள், டி.கே.சி.யின் இல்லத்தரசி திருமதி பிச்சம்மாள் அண்ணி.

நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்) புகைப்படக் கலைஞர் திருச்சி அருணாசலம், பலராம ராஜா, மீ. ப. சோமு, டி.கே.சி.யின் மருமகன் ஓய்வு பெற்ற உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் டி.கே. சண்முகசுந்தர முதலியார், பேரன் தீப நடராஜன்.

வின் இதமும், அருவியின் ஆரவாரமும்தான் அதற்கு இணை.

முதுபெரும் புலவர், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஒருசமயம் சொன்னார், ''டி.கே.சி ஒரு 'ஜீனியஸ்'. அதாவது சாதாரணமான புலமையும் நுண்ணுணர்வும் பெற்றவர். அதனால்தான் எந்தப் பாட்டை எடுத்தாலும் அதில் சாரம் இருக்கிறதா இல்லையா என்று அவருக்குத் தெரிகிறது. அந்தச்சாரத்தைத் தாம் அனுபவிப்பதோடு கூட மற்றவர்களை அனுபவிக்கும்படியும் செய்ய அவரால் முடிகிறது. கல்வியறிவு பெற்ற நாமெல்லாம் அனுபவிக்கும்படி கவிதையை எடுத்துச் சொல்வதில் பெருமை ஏதுமில்லை. கவிதையே அறியாதவர்களும்கூட கவிதையை அனுபவித்து உணரும்படி எடுத்துக்கூறும் ஆற்றல் இருப்பதே அவருக்குப் பெருமை' என்பதாக. டி.கே.சியை அறிந்தவர்கள், அவரிடம் கவிதையைக் கேட்டவர்கள் அனைவரும் இதை அப்படியே ஒப்புக் கொள்வார்கள்.

... ''தமிழ் மொழிக்கு சடான மொழி உலகத்திலேயே வேறு கிடையாது. தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள். வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்கு நமக்கு இலக்கியச் செல்வம் வாய்த்திருக்கிறது. ஒவ்வொன்றும் ஒரு தங்கச் சுரங்கம். புதையல். நாம் அதைச்சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். தேவாரமும் திருவாசகமும் தமிழ் இசைக்காகவும், முத்தொள்ளாயிரமும் முக்கூடற்பள்ளும் தமிழ் நாடகச் சுவைக்காகவும் ஏற்பட்டவை அல்லவா? அதைத் தமிழன் உணர்ந்ததாகத் தெரியவில்லையே! என்று அங்கலாய்ப்பார்கள் ஒருபுறம். மறுபுறம், 'மொழி' என்று வந்துவிட்டால், பிற மொழி அறிவு அவசியம்தான். அதற்காகப் பிற மொழிகளின் மூலமாகக் கவியின் உயிர்நாடியை அறிய முயற்சி செய்வது, காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்கு வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற கணக்குத்தான்'' என்று கவியரசர் தாகூர் கூறிய மேற்கோளை எடுத்துச் சொல்லி நையாண்டி செய்வார்கள். கவிதைக்கு மட்டுமல்லாமல் இசை உலகத்துக்கும் இது பொருந்தும் என்பதால் தமிழ் இசை இயக்கம் தோன்றுவதற்கே மூலகாரணமாய் நின்று அதனை ஊக்குவித்து வளர்த்தார்கள். ''நான் ஆடம்பரமான வெற்றொளியில் மயங்கிவிடமாட்டேன். பாடுகிற பாடலின் பொருள் பாடுகிறவருக்கும் விளங்க வேண்டும். கேட்கிறவர்களுக்கும் விளங்க வேண்டும். அப்போதுதான் பாட்டின் பாவம் தெரியும். நாம் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து அனுபவிக்கவும் முடியும்'' என்பது அவர்களுடைய ஆணித்தரமான கருத்து...

... ரசிகமணி அவர்கள் வீட்டு விருந்தோம்பல் மிகப் பிரசித்தமானது. ரசிகமணியின் இல்லத்திலே செவிக்குணவு இல்லாத போதெல்லாம், வயிற்றுக்குணவு வகை வகையாய்க் கிடைதது விடும். விருந்தோம்பலுக்கு நடுநாயகமாய் இருப்பவர் டி.கே.சி.தான் என்றாலும் அவரது துணைவியார் தாமே முன் வந்து, வந்திருப்போரை இன்முகம் காட்டி வரவேற்றுப் பரிமாறி மகிழும் பாங்கு இருக்கிறதே, அற்புதமானது. பேரன்களும் பேத்தியுமே அதில் உற்சாகமாய் பங்கு கொள்வார்கள். அவருடைய விருந்தோம்பலைப் பல முறை அனுபவித்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள், ரசிகமணி அமரர் ஆன போது,

> அன்னைபோல் என்னை
> அருவியில் நீராட்டி
> இன்னமுதும் பக்கத்து
> இருந்தூட்டி, என்னோடு
> தங்கு, தங்கென்று சொன்ன
> தங்கக் குணத்தானை
> எங்கு நான் காண்பேன்
> இனி!

என்று ஏங்கித் தவித்து, அந்தத் தவிப்பினையே, பாட்டாக வடித்துத் தந்தார். இதைவிட விருந்தோம்பலைப் பற்றி அதிகம் பேசிவிட முடியுமா என்ன?...

...நான் அடிக்கடி என் தந்தையாருடன் குற்றாலம் சென்று டி.கே.சி குடும்பத்தாருடன் ஒட்டிக் கொள்வேன். அப்படிப் போக முடியாத சமயத்தில் கடிதம் எழுதுவேன். டி. கே.சியின் பேத்தி பிச்சம்மாள் என்னைவிட இளையவள். சிறுமி. அவளுக்கு ஒரு முறை விளையாட்டாக, நேருக்கு நேர் நின்று பேசுவது போன்று கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் பிச்சம்மாள் எழுதவில்லை. டி.கே.சி. எழுதியிருந்தார்கள்.


''பிச்சம்மாளுக்கு நீ எழுதிய கடிதத்திலிருந்து நல்ல முறையில் கடிதம் எழுதுவதற்கு யுக்தி இன்னதென்று தெரிந்து கொண்டேன். யாருக்கு எழுதுகிறோமோ, அந்த ஆசாமியைக் கண்முன் இருத்திக் கொள்ள வேண்டும். பிச்சம்மாளை நீ அப்படி இருத்திக் கொண்டாய். கடிதம் அற்புதமாய் வந்து விட்டது.

''ஆனால், இது வெண்ணெய் வைத்துக் கொக்கு பிடிக்கிற காரியம்தான். மனக் கண்ணுக்குள் யாராவது இரு என்றால் இருந்து விடுவார்களா? மாட்டார்கள். அதற்குரிய சாதனம், பக்குவம், அன்பு, அருமை எல்லாம் நம்மிடத்தில் இருந்தால்தானே, அவர்கள் இருப்பார்கள்? உன்னுடைய உள்ளத்தில் அதெல்லாம் வேண்டிய மட்டும் இருக்கிறது. பிச்சம்மாள், நான் எல்லோருமே 'இரு' என்றால் இருந்துவிடுகிறோம். இப்படித்தான், மாணிக்கவாசகர், சுந்தரர், பொய்கை ஆழ்வார் முதலிய பக்தர்கள் 'இரு' என்றால் இருந்து விடுகிறான், இறைவன். அவன் அருள் பாலிப்பதாக உனக்கு'' என்று எழுதியிருந்தார்கள். ஒரு சின்ன விஷயத்திலிருந்து எப்படி ஒரு மிகப் பெரிய உண்மையை எளிதாக விளக்கி விட்டார்கள் என்று வியந்து போனேன்!



திருக்குற்றாலம்-இலஞ்சிச் சாலையில் உள்ள தோட்டம். நாற்காலியில் அமர்ந்திருக்கும் டி.கே.சி.க்கு அருகில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) 1. மீ. ப. சோமு 2. டி.கே. சி.யின் பேரன் குற்றாலலிங்கம் 3. டி.கே.சி.யின் செயலாளர் பலராம ராஜா.





# நாட்டு வணக்கம்


எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?






இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னி யராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்தது மிந்நாடே—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?



மகாகவி பாரதியார்



# வளம் தரும் பட்டுத் தொழில்

இரெ. மகாலிங்கம்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர், (விளம்பரம்)

"எந்தத் திட்டமானாலும் அது ஏழை எளிய மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டு இயற்றப்பட வேண்டும்" என்பது பேரறிஞர் அண்ணாவின் விருப்பமாகும்.

எல்லோரும் எல்லாம் பெற்று வாழ்கின்ற புதியதோர் சமுதாய அமைப்பை நிர்மாணித்திடப் பாடுபட்டுவரும் தமிழ்நாடு அரசு அண்ணாவின் எண்ணங்களை ஈடேற்றும் வகையில் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. அதனால்தான் அரசின் திட்டங்கள் அனைத்திலும் "வறுமை ஒழிப்பு" "வேலைவாய்ப்பு", கிராம முன்னேற்றம்" போன்ற குறிக்கோள்கள் மிகுந்திருக்கின்றன.

அரசின் தொழிற்கொள்கை, இதற்கு விதிவிலக்கன்று. வறுமையில் வாடும் கிராமப்புற மக்களுக்கு குறைந்த மூதலீட்டில், குறுகிய காலத்தில்-அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்பது அரசின் தொழிற்கொள்கையாகும். இதன் காரணமாக, தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பும், நல்ல வருவாயினையும் தரக்கூடிய பல தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. அத்தகைய தொழில்களின் வரிசையில் "பட்டு வளர்ப்பு" (Sericulture) சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றது.

பட்டு வளர்ப்புத் தொழில் வறட்சியிலும் வளம் தரும் தொழிலாகும்; படித்த இளைஞர்களும் விரும்பி ஈடுபடுவதற்குரிய துறையாகும்; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஓர் வழி முறையாகும். "Sericulture" என்றால் "Self Employment and Remunerative Industry" என்று பொருள் என்று சொல்லும் வகையில் சுயவேலை வாய்ப்பிற்கு வழி வகுத்து மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் துறையாக இது இருக்கின்றது. கிராமங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திடும் இத்தொழிலின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு அதற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது, தமிழ்நாடு அரசு. 1979-ல் பட்டு வளர்ப்புக்கென்று தனித்துறை உருவாக்கப்பட்டது. அந்தப்பட்டு வளர்ப்புத் துறை இயக்ககம் (Directorate of Sericulture) சேலத்தை மையமாகக்கொண்டு இயங்கத் தொடங்கியது.

தனி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது, இந்தத்துறையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். தனி இயக்ககம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து அதிக அளவில் சலுகைகளும் உதவிகளும் வழங்கி இத்தொழிலின் வளர்ச்சிக்கு, அரசு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றது. ஒரு ஏக்கரில் மல்பரி பயிரிட உதவித் தொகையாக ரூ. 250 வழங்கப்படுகிறது. இத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மூன்றுமாதக் காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 150 உதவித் தொகை அளிப்பதோடு, இளம் பட்டுப்புழு வளர்ப்புச் சாதனங்களும் பாதி விலையில் வழங்கப்படுகின்றது. கடந்த இரண்டாண்டுகளில் 11,878 விவசாயிகள் இந்த முறையில் பயிற்சியும் பயனும் பெற்றிருக்கின்றார்கள்.

பட்டு வளர்ப்புத் தொழிலில் புதிதாக ஈடுபடும் விவசாயிகளுக்குப் பட்டு வளர்ப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு தேவையான முதலீட்டில் 25 சத விகிதமும் (ரூ. 375 வரை)— பட்டு வளர்ப்புக் கூடங்கள் அமைப்பதற்குத் தேவைப்படும் பணத்தில் 25 சத விகிதமும்

(ரூ. 375 வரை) உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.

கடந்த இரண்டாண்டுகளில் இந்த வகையில் 32 இலட்சம் ரூபாய் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. சுமார் 29,267 விவசாயிகள் இதன மூலம் பயன் பெற்று இருக்கின்றார்கள். இத்தகைய சலுகைகள்தான் இத்தொழிலில் பலரை ஈடுபடச் செய்திருக்கிறது-என்றால் மிகையாகாது. ஓசூர் பட்டு வளர்ப்புத் துறை உதவி இயக்குநர் திரு. அரிஹர சுப்ரமணியம், ஒரு இளைஞரை அறிமுகப்படுத்தி வைத்து ''பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள படித்த இளைஞர்'' என்று அவரைப் பற்றி என்னிடம் தெரிவித்தார்.

ஓசூர் வட்டம் அத்திமுகம் கிராமத்தைச் சேர்ந்த அப்துல்மாலிக் என்ற அந்த இளைஞர் ''அரசின் சலுகைகள்தான் என்னை இத்தொழிலில் ஈடுபடச் செய்தது'' என்று குறிப்பிட்டார். ''தாங்கள் பெற்ற சலுகை என்ன? என்று கேட்டேன்.

''1978-79-ல் பேரிகையில் பயிற்சி பெற்றேன்.

''அரசின் முயற்சியினால் இந்தியன் வங்கியில் 2,200 ரூபாய் கடன் பெற்றேன்.

''பட்டுமுட்டைகள் வாங்கவேண்டுமானால் முன்பெல்லாம் கர்நாடக மாநிலத்திலுள்ள மாலூருக்குச் செல்ல வேண்டும். தற்போது இங்கேயே தரமான முட்டைகள் கிடைக்கின்றன.

''மல்பரி பயிரிட உதவித்தொகை பட்டு வளர்ப்புச் சாதனங்கள் வாங்க உதவித் தொகை, பட்டுவளர்ப்புக் கூடங்கள் அமைக்க நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

''தொழிற்நுட்ப உதவியும் (Technical Assistance) அதிக அளவில் கிடைக்கின்றது.

என்று அடுக்கிக் கொண்டே போனார். அவரது பேச்சில் நன்றி உணர்ச்சி மேலிட்டிருந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

இத்துறையில் அரசு ஆற்றிவரும் பெரும் பணி காரணமாக விளைந்துள்ள பயனுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். வறட்சியால் வாடும் பகுதிகளில் வளங்கொழிக்கச் செய்யும் வழிமுறையாகப் பட்டு வளர்ப்புத் தொழில் பரவலாக்கப்பட்டு வருகின்றது.

இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவின் முகவுரையில், ஒரு கருத்து குறிப்பிடப்பட்டிருந்தது:

"In the implementation of the programmes the weakest are looked after first and the benefits of development are made to flow by planned investment in the under developed regions and among the more backward sections of the community''.

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

''திட்டங்களைச் செயல்படுத்தும் போது வறுமையில் வாடுவோரை முதலில் கவனிக்க வேண்டும் — முன்னேற்றத்தின் பலன்கள் வளர்ச்சி பெறாத பகுதிகளில் பாய்ந்தோடி



அடித்தள மக்களின் நன்மைக்குப் பயன்படும் வகையில் திட்டமிட்டு முதலீடுகள் செய்தல் வேண்டும்'' என்பது அதன் கருத்தாகும்.

இந்தக் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில், பட்டுவளர்ப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ், பட்டுத் துறை வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில் 8,000 ஏக்கரில் மல்புரி பயிரிடப்படுகிறது. பத்தாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளன. இம்மாவட்டத்திலுள்ள மிடிதரப்பள்ளி, பிக்கம்பட்டி நவுதியூர் போன்ற கிராமங்கள் ''பட்டு வளர்ப்புக் கிராமங்கள்'' ( Villages of Sericulture ) என்று அழைக்கப்படுகின்றன. அந்த அளவிற்கு கிராமமக்கள் அனைவரும் பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். ஆர்தர் ஹோப் சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த போது அமைக்கப்பட்ட பழமையான பட்டுப் பண்ணை இம்மாவட்டத்தில்தான்—ஓசூரில்— இருக்கின்றது. இம்மாவட்டத்தில் ஓசூர் ஆவலப்பள்ளி, உத்தனப்பள்ளி, பேரிகை, கல்கண்டார் கோட்டை, தளி, உளிமங்கலம், தேன்கனிக்கோட்டை, விஞ்சட்டி, கோலட்டி, நாகமங்கலம், கிருஷ்ணகிரி, பாப்பாரப்பட்டி, ஊத்தங்கரை ஆகிய ஊர்களில் பட்டுவளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள 26 உயர்நிலைப்பள்ளிகளில் 'பட்டுவளர்ப்பு' குறித்த பாடங்கள் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன.



மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் வித்தகத்தைத் தொடங்கி வைக்கிறார்

வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் பட்டுத்துறை வளர்ச்சிக்காக 1977-78-ல் ரூ.6.6 இலட்சமும், 1978-79-ல் ரூ. 11.39 இலட்சமும் 1979-80ல் ரூ.45 இலட்சமும் 1980-81ல் ரூ. 55.03 இலட்சமும் ஒதுக்கப்பட்டன. நடப்பாண்டில் ரூ. 50 லட்சம் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மாநிலத் திட்டம், தீவிர பட்டு வளர்ப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழும் நிதி ஒதுக்கப்பட்டுச் செலவிடப்படுகின்றன.

பட்டுவளர்ச்சிக்கு ஏற்புடைய தட்ப வெப்பநிலையை பெற்றிருப்பதாலும்—பட்டு வளர்ப்பில் முதலிடம் வகிக்கும் கர்நாடக மாநிலத்திற்கு அருகாமையில் இருப்பதாலும் அரசின் அரவணைப்பால் இம்மாவட்டத்தில் பட்டுத்தொழில் பெரிதும் வளர்ச்சியடைவதற்குரிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன. வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திலும், பட்டு வளர்ப்புத் தொழிலின் வளர்ச்சிக்காகப் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வடஆர்க்காடு மாவட்டம் ஏலகிரி ஜவ்வாது மலைப்பகுதிகளிலும் சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், கல்ராயன் மலையிலும் 365 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதற்காக அரசு 7.45 இலட்சம் ரூபாய் செலவிட்டுள்ளது. விவசாயிகளுக்குத் தரமான பட்டுப் புழு முட்டைகளை வழங்குவது இத்தொழிலின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும். ஒசூர், கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், தாளவாடி ஆகிய இடங்களிலுள்ள பட்டுப்புழு முட்டை வித்தகங்கள் இந்தப் பணியினை நிறைவேற்றுகின்றன.

23-6-81 அன்று ஹோசூரில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் தொடங்கி வைத்த வித்தகம், இந்தப் பட்டியலில் புதிய வரவு ஆகும். இந்த வித்தகம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. கும்பகோணம், திண்டுக்கல், தென்காசி ஆகிய இடங்களிலும் வித்தகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பட்டு விதைக்கூடுகளுக்குத் தமிழகம் முன்பு கர்நாடக மாநிலத்தைத்தான் முழுமையாக நம்பி இருந்தது. தற்போது தர்மபுரி மாவட்டம் தேன்கனிக் கோட்டைப் பகுதியில் சுமார் 300ஏக்கரில் மல்பரி பயிரிடப்பட்டு உள்நாட்டு விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு சுமார் 3.5 கோடி விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் அது 4 கோடியாக வளர்ந்து தமிழகம் தன்னிறைவு பெற வழிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மதுரை மாவட்டம் சிறுமலை, பாச்சலூர் பகுதிகளில் 'பைவோல்டின்' என்னும் வெள்ளைக் கூடுகள் கட்டும் இனங்கள் வளர்க்கப்படுகின்றன. கடமலைக்குண்டு பகுதியில் உள்நாட்டு விதைக்கூடுகள் உற்பத்தி செய்ய, சோதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பில் முக்கிய அம்சம் இளம் புழு வளர்ப்பே. இந்தப் பணிக்காக, பட்டுப் புழு வளர்ப்பு நிலையங்கள் முதற்கட்டமாக அவினாசி, பழனி, சென்னியா விடுதி ஆகிய இடங்களில் செயல்படவிருக்கின்றன.

பட்டு நூற்போரின் தேவைகளை நிறைவு செய்திட, இத்துறையில் தொழில்நுட்பப் பயிற்சி பெற தொழிலாளர்களை உருவாக்குவது அவசியமாகும். அதற்காக, திருப்பத்தூர், கும்பகோணம், நாமக்கல், திண்டுக்கல், தாராபுரம் ஆகிய இடங்களில் பட்டுநூற்புப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில் பேரிகை, கிருஷ்ணகிரி, பாப்பாரப்பட்டி தர்மபுரி, அரூர் ஆகிய இடங்களில் ''கிராமிய பட்டு நூற்புப் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்'' செயல்பட்டு வருகின்றன.

தஞ்சை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கத் ''தொழில் வளர்ச்சி விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள்'' தொடங்கப்படவிருக்கின்றன. கோவை, சேலம், வட ஆர்க்காடு பகுதிகளில் பட்டு வளர்ப்புத் தொழில் மையங்கள் நிறுவப்பட உள்ளன. இதற்கென்று ரூ. 44.57 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூ. 25.27 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியில் பட்டு நூற்பாலை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்பேட்டை என்ற கருத்திற்கேற்ப திருப்பூரில் பனியன் தொழிற்பேட்டையும், மாதவரத்தில் தோல் தொழிற்பேட்டையும், ஓசூரில் மின்சார மற்றும் மின் அணு தொழிற்பேட்டையும் அமைத்துள்ள தமிழ்நாடு அரசு—ரூ. 50 இலட்சம் செலவில் தாராபுரத்தில் பட்டுக்கென்று தனித் தொழிற்பேட்டை (Sericulture Industrial Estate) நிறுவியுள்ளது. பட்டு வளர்ப்புத் துறையினை மேலும் நவீனமயமாக்கிட பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உற்பத்தி செய்யும் பட்டுக்

கூடுகளை விற்பனை செய்ய அங்காடிகளை ( Market Yard ) உருவாக்கிய தமிழ்நாடு அரசு—உற்பத்தியாகும் பட்டை விற்பனை செய்ய தமிழ்நாடு மாநிலப் பட்டு உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு இணையம்'' என்ற அமைப்பினை காஞ்சிபுரத்தில் ஏற்படுத்தியுள்ளது. 1978-ல் பதிவு செய்யப்பட்ட இவ் விற்பனை இணையம் கடந்த மூன்று ஆண்டுகளில் 2.53 கோடி ரூபாய் மதிப்புள்ள 95,960 கிலோ கிராம் கச்சாப்பட்டினை விற்பனை செய்துள்ளது. இதன் கிளைகள் ஆரணி, சேலம், மதுரை, கும்பகோணம் ஆகிய இடங்களிலும் இருக்கின்றன.

தமிழ்நாடு அரசின் சிறந்த திட்டங்களாலும் பட்டு வளர்ப்புத் துறையின் சீரிய முயற்சியாலும் தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேர் விட்டிருக்கின்றது.

கடந்த இரண்டாண்டுகளில் இந்தத் துறை கண்டுள்ள முன்னேற்றமும் வளர்ச்சியும், இதற்குச் சான்று பகருகின்றன.

*தமிழ்நாட்டில் தற்போது பதினைந்து மாவட்டங்களில் மல்பரி பயிரிடப்படுகின்றது.

*இரண்டு ஆண்டுகளில் மல்பரி பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு 21,419 ஏக்கரிலிருந்து 40,871 ஏக்கராக வளர்ந்துள்ளது.

*இரண்டு ஆண்டுகளில் பட்டு முட்டைத் தொகுதிகளின் உற்பத்தி 52 இலட்சத்திலிருந்து 64 லட்சமாக உயர்ந்துள்ளது.

*பட்டுக்கூடுகளின் உற்பத்தி 26.59 லட்சம் கிலோவிலிருந்து 56 லட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது.

*பட்டுநூல் உற்பத்திக் குறியளவு 2.50 லட்சம் கிலோவிலிருந்து 5.62 லட்சம் கிலோவிற்கு எட்டியுள்ளது.

*22,500 விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

*கடந்த இரண்டு ஆண்டுகளில் இத் தொழிலில் இரண்டு லட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள்.

''வளர்ச்சிக்கும் வழியுண்டு உழைப்பாலே—
சமுதாய வளத்திற்கும் வழியுண்டு பட்டாலே'

என்ற கருத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது, குறுகிய காலத்தில் இத்துறை நிகழ்த்தியுள்ள சாதனைகள்.

தமிழ்நாட்டிற்கான 6வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்துறையின் வளர்ச்சிக்கு 22 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் மல்பரி பயிரிடப்படும் நிலத்தின் பரப்பளவு 75,000 ஏக்கராக வளர்ந்து வேலை வாய்ப்புப் பெறுகிறவர்களின் எண்ணிக்கை 4 லட்சமாக உயரும்.

பட்டுத்தொழிலின் வளர்ச்சியில் அரசின் ஈடுபாடு அதிகமிருப்பதால், இத்தொழில் மேலும் வளர்ந்து இதன் மூலம் வேலை வாய்ப்புப் பெறுகிறவர்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகும் என்பதில் ஐயமில்லை.

பட்டுதனைப் பெருக்குவோம்!
வறட்சியை விலக்குவோம்!




## இத்தனை பெயர்களா?

உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளுக்குச் சான்றோர் சூட்டி மகிழ்ந்த பெயர்கள் பல. அவற்றுள் சில வருமாறு:

அறம்
இரண்டு
உத்தர வேதம்
எழுதுண்ட மறை
ஒன்றே முக்காலடி
ஒத்து
கட்டுரை
குறளமுது
தமிழ் மறை
திருக்குறள்
திருமறை
திருவள்ளுவப்பயன்
திருவள்ளுவர்
திருவள்ளுவன் வாக்கு
திருவறம்
தெய்வநூல்
பழமொழி
பால்முறை
பொதுமறை
பொய்யாமொழி
பொருளுறை
முதுமொழி
முப்பால்
மெய்ஞ்ஞான முப்பானூல்
வள்ளுவம்
வள்ளுவ மாலை
வள்ளுவர்
வள்ளுவர் வாய்மொழி
வள்ளுவர் வாய்ச்சொல்
வள்ளுவ தேவர் வாய்மை
வள்ளுவனார் தெள்ளுதமிழ் வாக்கு
வள்ளுவனார் வைப்பு
வாயுறை வாழ்த்து
வான்மறை

தகவல்: திருமதி து. சாந்தி

[ஆதாரம்: டாக்டர் கு. மோகனராசு அவர்களின் திருக்குறளில் மரபுகள் - சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1981]



# வறட்சி நிவாரணப் பணிகள்

## (மதுரை மாவட்டம்)

**ஜி. ஆனந்தன்**

எங்கள் குழு மதுரையிலிருந்து மறுநாள் (31-5-81) காலை 8 மணிக்குப் புறப்பட்டு கொடைக்கானலில் நடைபெற்ற கோடை விழாவின் நிறைவு நாள் விழா செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்றது.

பிற்பகல் 2 மணிக்கு நாங்கள் கொடைக்கானலை அடைந்ததும் குளிர் எங்களை வாட்டத் துவங்கியது. எங்களுடன் மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி திரு சுந்தரநாதன், உதவி மாவட்ட அதிகாரி திரு நல்லதம்பி இருவரும் எங்களை அன்புடன் வரவேற்றனர். பின்னர் நாங்கள் மதிய உணவு முடித்துவிட்டு சிறிது நேரம் ஓய்வு எடுத்த பின் மாலை 5மணிக்கு கொடைக்கானல் நகராட்சி (டவுன்ஷிப்) அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கு எங்களைச்சந்திப்பதற்காக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பூரணலிங்கம் வந்ததும் பேட்டி துவங்கியது.

மதுரை மாவட்டத்தில் நடந்து வரும் வறட்சி நிவாரணப்பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் எங்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மதுரை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 40 சதவீத மழை பொய்த்து விட்டதால் 67 சதவீத கிராமங்கள் வறட்சியில் பாதிக்கப்பட்டுள்ளன என்று அவா கூறினார். நூற்று எட்டு இலட்ச ரூபாய் செலவில் வறட்சிப் பகுதிகளில் குடிநீருக்காக தனித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேலை அளிக்கும் வகையில் 108 இலட்ச ரூபாய் செலவில் நிவாரணப்பணிகள் நடந்து வருவதாகவும் திரு பூரணலிங்கம் தெரிவித்தார்.

வறட்சிப் பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் 350 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 120 குழாய்க் கிணறுகள் தோண்ட திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக 58 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது தவிர 60 இலட்ச ரூபாய் செலவில் பொதுப் பணித்துறை சார்பில் சாலை மற்றும் குளங்களை மேம்படுத்த 380 வறட்சிப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஊருணிகளை ஆழப்படுத்த 5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதாகவும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திற்காக 130 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதில் குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்காக 69 இலட்சம் செலவழிக்கப்பட இருக்கிறது என்றும், வறட்சியால் பட்டினிச் சாவு எதுவும் ஏற்படவில்லை என்றும் கூறிய அவர் அரசு செய்து வரும் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் வறட்சிக்காக மட்டுமில்லாமல் நிரந்தர ஏற்பாட்டைச் செய்யும் வகையில் அமைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான குடிநீர் வசதியைச் செய்து தரும் வகையில் 30.1 இலட்ச ரூபாய் செலவில் நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட இருக்கிறது என்றும் இந்தப் பணி 1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிவடையும் என்றும் அவர் கூறினார். இந்த விவரங்களை அவர் கூறி பேட்டியை முடித்துக் கொண்டார். பேட்டிக்கு முன்ன

தாக நாங்கள் கொடைக்கானலின் இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கச் சென்றிருந்தோம். கடல் மட்டத்திலிருந்து 6,000 அடி உயரத்தில் அமைந்துள்ள தூண் பாறைகளையும், தற்கொலைப்பாறையையும் நாங்கள் பார்த்து மகிழ்ந்தோம்.

மாலை 6.30 மணியளவில் நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து கோடை விழா பற்றிய செய்தி சேகரிப்பதற்காக கே.ஆர்.ஆர். கலையரங்கை நோக்கி விரைந்தோம். 10 நாட்களாக நடந்து வந்த கோடை விழாவை முடித்துவைத்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் விழா நிறைவுச் சொற்பொழிவை ஆற்றினார். பின்னர், அரசு நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் நடனம் நடைபெற்றது. 137 கிலோ மீட்டர் தூரம் அன்று பயணம் செய்தோம்.

காலை 6 மணிக்கெல்லாம் கண் விழித்ததும் நாங்கள் காலை உணவைக்கூட அருந்தாமல் காபியை மட்டும் குடித்து விட்டு கொடைக்கானல் மலையை விட்டு கீழே இறங்கினோம். காலை 10 மணிக்கெல்லாம் எங்கள் பேருந்து மலை அடிவாரத்தை அடைந்ததும் பசி எங்கள் வயிற்றைக் கிள்ளத் துவங்கியது.


உடனே நாங்கள் வத்தலக்குண்டு என்னும் ஊரிலுள்ள ஒரு ஓட்டலில் காலை உணவை முடித்தோம்.

பிறகு நாங்கள் பழனியை நோக்கி விரைந்தோம். நண்பகல் 12 மணிக்கெல்லாம் பழனியை அடைந்ததும் எங்களை பழனி கோட்டப் பொறியாளர் திரு முத்துசாமி, திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அதிகாரி திரு லிங்கவன், கூடுதல் கோட்டப் பொறியாளர் திரு மோகனராஜ், ஒட்டன் சத்திரம் கோட்ட வளர்ச்சி அதிகாரி திரு பரமசிவம், கொப்பம்பட்டி கோட்ட வளர்ச்சி அதிகாரி திரு நந்தகோபால், திரு பிரபாகர மேனன், நிர்வாகப் பொறியாளர் திரு எஸ். செல்லப்பன் ஆகியோர் அன்புடன் வரவேற்று பழனி தேவஸ்தான ஓய்வு விடுதிக்கு அழைத்துச் சென்றனர். தேவஸ்தான கண்காணிப்பாளர் திரு பாலசுப்பிரமணியம் எங்களை அன்புடன் மூலஸ்தானத்திற்கு அழைத்துச் சென்று தரிசனம் கிடைக்கஏற்பாடு செய்தார். தரிசனம் முடிந்ததும் நாங்கள் கீழே இறங்கி வந்து பகலுணவை முடித்துவிட்டு பழனிப் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடப் புறப்பட்டோம்.

போகும் வழியிலேயே கோட்ட வளர்ச்சி அதிகாரி திரு லிங்கவன் எங்களுக்குப் பழனி ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து விளக்கிக் கொண்டே வந்தார். பல தலைமுறைகளாக நிறைவேற்றப் படாமல் உள்ள திட்டங்களை முதல்வரின் உத்தரவுப்படி 30.79 இலட்ச ரூபாய் செலவில் 291 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஊரகக் குடிநீர்த் திட்டம் ஊரகச் சாலைத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், குடிசைகளுக்கு மின்விளக்குத் திட்டம் பேருந்து வழித்திட்டங்களை மேம்படுத்துதல், ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இதற்குள் கலையம்புத்தூர் கிராமம் வந்துவிடவே, நாங்கள் கீழே இறங்கி சக்கரை கவுண்டன் குளம் கண்மாயைப் பலப்படுத்த 15 ஆயிரம் ரூபாய் செலவில் நடந்து வரும் பணியைப் பார்வையிட்டோம். அதன்பின் நாங்கள் செய்க்காரப்பட்டியலில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை மற்றும் தாய்சேய் நல விடுதியைப் பார்வையிட்டோம். இதே போன்ற மருத்துவமனை மற்றும் தாய்சேய் நல விடுதிகள் அமரம் பண்டி, அய்யம்பாளையம், பால சமுத்திரம், சின்ன கலயமுத்தூர், கரிகாரன் புதூர் ஆகிய இடங்களிலும் கட்டப்பட்டுள்ளதாக நிர்வாகப் பொறியாளர் திரு சவுந்தரபாண்டியராஜ் எங்களிடம் தெரிவித்தார். இந்த மருத்துவமனைகள் மூலம் 50 ஆயிரம் மக்கள் பலனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பழைய ஆயக்குடியில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூடத்தை நாங்கள் அடுத்த நாள் போய்ப்பார்வையிட்டோம். இதே போல புதிய ஆயக்குடி விநாயகபுரம், காதநாயக்கன்பட்டி, கோதை மங்கலம், கலையம்புத்தூர், அய்யம்பாளையம், ஒவளாபுரம், பெரிய கலையம்புத்தூர், காவலப் பட்டி ஆகிய இடங்களிலும் பள்ளிகள் கட்டப்பட்டுள்ளன.

பழைய ஆயக்குடியுடன் எங்களது பயணத்தை முடித்துக் கொண்டு நாங்கள் திண்டுக்கல்லுக்குத் திரும்பினோம். திண்டுக்கல் கோட்டாட்சி அலுவலர் அலுவலகத்தில் எங்களை அமரச் செய்த திரு லிங்கவன் எங்களுக்கு இரவு உணவிற்கு ஏற்பாடு செய்தார். இரவு சுமார் 8 மணிக்கு நாங்கள் இங்கிருந்து புறப்பட்டு ரெயில் நிலையத்தை அடைந்



தோம். இரவு 8.50 மணிக்கு பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயில் வந்ததும் எங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பெட்டியில் நாங்கள் ஏறினோம். அதுவரை எங்களோடு இருந்த திரு. லிங்கவன் கையை அசைத்து எங்களிடமிருந்து அன்புடன் விடைபெற்றுக் கொண்டார். அனைவருக்கும் சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள மக்கள் தொடர்புத்துறை அதிகாரி திரு. நடராஜன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.


213 கிலோ மீட்டர் தூரம் அன்றையப் பயணம் அமைந்திருந்தது. வறட்சிப் பகுதியில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் வறட்சியைப் போக்குவதாக மட்டும் அமையாமல், எதிர்காலத்தில் வறட்சி வந்தாலும் மக்களைப் பாதிக்காத வகையில் இருப்பதை நேரில் கண்டறிந்த திருப்தியுடன் நாங்கள் சென்னை திரும்பினோம்.

வறட்சிப் பணிக்காக எத்தனைக் கோடிப்பணத்தைஇறைத்தாலும் பரவாயில்லை. வறட்சிப் பணிக்காகத் தமிழக அரசு எடுத்தப் புரட்சித் திட்டங்களை அந்தப் பகுதி மக்கள் மனதாரப் பாராட்டவும் நன்றி சொல்லவும் தவறவில்லை.


மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வறட்சியால் பாதித்துள்ள பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுப் பயணம் செய்து, வறட்சி நிலவரங்களை நேரில் கண்டறிந்து, நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல் பல்வேறு அமைச்சர்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து வறட்சி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தியிருப்பது, ஆங்காங்கே எதிரொலிக்கிறது. இனி வறட்சிப் பேயை விரட்டுவோம் என்பது போல அரசு நடவடிக்கை அமைந்திருந்தது. **(முற்றும்)** ★

# ரசிகமணி டி.கே.சி.




கவிமணியுடன்....



ஐந்தருவிச் சாலை வீட்டின் வாயிற்படியில் டி.கே.சி.யும் நண்பர்களும்.(இடது புறமிருந்து) 1. மீ. ப. சோமு, 2. டி.கே.சி. 3. டி.கே.சி. பேரன் தீப. நடராஜன், பின் வரிசை: 1. டி.கே.சி.யின் மருமகன் மத்தளம் பாறை தீத்தாரப்ப முதலியார் 2. டி.கே.சி. அன்பர்களில் ஒருவரான திருக்குற்றாலம் தாகூர் தோட்டத்து அதிபர் இராமச்சந்திரன் பிள்ளை.




கல்கியுடன்...



இலஞ்சி குமரன் கோயிலில் மணிவிழா





டி.கே.சி. குடும்பம், டி.கே.சி.க்குப் பின்னால் நிற்பவர் செயலாளர் பலராம ராஜா. தூணை ஒட்டித் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் சிறுவன் பேரன் குமாரசாமி. அடுத்த பேரன் நடராஜன். பின்னால் நிற்பது டி.கே.சி.யின் அன்புக்கும் ஆதரவுக்கும் உரிய சமையல்காரர் சங்கரன், டி.கே.சி.க்கு அருகில் திண்ணையில் உட்கார்ந்திருப்பது டி.கே.சி.யின் சகோதரி 2. மருமகள் 3. பேத்தி 4. டி.கே.சி.யின் மனைவி திருமதி பிச்சம்மாள் அண்ணி.



நோயாளிகளுக்கு விவரச் சீட்டு..

# கிராமப்புற மருத்துவ மையம்

சு.எல்.ராஜேந்திரன்

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சோழங்க நல்லூர் ஊராடசியில் உள்ளது குடுமியாண்டித் தோப்பு என்கிற சின்னஞ்சிறு கிராமம். முஸ்லிம் பெருமக்களும் மீனவ சமுதாயத்தினரும் பெருமளவில் வாழும் இக் கிராமம் சென்ற சில நாட்டுகளுக்குமுன்பு வரை மருத்துவ வசதி அற்றதாக இருந்தது.

தெற்கு வடக்காக நீண்டு கிடக்கின்ற மாமல்லபுரம் கிழக்குக் கடற்கரைச் சாலையின் ஒரு ஓரத்தில் உள்ள குடுமியாண்டித் தோப்பில் உள்ள ஒருவருக்கு ஏதாவது உபாதை என்றால், 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அரசு மருத்துவமனையே இல்லை. சென்னைக்கருகிலுள்ள திருவான்மியூரிலும், மாமல்லபுரத்துக்கு அருகே உள்ள கோவளத்திலும் உள்ள மருத்துவமனைக்குத்தான் அந்த கிராம மக்கள் வந்தாக வேண்டும்.

பெரிய மருத்துவமனையென்றால் ஏறத்தாழ இருபது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இராயப்பேட்டை-அரசு பொது மருத்துவமனைதான்!

குடுமியாண்டித்தோப்பு வாசிகளின் இந்த மருத்துவ வசதியின்மையை நீக்கிட உறுதி பூண்டனர் சென்னை மருத்துவக் கல்லூரியின் மருத்துவ நிவாரணக் குழுவினர் (Medical Relief wing, Staff & Students of Madras Medical College) அரசுக்கு உதவும் நன்னோக்குடன், சேவை நிறுவனத்தோடு (VoluntaryAgency) இணைந்து கிராமப்புற மக்களுக்கு மட்டுமின்றி - நகர்ப்புறங்களிலுள்ள மருத்துவ வசதி கிட்டாத பகுதி வாழ் மக்களுக்கும் தூய தொண்டாற்றி வருகிறார்கள் இக்குழுவினர்.

## குழுவின் தோற்றம்

டாக்டர் ஜே.ஏ.எஸ். மாசிலாமணி என்பவரால் 1952ல் துவக்கப்பட்ட இந்நிவாரணம் மூலம் சென்னையை ஒட்டியுள்ள படப்பை, பாக்கம், பள்ளிக்கரணை, அனகாபுத்தூர் போன்ற கிராமவாசிகள் பெற்ற மருத்துவ உதவி மகத்தானதாகும்.

1956ல், டாக்டர் ஜே.ஏ.எஸ். மாசிலாமணி அவர்களின் மறைவுக்குப் பிறகு, 1974 வரை டாக்டர் ஏ. வேணுகோபால் என்பார் இக்குழுத் தலைமையேற்றுச் சிறப்புறப் பணி புரிந்தார்.

1974 முதல் கிராமப்புற மருத்துவ நிவாரணக்குழுவின் தலைமைப் பொறுப்பேற்று சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறார் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ்.

தாம் பெரும் பொறுப்பு வகிக்கிற மருத்துவமனைப் பணிக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படாமல்-முக்கியமாக வேறு எந்த விதப் பயனும் கருதாமல்-விடுமுறை நாட்களை வேறு விதமாகக் கழிக்கலாம் என்கிற இளமைத் தனமான எண்ணங்களுக்கு ஆட்படாமல் தலைமை மருத்துவரிலிருந்து மருத்



மருத்துவமையத்தின் நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சரிடம் விளக்குகிறார் மருத்துவக் குழுத் தலைவர்.



இதுவரை மருததுவ நிவாரணக் குழு இயங்கிய பழைய ஆரம்பப் பள்ளிக் கட்டடம்.



புதிதாகத் திறக்கப்பட்ட கிராமப்புற மருத்துவ மையக் கட்டடம்.

துவக் கல்லூரி மாணவ மணிகள் சிலரும், செவிலியர்களும், குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்களும், கண், பல் மருத்துவமனையினரும் ஒருங்கிணைந்து இப்படிப் பணியாற்ற வருவது கிராமப்புற மக்களின் நெஞ்சில் நம்பிக்கை உணர்வூட்டுவதாக உள்ளது.


டாக்டர் ஆர். நஞ்சண்டராவ் தலைமையில் வளரும் இயக்கமான கிராமப்புற மருத்துவ நிவாரணக்குழு பிரசித்திபெற்ற மருத்துவத் துறையினர் சிலரைக் கொண்டுள்ளது.

அரசுப் பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் வி. சிவராஜ் கௌரவத் தலைவராகவும், டாக்டர் லலிதா காமேஸ்வரன் துணை கௌரவத் தலைவராகவும் உள்ள இக் குழுவின் முழுத் தலைமைப் பொறுப்பு நிர்வாகமும் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவுடையதாகும். டாக்டர்கள் எஸ். காமேஸ்வரன், ஆர். சரத்சந்திரா, எஸ். பாலகிருஷ்ணன், வி. டி பலராமன், ஏ. எம். செல்வராஜ், பி. பெருமாள் ராஜன், ஜே. ஜி. கண்ணப்பன், ஈ. டி. செல்வம், கே. பவானி, சி. திருஞானசம்பந்தம், ஜெயம், குணசாகரன், கணபதி ஆகியோர் அங்கத்தினர்கள் டாக்டர் சி. சின்னசாமி பொருளாளர். டாக்டர் டி. ஏ. எஸ். குமார் செயலாளர்.

சில நாட்களுக்கு முன்னாலே, சென்னை மாநகரில் உள்ள 15 ஆயிரம் காவல் துறையின் குடும்பத்தார்க்கும் இக்குழுவினரே சென்று மருத்துவப் பரிசோதனை - சிகிச்சை-உதவி முதலியன அளித்திருக்கிறார்கள்.

இத்தகைய பணிகளில் எல்லா மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகளும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதும் இங்கே சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

கிராமங்களில், மருத்துவக் கருவிகளையும், மருந்துகளையும் வைத்துக்கொண்டு



முருங்கைக் கீரையால் கண்பார்வையைக் காக்கலாம்.

பாதிக்கப்பட்டோருக்குச் சிகிச்சை அளிக்கச் சிறந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது அரிதாகும். அதைப் பார்த்தால் முடியுமா? இதே குடுமியாண்டித்தோப்பு கிராமத்தில் எல்லாவற்றையும் பாரவண்டியிலேயே வைத்துக் கொண்டு, நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட காலமும் இருந்தது.

பிறகு, விடுமுறை நாட்களில் தானே மருத்துவர்கள் வருகிறார்கள் என்பதால்-அந்த ஊர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பாடசாலைக் கட்டடம், ஞாயிறுதோறும் இக் குழுவினருக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தரப்பட்டது.

மத்தியானம் 2 மணியிலிருந்து சாயங்காலம் 5 மணி வரைதான் மிகப் பழையதும், விளக்கில்லாததுமான அக் கட்டடத்தில் மருத்துவப்பணியினை நிகழ்த்த முடிந்தது. சிகிச்சைக்குப் பணம் இல்லை. முடிந்தால் ஐந்து பைசா, பத்துப் பைசா அங்கே வைக்கப்படும் உண்டியலில் போடலாம். அதுவும் கட்டாயமில்லை.

இதற்கென அங்கே ஒரு நிரந்தரக் கட்டடமே கட்டுவதென ஏற்பாடாகி, டாக்டர்கள் டி.ஏ.எஸ்.குமார், வி. ரவிச்சந்திரன், டி.துரைராஜன் மூவரின் பெருமுயற்சியாலும், குடுமியாண்டித் தோப்புவாழ் மக்களின் ஒத்துழைப்போடும் மூன்றே ஆண்டுக் காலத்தில் அந்த எண்ணம் ஈடேறியது. சுமார் 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டது.

மூன்றாண்டுக் காலத்தின் முன்னே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு, சௌந்தரராஜன் தலைமையில், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்ற இக் கட்டடம் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் வி. சிவராஜன் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே அவர்களால் 28.7.81 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## கட்டடத் திறப்பு விழா

அவ்விழாவில் - மருத்துவ நிவாரணக் குழுத் தலைவர் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ் வரவேற்புரையாற்ற, சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் செயலாளர் டாக்டர் டி.ஏ. எஸ். குமார் அறிக்கை படிக்க, கிராம முக்கியஸ்தர்கள் ஏ.ஆர். பக்ருதீன், ஏ.எஸ்.மீரான் அப்துல் கனி, அகமது பாஷா, ஆனூர் செகதீசன் எம்.எல்.ஏ., பம்மல் நல்ல தம்பி எம்.

எல்.ஏ ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். டாக்டர் பி. எஸ். அருண்குமார் நன்றி கூறினார். ஊரார் சார்பில் எல்லோருக்கும் மாலை அணிவிக்கப்பட்டது.

'மருத்துவ நிவாரணக்குழு - சென்னை மருத்துவக் கல்லூரி சுகாதார நிலையம் - குடுமியாண்டித்தோப்பு' என எழுதப்பட்ட அக்கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டதாவது;

''இந்தியாவிலேயே நம்முடைய தமிழக அரசுதான் ஆண்டுக்கு 110 கோடி ரூபாயை அதாவது 10.5 சதவீதம்தொகையை மருத்துவத்துறைக்கெனச் செலவிட்டு வருகிறது. அண்மையில் சென்னை வந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்த மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் சங்கரானந்த் அவர்கள் இதற்காக நம்முடைய அரசைப் பாராட்டியதோடு மற்ற மாநிலங்களும் இந்த வகையில் தமிழகத்தைப் பின்பற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் போகிறேன் என்றும் கூறிச் சென்றார்.


மருத்துவப் பரிசோதனை


சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ நிவாரணக் குழு

மருந்துகளுக்காக மட்டுமே நம்நாட்டில் 18 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறோம். இன்னும் செலவிட மேலிடத்தில் கேட்டுவருகிறோம். தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன என்றால், அவைகளிலெல்லாம் 385 சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 15 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. ஒரு ஒன்றியத்தில் ஒரு சுகாதார நிலையம் என்றிருப்பதை இரண்டு சுகாதார நிலையம் ஆக்கப்படும்.

''இப்படிப்பட்ட முகாம்களில் பணியாற்றுவோர் யாரானாலும் - டாக்டர்களானாலும் மருத்துவ சேவகிகளானாலும் அவர்கள் தொண்டுக்கு நான் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இந்தச் சுகாதார மையத்திற்கான மருந்துக்காக ஒதுக்கப்படும் தொகையை அதிகரிக்கவேண்டுமென்றும், வாரம் ஒருமுறை விடுமுறையில் மட்டுமே வருகிற டாக்டர்கள் வாரம் மூன்று முறை வந்து செல்ல வகை செய்யவேண்டும் என்றும், டாக்டர்கள் இப்படிப்பட்ட முகாம்களுக்கு வந்து போகத் தனியே வாகன வசதி செய்து தரவேண்டுமென்றும் கேட்டார்கள். இதன்மீது அரசு மூலம் அவசர நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே மிகவும் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.''

—இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்அவர்கள் பேசினார்.

**முந்திய வார மருத்துவ முகாம்**

இந்தக் கட்டடத் திறப்பு விழாவிற்கு முந்திய வாரம் குடுமியாண்டித் தோப்பில் நடந்த மருத்துவ நிவாரணக் குழுவின் பணியை நேரில் கண்டறிய நாம் சென்றிருந்தோம்.

டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ், டாக்டர் ஜெயம் ஆகியோர் தலைமையில்—டி.ஏ.எஸ். குமார், டி. துரைராஜன், எஸ். பழனியப்பன் சமரேஷ்பிஸ்வாஸ், பி. செந்தில்வேல், ஜி. ராஜேந்திரன், பி. என். ஜார்ஜ்சாம்ராஜ், பி.ஆர். நாகராஜன், பி. எஸ். அருண்குமார் ஜி.வெங்கடேஷ்—ஆகிய டாக்டர்களும் இறுதியாண்டு மாணவர்களுமாக வருகை தந்திருந்தனர் இலவசமாகப் பணியாற்ற!

செல்வி பி. விஜயலட்சுமி, செல்வி பி. கௌசல்யா ஆகிய செவிலியர் மாணவிகளும் திருமதி வின்ஃபிரட் என்கிற செவிலியர் ஆசிரியையும் வந்திருந்தார்.

ஆரம்பப்பள்ளியின் பழைய கட்டடத்தில் முகாம். நாங்கள் போய்ச் சேர்ந்து அரை மணி நேரம் கழித்து அந்தப் பள்ளியின் சாவியை வைத்திருப்பவரைத் தேடிப்பிடித்தார்கள். கதவு திறக்கப்பட்டது. பிள்ளைகள் அமர போடப்பட்டிருந்த பலகைகளை - இரண்டு பக்கமும் ஆதாரத்தோடு சற்றே உயரநிறுத்தி மருந்துவ சீட்டு எழுதித்தரவும், மருந்துகள் வைக்கவும் தக்கபடி ஆக்கினார்கள்.

ஆசிரியர்களுக்கான நாற்காலிகள் டாக்டர்களுக்கும், அவர்கள் அமரச்செய்து பார்க்கும் நோயாளிகளுக்கும் இருக்கைகளாயின.

மேஜையின் மீது மருந்துகள் மாத்திரைகள் குவிக்கப்பட்டன.

உட்கார நாற்காலியில்லாத நிலையில் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ், அங்குமிங்கும் நடந்தவாறே நாய்க்கடிக்குக் கட்டுப்போடுவதையும், பூச்சிப்பல்லைப் பிடுங்குவதையும், மருந்துச்சீட்டுத் தரப்படுவதையும் கண்காணிக்கிறார். அவசியம் நேரும்போது உதவுகிறார். சில குழந்தைகளுக்குப் பார்வைக் குறைவு என்று கொண்டு வந்தனர். அவர்களைப் பரிசோதித்து மருந்து தந்த டாக்டர் ஜெயம், குடிசைவாசிகளிடம் - முருங்கைக் கீரைக் கொத்து ஒன்றை ஒடித்துக் காட்டி ''இதில 'ஏ' வைட்டமின் அதிகம் இருக்கு. முருங்கைக்கீரை நிறைய சேர்த்துக்கிட்டா கண்பார்வை தெளிவாக நீண்ட காலத்துக்கு இருக்கும்— இதுக்குச் செலவும் இல்லியே''என்று விளக்கிக் கொண்டிருக்கிறார்.



பல்போனால் சொல்போச்சே!



ஊசிக்கே இப்படியென்றால்...



நாய்க்கடிக்குச் சிகிச்சை

''குடிசை வாசிகளிடம் பேதமறப் பழகுவதாலேயே டாக்டர் ஜெயத்தை ''ஸ்லம் குவீன்'' என்று மருத்துவ வட்டாரத்தில் அழைப்பதுண்டு'' என்கிறார் டாக்டர் ஆர். நஞ்சுண்டராவ்.

பெருக்கக்கூட இல்லாமல் கிடந்த அந்த ஆரம்பப்பள்ளியில், எந்த வசதியின்மையையும் பொருட்படுத்தாமல் மருத்துவப் பணியாற்றும் அந்தக் குழுவினர் நமக்கு அதிசயமாகத் தெரிந்தார்கள்.

**இனி துன்பமில்லை**


இப்போது புதிய கட்டடம் திறக்கப்பட்டுவிட்டதால் அப்படிப்பட்ட சங்கடங்களுக்கு இனிமேல் சந்தர்ப்பமில்லை.



'அனீமியா'

இப்படிக் கட்டடம் அமைந்தது குறித்தும், மருத்துவநிவாரணக் குழுவினரின் பணி பற்றியும் அப்பகுதியில் வாழும் படித்த இளைஞர் ஒருவரிடம் கேட்டபோது அவர் இப்படிச் சொன்னார்—''எங்க ஊருக்குக் கிடைச்ச பாக்கியம் இது. ஈஞ்சம்பாக்கத்துல கூடிய சீக்கிரமே ஒரு பிரசவ ஆஸ்பத்திரியும் வரப்போவுதுன்னாங்க. அதுவும் வந்துட்டா, அந்தக் குறையும் நீங்கீடும். இங்கே இப்படி ஆஸ்பத்திரி இல்லாமெ நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுங்களா-சாதாரண 'ஏபிசி' மாத்திரை ஆறு...பத்துப் பதினைஞ்சி பைசா இருக்குமுங்க. இதுக்காக ஒருவாரம் இங்கேயிருந்து கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு பஸ்ல போயிட்டு வர்றதுன்னா பத்து ரூபாய்க்கு மேலே ஆயிரும். இப்ப அப்பிடி ஆவாது பாருங்க! வாரம் ஒரு தரம் வந்தாலும் ஏழு நாள் மருந்தைக் கையில் குடுத்துடறாங்களே!

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி
**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR

## மாணவர் பக்கம்

# நாட்டுப்பணியில் நாளைய தலைமுறைகள் !



உதகமண்டலத்திற்குச் சிறப்புத் தருவது ஊட்டி ஏரி. படகு சவாரிக்கும், பரசவமூட்டும் காட்சிச் சிறப்பிற்கும் நிலைக்களனாக இருப்பது அது. 157 ஆண்டுகளுக்கு முன், உதகை நகரத் தந்தை ஜான் சல்லிவன் பெருமகனாரால் செயற்கையாக எடுக்கப்பட்டு, இயற்கைக் கோலம் கொண்டு நிகழ்ந்துவந்த, அவ்வேரிக்கு அண்மைக் காலத்தில் ஆபத்து சூழ்ந்திருந்தது.

அதிவேகமாகப் பரவும் நீர்க் களையின் (Water Hyacinth) அசுரப் பிடியில் சிக்கி அலங்கோலப்பட்டிருக்கும் ஊட்டி ஏரியின் காட்சி, ஒவ்வொருவர்தம் உள்ளத்திலும் அவலப் பெருக்கைச் சாய்த்து நிற்கிறது. ஏரியின் மிகப் பெரும் பகுதி, பாதிக்கப்பட்டு காடு மயமாக ஆக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில், நாட்டு நலப் பணித் திட்டத்தின், நாடு தழுவிய கொள்கையாக வகுக்கப் பட்ட, புறச்சூழ்நிலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஊட்டி ஏரிக்கு நல்வாழ்வு அமைந்த பேறும் கிட்டியது.


சென்னைப் பல்கலைக் கழகத்தில் அமைந்த 75 கல்லூரிகளைச் சார்ந்த, 250 கல்லூரி மாணவர்கள் உதகையில் முகாமிட்டனர். அவர்கள் நாட்டுப் பணித் திட்ட மாணவர்களும், பிற இளைஞர்களுமாவர். உதகை அரசு கலைக் கல்லூரி நாட்டுப்பணித் திட்டச் சார்பில் அவர்கள் முகாமிட்டிருந்தனர்.

ஏரிக்கரையோர நீரில் இறங்கியும், கரைப் பகுதிகளில் நின்றும், படகுகளில் இருந்தும் களைகளைத் தள்ளிக்கொடுத்தும் ஆற்றிய பணிகள் அளப்பரியன எனலாம். சான்றாக, கரைப் புறம்பே, மலைமலைகளாகக் குவிக்கப்பட்ட களைகள் நின்றன. மிகக் கடுமையான உழைப்புத் திறன் தேவைப்பட்ட இப்பணியை, மாணவர்கள் தங்களோடு இணைந்து ஏரிக்குள் இடுப்பளவு தண்ணீரில் நின்று செயல்பட்டு ஆர்வமுடன் செய்தனர். $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் அளவுக்குக் களைகள் அப்புறப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளில் தெளிந்த தண்ணீரைக் காண முடிந்தது.

சென்னை குருநானக் மற்றும் காயிதே மில்லத் கல்லூரிகளைச் சேர்ந்த 100 மாணவர்களின் கூட்டு முகாம் உதகையில் அமைந்து, உதகை ஏரி களையகற்றும் பணியில் ஆர்வமும் செயல்திறனும் காட்டியது. பின்னர் கோவை நிர்மலா மகளிர் கல்லூரியும் இச்சேவையில் ஈடுபட்டது. நாட்டுப்பணியில் நாளைய தலைமுறைகளின் இந்த அரிய தொண்டினை அனைவரும் பாராட்டினர்.

**பழனி, அருள்மிகு பழனி ஆண்டவர் மகளிர் கலைக் கல்லூரி மாணவிகள் பங்குகொண்ட நாட்டுப்பணி இயக்கத்தின சுற்றுப்புறச் சூழ்நிலை வளர்ச்சி முகாமை 11.6.'81 அன்று கொடைக்கானல் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் தமிழகக் கல்வித்துறைச் செயலர் திரு சி. இராமதாஸ், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் துவக்கி வைத்தார்.**

கொடைக்கானல் கரடிச்சோலை அருவி அருகில் 1.2. எக்டேர் பரப்புள்ள மலைச்சரிவு இக்கல்லூரிப் பணிக்காக ஒதுக்கப்பட்டது. அங்கு 1980ல் நடப்பட்ட பைன் நாற்றைச் சுற்றி 45 செ.மீ. ஆழத்திற்கு மண்ணைக் கொத்தி பதப்படுத்தியும், கற்களை அடுக்கிக் கரை கட்டியும், நாற்று வளராத இடங்களில் குழிகள் வெட்டி புதிய நாற்றுக்களை நட்டும் இம் மாணவியர் பணியாற்றினர்.





# இளம் பேச்சாளர்

நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவ மணிகள், பல துறைகளில் சிறந்து விளங்கிட, நாம் அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும்.

கதை, கட்டுரை, நாடகம், பேச்சு, சித்திரம், நடனம் இப்படி ஒவ்வொரு துறையிலும் மாணவர்கள் தம் திறமைகளை வெளிப்படுத்தக் காண்கிறோம். சில மாணவர்கள் பல துறையிலும் திறம் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். அந்த வகையில் திரு பெரு. மதியழகன் பல துறையிலும் சிறந்து விளங்குவதைப் பார்க்கிறோம்.

இவர், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர். 19 வயது இளைஞரான இவர் 1974 ஆம் ஆண்டு சென்னையில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கு நடைபெற்ற மாநில பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர்.

சென்னை எஸ். பி. சி. ஏ. நடத்திய பேச்சுப் போட்டியிலும் இவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வெற்றிபெற்று, சுழற் கோப்பையைப் பெற்றுள்ளார். தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவிலும் இவர் பேச்சுக்காக இரண்டாவது பரிசு பெற்றார். அனைத்துக் கல்லூரிப் பெரு மன்றத்தின் சார்பில் நடந்த கட்டுரைப் போட்டியிலும் முதல்பரிசு பெற்றுள்ளார்.

வெளிநாடுகளில் பேனா நண்பர்களைப் பெற்றுள்ள இவர், சித்திரம் வரைவதிலும், புகைப்படக் கலையிலும் சிறந்து விளங்குகிறார். கல்லூரி விடுதியில் கலைமகள் கழகம் என்னும் தமிழ் மன்றத்தின் செயலாளரான இவர், தேசிய மாணவர் சேவை செய்தும் சான்றிதழ் பெற்றுள்ளார். இவர் ஒரு கவிதைத் தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதன் பெயர்: 'ஊமை ராகங்கள்'

—பி. வி. ஜி.

## எதற்கு?

வாய் எதற்குத் தம்பி ?
வாய்மை பேசிட !

காது எதற்குத் தம்பி ?
கருத்தைக் கேட்டிட !

உடல் எதற்குத் தம்பி ?
உழைத்து வாழ்ந்திட !

கண் எதற்குத் தம்பி ?
கவனமாய்ப் படித்திட !

மூக்கு எதற்குத் தம்பி ?
மணம் நுகர்ந்திட !

—வே. அந்தோணிமுத்து.

## சில விலங்குகள் - சில விளக்கங்கள்





1) நீலத்திமிங்கலம் முழுவேகத்தில் செல்லும் கப்பலை, எதிர்த் திசையில் 50 கிலோ மீட்டர் வேகத்தில், ஏறத்தாழ 5 மணி நேரம் தொடர்ந்து இழுத்துச் செல்லும் சக்தி உடையது.

2) ஒரு கோடி எலிகள், தடையில்லாவிட்டால 5 ஆண்டில் 940,369,969,152 எலிகளாக இனப்பெருக்கம் செய்யுமளவிற்குத் திறன் படைத்தது.

3) யானை தன் காதுகளை அசைப்பதை 30 நிமிடங்கள் நிறுத்திவிட்டால் உடலில் சூடு அதிகமாகி இறந்துவிடும்.

4) புலி தன் இரையைக் கொல்லும் போது அதன் முன்கால் வீச்சு, 100 கிலோ எடை 50 கிலோ மீட்டர் வேகத்தில் மோதும் சக்திக்குச் சமம்.

5) கங்காரு எலி என்ற ஒருவகை பாலூட்டி தன் வாழ்நாளில் நீர் அருந்தாது.

6) தவளையின் வாயைச் சிறிது நேரம் திறந்த நிலையில் வைத்திருந்தால் இறந்து விடுவதற்குக் காரணம், அதனால் வாய் திறந்த நிலையில் சுவாசிக்க முடியாது.

7) பிறந்த ஆறுமாதத்திலேயே பருவமடைந்துவிடும் விலங்கான முயல், ஒரு பிரசவத்தில் 7 குட்டிகள் வரை ஈனுகின்றது.

8) வௌவால் பறக்கும் போது காதுகளும், வாயும் மட்டுமே வேலை செய்கின்றன. கண்களுக்கு வேலை இல்லை.

9) உலகிலேயே மிகப்பெரிய உயிரினம் திமிங்கலம். 100 அடி நீளம்; 136 டன் எடை.

நன்றி: 'கலைக்கதிர்'

# தமிழகத்தின் இதய ஒலி

மீ.ப.சோமசுந்தரம்
இயக்குநர் தமிழ்ப் பழங்கலை இயக்ககம்


டி.கே.சிதம்பரநாதமுதலியார் என்றால், தமிழ்நாட்டின் இலக்கிய அரசர்களிலே அவர் ஒரு வேந்தர்! வேந்தர் என்று அழைப்பதற்குரிய அத்தனை இலக்கணங்களும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

டி.கே.சி என்ற அந்த மூன்று எழுத்துக்களுக்குள்ளே அப்படி என்ன தத்துவம் பொதிந்து கிடக்கிறது?

எத்தனையோ தமிழறிஞர்கள் செங்கோல் ஓச்சிய மாநிலமாகும் நமது தமிழகம்! அந்த இலக்கிய மன்னர்களுக்கும் இந்த இலக்கிய வேந்தர்க்கும் அப்படி என்ன வித்தியாசம்.?

சமுதாய வாழ்வில் எத்தனை ஆயிரம் ஏற்றத் தாழ்வுகளை வைத்துக் கொண்டிருக்கிறோம் நாம்! சூரபதுமன் தலையைப் போல ஒருவகையான ஜாதி வித்தியாசத்தின் தலையைக் கிள்ளினால் வேறொரு புதிய ஜாதி வித்தியாசம் தலை தூக்குகிறது! ஒரு இன வேற்றுமை மறைந்தால் உடனே இன்னொரு இன வேற்றுமை முளைக்கிறது! இப்படிப்பட்ட சூரபதுமச் சமுதாயத்தில் எல்லா வேற்றுமைகளுக்குள்ளும் தமிழ் என்ற ஒரு பெரிய ஒற்றுமையை நிலைநாட்டினவர் டி. கே. சி.

பல துறைகளில் பல மாறுபட்ட கொள்கைகளோடு நவக்கிரகங்களைப் போல, ஒருவர் முகத்தை இன்னொருவர் பாராமல் குந்திக் கொண்டிருக்கும் பல்வேறு தமிழ்ப் பிரமுகர்கள் எல்லாம் டி.கே.சி. சந்நிதானத்தில் கூடிக் குலாவிச் சிரித்து மகிழ்ந்து உறவாடிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். ஒரு தனி மனித ஆற்றல், இப்படி ஒரு அதிசயத்தை நிகழ்த்தியது என்றால் அது எப்பேர்ப்பட்ட அமர சாதனை என்பதை எண்ணிப் பாருங்கள்!



ஜாதி, சமய, மொழி எல்லைகளையெல்லாம் தாண்டி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் வயது வித்தியாசங்களையும் கூடக் கடந்து, அனைவரும் டி.கே சியின் இலக்கிய அரங்கமாகிய வட்டத் தொட்டி என்ற ரசிக மணியரங்கிலே சரிநிகர் சமானமாக உட்கார்ந்து தமிழ்க் கவிதையிலும், தமிழ் மொழியிலும், தமிழ்நாட்டுக் கலைகளிலும், தமிழர் பண்பாட்டிலும் ஒரு காதல் வெறியே கொள்ளும்படி மனித இதயங்களிலே ஒரு ரசவாதம் செய்த அற்புத மனிதர் ரசிகமணி

ராஜாஜி ஒரு சமயம் எழுதினார்:

''தமிழ் என்றால் என்ன, கவிதை என்றால் என்ன என்பதை எனக்கு ஓரளவு புகட்டிய ஆசிரியரிடத்தில் எனக்கு வரம்பற்ற அன்பும் பட்சபாதமும் இருக்கத்தான் செய்யும். ஆகையால் நான் அவருக்காகப் பரிந்து பேசினால் அதற்கு ஒரு வேளை மதிப்பு இராது. ஆயினும் என் பேச்சல்ல; நானே ஒரு அத்தாட்சியாவேன், டி.கே.சி.யின் தமிழ்ப்பணிக்கும் பெருமைக்கும் பேச்சைவிடப் பொருட்சான்றே வலியதாகும். என்னைப் போன்ற ஒருவனையும் கூடத் தமிழாசை கொள்ளச்செய்தவர் டி.கே.சி.தான்! இதை இப்போது பலர் அறியச் சொல்கிறேன். உபசாரமல்ல, உண்மை!


''என்னைத் தள்ளுங்கள். தமிழ் நாட்டில் தமிழ்ப் பணிக்கு நல்ல வீரச்சேனை சேருமாறு இக்காலத்தில் உண்டாக்கியவர் டி.கே.சி என்றே சொல்லுவேன். பலர் பல அரிய பணிகள் செய்திருக்கிறார்கள். செய்தும் வருகிறார்கள். ஆனால் டி.கே.சி.யின் தமிழ்ப்பணி ஒரு தனிச்சிறப்புவாய்ந்தது. இதை வேறு யாரும் செய்ததில்லை.!'' இது ராஜாஜியின் குறிப்பு. ஒவ்வொரு சொல்லையும் அடைமொழியையும் தங்கத்தை நிறுக்கிற நுட்பமான தராசில் வைத்து நிறுத்துப் பேசுகிறவர் ராஜாஜி. அவருடைய பொன் மொழிகளைத்தான் மேலே கொடுத்திருக்கிறேன்.

தமிழுக்கு நல்ல வீரச் சேனையை உருவாக்கியவர் டி.கே.சி. என்றால் எப்படி?

நெல்லை வண்ணார்பேட்டையில் அவர் இருந்தபோதிலும் சரி, சென்னையிலும் சரி, திருக்குற்றாலத்திலும் சரி, அவர் எங்கு போனாலும், இருந்தாலும்அவர் அங்கே ஒரு நல்ல வீரச்சேனை அவரைச் சூழ்ந்து வட்டமிட்டுக் கொண்டிருக்கும்! அதுதான் வட்டத் தொட்டி! பத்திரிகை அதிபர்கள், கவிஞர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், அரசியல் தலைவர்கள், சங்கீதக் கலைஞர்கள், வள்ளல்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், ஆளுநர்கள் என்று அந்த வீரச் சேனையில் மணி மணியான வீரர்களைப் பார்க்கலாம்.!

டி.கே.சி. ஒரு பெரிய செல்வச் சீமான். செவிக்கும் நாவுக்குமாகச் சேர்ந்து ஒரே விருந்து மயமாக இருக்கும் அவருடைய வீடு. அங்கே ஒருமித்துக் கூடுகிறவர்கள் எல்லாம் வெளியே தங்களுக்குள் மல்யுத்தம் செய்கிறவர்கள்! ஆனால் வட்டத் தொட்டிக்குள் ஒரே ஆனந்த ஒருமைப்பாடு! ராஜாஜி, பெரியார் ஈ.வே.ரா. காமராஜர், பி.டி.ராஜன், ஆர். கே. சண்முகம் செட்டியார், குமாரசுவாமி ராஜா, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இப்படிப் பல தலைவர்கள்; கல்கி, வ.ரா, டி.எஸ் சொக்கலிங்கம், பி.ஸ்ரீ., ஹிந்து' சீனிவாசன் இப்படிப்பல பத்திரிகையாளர்கள், பண்டிதமணி, நாவலர் பாரதி, வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, வையாபுரிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை இப்படிப் பல்கலைக் கழகச் சிங்கங்கள்; பி.வி. ராஜமன்னார், ஜஸ்டிஸ் என். சோமசுந்தரம், டி.எம். கிருஷ்ணசுவாமி அய்யர், வி. கிருஷ்ணசுவாமி அய்யர் இப்படி நீதிபதிகள்; செம்மங்குடி, பாலசரஸ்வதி, ஜயம்மாள், எம். எஸ். போன்ற இசை விற்பன்னர்கள், இவர்களுக்கு நடுவிலே நானும் என்னைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் சிலரும்!

ஜஸ்டிஸ் கட்சி, அதன் பக்கத்தில் காங்கிரஸ், அதன் பக்கத்தில் திராவிடர் கழகம், அதன் அருகில் அதன் பல கிளைகள் என்று ஒரே வீர ஐக்கிய சேனைச் சம்மேளனமாக இருக்கும் அது!



''வட்டத் தொட்டி'' கூட்டம் முடிந்து, திருக்குற்றாலம் சித்திர சபையிலிருந்து வெளியே வருகிறார் டி.கே.சி. அருகில் செயலாளர் பலராம ராஜா. பின்புறம் மீ. ப. சோமு, சின்ன வெங்கட ராஜா. வலது ஓரத்தில் பேரன் குற்றாலலிங்கம்.

இது நாள்தோறும் புதிது புதிதாக முளைத்து அரும்பி வருகிற இத்தனைக் கட்சிகளும் அன்று இருந்திருந்தால் அத்தனையும் வட்டத் தொட்டியிலே கூடியிருக்கும்! எல்லோருக்கும் ஒரே குறிக்கோள். தமிழ், தமிழ், தமிழ்! தமிழ் என்ற ஒருமைப்பாடு ஜாதிகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் தாண்டிச் சென்று மயிலாப்பூரையும், நொச்சிக்குப்பத்தையும் இணைக்கிற ஒரு சாலையாக வட்டத் தொட்டியிலே போய்க் கூடியது!

இந்த நாளில் தமிழகத்தின் பல ஊர்களில் கம்பருக்குப்பெரிய பெரிய விழாக்கள் நடக்கின்றன. பல அறிஞர்கள் கம்பரை ஆராய்கின்றனர். மிகவும் மகிழ்ச்சி அடையவேண்டிய இலக்கியப் பணிகளே இவை! ஆனால், இந்த ஆராய்ச்சி விளாசல்களுக்கும் டி.கே.சி. கம்பரை அனுபவித்த அனுபவத்துக்கும் அடிப்படையிலேயே வித்தியாசம் உண்டு!

இன்றைய ஆராய்ச்சிகளிலே பெரும்பாலும் ராமாயணக் கதையைப் பற்றிய ஆய்வுகளே அதிகம். சண்டைகள் மோதல்கள் எதிர் மோதல்கள் என்பதாக வெளு வெளு என்று வெளுப்பதெல்லாம் கதையைத்தான்! இந்த விழாக்கள் எல்லாம் கதை விழாக்களா அல்லது கவிதை விழாக்களா என்பதை எண்ணிப் பார்க்கும்போது தான் அங்கே டி.கே.சி. வருகிறார்!

கம்பர் ராமகதையைக் கவிதையிலே பாடாமல், உரைநடையிலே எழுதியிருந்தாலே போதும். இந்த இத்தனை ஆராய்ச்சிகளுக்கும் அங்கே இடமுண்டு! ஆனால், ஒரு கவிஞனுக்கு, ஒரு மகா கவிஞனுக்கு, தமிழகத்தின் கவிச் சக்கரவர்த்திக்கு உரிய கவிதா முத்திரையைஇத்தகையஆராய்ச்சிகளுக்குள்ளே நம்மில் பலரும் மறந்து விடுகிறோமே!

டி.கே.சி. சொல்லுவார், கதையும், பாத்திரங்களும் ஒரு கவிஞனுடைய கருவிகளே! எதற்காக? கவிதையை உருவாக்குவதற்காக!

இந்த இடத்தில்தான். டி.கே.சி.க்கும் - அந்த ரசிகமணிக்கும், மற்ற ஆராய்ச்சியாளருக்கும் வேறுபாடு; காவிய நோக்கத்தின் அடிப்படையிலேயே வேறுபாடு! ராம அவதாரம் என்றால் அது கவிதையின் அவதாரத்துக்குரிய கருவி என்பார் டி.கே.சி. சீதா கல்யாணம் என்றால் அது சொல்லுக்கும் உணர்ச்சிக்கும் நடைபெறுகிற கவித் திருமணம்! கூனி, இராவணன், விபீஷணன், சத்ருக்னன், பரதன், ஏன் இராமனே கூடக் கவிதையின் - கதையின் அல்ல -கவிதையின் அங்கங்கள்! கம்ப ராமாயணம் என்பது ஒரு நாவல், ஒரு நெடுங்கதையல்ல! அது கவிதை! காவிய தரிசனத்தோடு அதைக் காண வேண்டும்- இதுவே டி.கே.சி யின் தனிப் பார்வை.

கதைக்குள்ளேயே போய் மண்டையை உடைத்துக் கொள்கிற மனிதர்களை நோக்கி, வழிப் பாதையிலேயே நிற்கிறீர்களே, ஊருக்கு வாருங்கள் என்று கவி உலகுக்குள் அழைக்கிற ஒப்பற்ற ரசிகமணிக் குரலே டி.கே.சி!

இப்படிப்பட்ட ஒரு கவிதா நோக்கு, ஒரு கவிப் பார்வை, விஷயங்களையும் கதைகளையும் தாண்டித் தமிழ் மொழியின் உல்லாசங்களுக்குள்ளே செல்கிற கவி தரிசனம் டி.கே.சி.க்கு எப்படி ஏற்பட்டது.?

விளாத்தி குளத்திலிருந்து ஊருக்குத் திரும்பிய புது மாப்பிள்ளை டி.கே.சி. நெல்லை வண்ணார்பேட்டையில் தமது வக்கீல் தொழிலைத் தொடங்கினார். அந்த முகூர்த்தம், அவருக்குக் கடுமையான மலேரியா ஜுரம் கண்டது! பல நாட்கள் படுத்த படுக்கையாகவே இருந்தார். காய்ச்சல் அதிகமாகும் போதெல்லாம் எழுந்து வந்து பச்சைத் தண்ணீரிலே குளிப்பார். உடனே படுக்கையிலே வந்து படுத்துக் கொள்வார். இப்படி ஒரு வைத்தியம்! இந்தத் தருணத்துலேதான் கம்பர் அவருக்குத் துணையாகப் படுக்கையிலே வந்து இருந்து கொண்டார்.

மலேரியாவிலே படுத்துக் கொண்டே கம்பரைப் படிக்க ஆரம்பித்தார், டி.கே.சி. எப்படி? அவரே ஒரு கடிதத்தில் இதைப் பற்றிச் சொல்கிறார்.

''முதலில் ஏதோ ஒரு படலத்தை (ஆரம்பத்தை அல்ல) எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். சில பாகங்கள் மிகவும்

மட்டமாக இருந்தன. சில பாகங்கள் பிரமாதமாக இருந்தன. ஏன் இப்படிப் பெருத்த வித்தியாசம் இருக்கிறதுஎன்று ஓர் எண்ணம் உண்டாயிற்று! துணிச்சலாய் ஒரு யுக்தி செய்தேன். தள்ள வேண்டியதை தள்ளி, நல்ல பாகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு படலம் பூராவையும் முறையாய்ப் படித்தேன. கதையின் கட்டுக்கோப்பு பாட்டுகளின் ஒழுங்கான கதி பாவம் இவைகளெல்லாம் மேலே மேலே ஆகாயத்தை நோக்கி ஏறுவது மாதிரி இருந்தது. கம்பரது கவிதா சக்தி மனசில் பட்டுவிட்டது. ஆகவே இதே மாதிரிப் பல படலங்களையும் தள்ளுவதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொண்டு படித்தபோது, பொன்மய மானதோர் கோபுரத்தில் அநேக பாகங்கள் இடிந்தும் தகர்ந்தும் போயிற்று என்றும் அப்படி இடிந்து தகர்ந்த பாகங்களை ஏதோ ஒருவகைச் சாந்தினால் மறுபடியும் கட்டுவதற்குச் சிலர் முயன்றிருக்கிறார்கள் என்றும் இன்னும் சிலர் புதிய் புதிய சுவர்களையே எழுப்பிக் கோபுரத்தின் உண்மையான அழகையே கெடுக்கப் பார்த்திருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது. காரணம் பல பாடல்கள் சிதைந்தும் விட்டுப் போனதும் தான்! அத்துடன் செருகி வைக்கப்பட்ட கவிகளுக்கும் குறைவில்லைதான்! இப்படியாக யெல்லாம் கம்பரை இனம் கண்ட பிறகு அவரே தனித்த முறையில் தனித்த குரலோடு நம்மிடம் பேசுகிறார் என்ற உணர்ச்சி எனக்கு வந்தது!''


இவ்வாறு தொடக்கத்திலேயே கதை நிகழ்ச்சிகளுக்குள்ளேயே சிக்கிவிடாமல், கவிதையின் மொழி வடிவத்துக்குள்ளே புகுந்த காரணத்தால், கம்பருடைய ''தனித்த'' குரலும் தனித்த முறையில் கம்பர் பேசுகிற தனியான உயர்தனிக் கவிப் பண்பும், டி.கே.சி.யை ஆட்கொண்டன! கம்பருடைய காவியத்தில் கம்பரின் குரலுக்கு நடுவிலே வேறு பல போலிக் குரல்கள் கேட்பதை அவரால் இனம் தெரிந்துகொள்ள முடிந்தது!

'அணுகுமுறை'' என்று ஒன்று இருக்கிறதல்லவா? டி.கே.சியினுடைய அணுகு முறையின் அடிப்படையே கவியின்பந்தான்! கதை, பாத்திரங்கள், நிகழ்ச்சிப் பின்னல்கள் எல்லாம் கவிதைக்குரிய ஜன்ம பூமி! அவையல்ல கவிதை! கவிஞன் பிறந்த ஊர் வேறு, கவிஞன் வேறு அல்லவா?

இந்த அடிப்படையிலே நின்றவர் டி.கே.சி. இந்த ஒரு காரணத்தால் பிறர் செய்யத் துணியாத சில செயல்களையும் அவர் செய்தார். செருகு கவிகளைத் துணிந்து நீக்கிவிட்டுத் தமது திருத்தங்களோடு கம்பராமாயணத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்.

டி.கே.சி எப்போது பார்த்தாலும் கம்பராமாயணத்திலேயே மூழ்கிக் கிடப்பார். மற்ற நூல்களையே அவர் கவனிப்பதில்லை என்பதாகச் சில அறிஞர் பெருமக்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது சரியில்லை.

கேட்டுக் கொண்டிருப்பவர்களின் மனநிலை, பக்குவம், புரிந்து கொள்ளும் ஆற்றல் ஆகியவற்றிற்குத் தகுந்தபடியே மனங்களைப் பார்த்துப் பேசுகிறவர் டி.கே.சி! அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப, நாடோடிப் பாடல்களிலிருந்து திருமந்திரம் வரை பல நூல்களிலிருந்தும் கவிப் பண்புள்ள அழகழகான பாடல்களை எடுத்துச் சொல்லுவார். அவர் எந்த நூலைப்படித்தாலும்பாடல்களுக்கு அருகிலேயே சரிச் சின்னம்(✓) அல்லது சுன்னம் (0) போட்டிருப்பார், பேனாவைக் கொண்டு. சரிச் சின்னம் நல்ல பாட்டுக்கு அடையாளம். வட்டம் போட்டு நடுவிலே புள்ளிவைத்தார் என்றால், அல்லது கழித்தல் சின்னம் போட்டார் என்றால், மட்டமான பாடல் என்று அவருடைய மதிப்பீடு! இந்த அடையாளம் இல்லாத புத்தகமே அவருடைய நூலகத்தில் (கிட்டத்தட்ட ஏழாயிரம் நூல்கள் வைத்திருந்தார்) கிடையாது. திருமந்திரம் நூலில் மட்டும் 'சுன்னம்' என்கிற வட்டம் இராது! கழித்தல் குறியும் இராது! அதாவது அந்த நூலில் மட்டும் எந்தப் பாடலையும் அவர் சோடை என்று கருதவில்லை. வேறு எந்த நூலுக்கும் இல்லாத, இந்த மகிமையை அவருடைய திருமந்திரப் புத்தகத்திலே பார்க்கலாம்! சில திருமந்திரப் பாடல்களில் கேள்விக்குறி போட்டிருப்பார். அதாவது பாடல் மட்டமாகப் படவில்லை, ஆனால் அதிலுள்ள தத்துவ நுட்பம் தமக்குப் புரியவில்லை என்பதற்குரிய அடையாளம் இது! மற்றபடி அத்தனை பாடல்களையும் அவர் உயர்ந்த



கவிப் பண்புள்ளவை என்று மதித்தார். அவற்றில் எல்லாருக்கும் புரியக்கூடிய சிக்கல் இல்லாத எளிய பாடல்களை மட்டும் அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்.

இளமை நாட்களில் பலஆண்டுகள் அவருடனேயே இருந்திருக்கிறேன். தாமிரவருணி நதியின் இக்கரையில் மீனாட்சிபுரத்தில் எங்கள் வீடு. அக்கரையில் வண்ணார்பேட்டையில் டி.கே.சி வீடு. ஆற்றைக் கடப்பதற்குக் குறுக்கே நடந்தே சென்று விடலாம். அத்தனை எளிது. 1940க்குப் பிறகு நான் திருச்சி 'ஆல் இந்தியா ரேடியோ'வில் சேர்ந்த பின்பு ரசிகமணியும் திருக்குற்றாலத்துக்குப் போய்விடவே, சந்திப்புக் குறைந்தது. ஆண்டுக்கு ஒரு தடவை அல்லது இரண்டுதடவை தான் நான் விடுமுறையில் குற்றாலம் சென்று தங்கியிருந்த போதெல்லாம் கம்பர் வருவதோடு பாடல்களும், கூடப் பெரும்பாலும் சங்க இலக்கியப் பாடல்களும், திருமூலரும், அப்பர் சுவாமிகளும், மாணிக்கவாசகரும், பழைய இலக்கண நூல்களிலுள்ள தொன்மையான மேற்கோள் செய்யுள்களும் ரசிகமணியிடம் இருந்து புறப்பட்டு வரும்! தமிழர் பண்பாடு பற்றிய அரும் பெரும் உண்மைகளும், பலகவின் கலை நுட்பங்களும், மேற்கு நாட்டு விஞ்ஞான விந்தைகளும் எழுந்து எழுந்து பவனி வந்தமயமாக இருக்கும்! இருட்டிவிட்டது என்றால் ஐந்தருவிச் சாலையில் வந்து நின்று கொண்டு ஆகாயக் காட்சிகளைக் காட்டியவாறு விண்மீன்களையும் கோள் இயக்கங்களையும் சிறு பிள்ளைக்குக் கூடப் புரிகிற விதத்தில் விளக்கத் தொடங்கி விடுவார் டி.கே.சி.! எப்படிப்பட்ட ஆனந்த அனுபவங்கள் அவை! சில சமயங்களில் ராஜாஜியும் குற்றாலத்தில் எங்களோடு வந்து தங்கிவிடுவார்! அறிவுப் பண்பாடும் இதயப் பண்பாடும் இணைந்து பொழுது போவதே தெரியாது!

டி.கே.சி. அடிக்கடி ஒன்று சொல்லுவார்; ''கன்றைப் பார்த்ததும் பசுவுக்கு மடி சுரப்பது போலத்தான் எனக்கும் எதிரே இருக்கிற ரசிகரைப் பொறுத்தே அவ்வப்போது பாடல்களோ கலையுண்மைகளோ திடீர் திடீரென்று நினைவுக்கு வருகின்றன!'' என்று! இதுபற்றி அவர் எனக்கு எழுதியுள்ள ஒரு கடிதம் 28.11.52இல்—

'நீ இங்கு வந்து சில நாள்த் தங்கினாலும் பல நாள் அனுபவங்கள் வந்து ஊடாடிப் போகின்றன. பேசுவதற்கு ஏதேதோ விஷயங்கள் பண்பாடு சம்பந்தமாகவும் இலக்கியம் சம்பந்தமாகவும் வருகின்றன. நீ இல்லையானால் அவை வர மாட்டா! எங்கேயோ மனசின் மூலையில் அவை துரு ஏறித்தான் கிடக்கும்! இற்றும் போய்விடும் தான், நாளடைவில்! இந்த மாதிரி விஷயங்களை அடிக்கடி மனசுக்குக் கொண்டு வந்து விளக்கிப் பீடங்களில் வைக்க வேண்டியது அவசியம்! தமிழ்நாடு முழுவதுமே செய்து கொண்டிருக்க வேண்டிய காரியம்! ஆனால் யாரும் செய்யவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தப் பராமுகம் காரணமாக நமது தமிழகத்தில் எத்தனையோ நூல்கள், பாடல்கள் உண்மைகள் (சயன்ஸ்) எல்லாம் வழக்கிலிருந்து அப்படியே ஒழிந்து போய்விட்டன! நஷ்டம் பெரிய நஷ்டம்!''

இவ்வாறு எழுதுகிறார் ரசிகமணி. தமிழ் மக்கள் பழைய நூல்கள் பலவற்றையும் அறிவியல் ஏடுகளையும் அனுபவிக்க ஆள் இல்லாத காரணத்தால் மறந்து இழந்து விட்டார்கள். பல சுவடிகள், படிப்பார் இல்லாமல் மூலைக்குப் போய் கறையானுக்குப் போய், நெருப்புக்கும், தண்ணீருக்குமே இரையாகிவிட்ட சோகக் கதைதான் நமக்குத் தெரியுமே!

இலக்கியமும் அறிவியலும் மட்டுந்தானா? நமது சங்கீதமும் அதே கதிக்கு உள்ளாகிவிட்டதை ரசிகமணி ஆழ்ந்த வருத்தத்தோடு சொல்லுவார். பராமுகத்தினால் எத்தனையோ அற்புதமான தமிழ்க் கீர்த்தனைகளும், பதங்களும், வழக்கத்திலிருந்து மறைந்து, தமிழில் ஏது சங்கீதம் என்றே கேட்கத் தொடங்கினார்கள் அல்லவா? ஒரு கடிதத்தில் டி.கே.சி. எழுதுகிறார்—

''அஞ்ஞானம் என்பது அனாதியான சர்வ வியாபகமான தத்துவம்! ஒரு அஞ்ஞானத்துக்கும் இதர அஞ்ஞானம் எல்லாவற்றுக்கும் அபூர்வமான ''ஸஹிருதயத்வம்'' உண்டாய் விடுகிறது. இயல்புதான், தமிழில் பாட்டே இல்லை என்று ஒரு பிரகஸ்பதி சொல்ல வேண்டியது; அவ்வளவு தான். இதர பிரகஸ்பதிகள் எல்லாம் பல்லவி வைத்துவிடும்! யோசனையை அந்தப் பிரகஸ்பதிகளின் தலைக்குள் வைக்க மறந்துவிட்டான் பிரமன்! அவ்வளவுதான்! என்னிடம் கேட்டால் தமிழ் ஒன்றுதான் சங்கீதத்துக்கு வாய்ப்பான பாஷை. உண்மையான பாடலும் தமிழிலே தான் இருக்கிறது என்று சொல்வேன். சொல்லி என்ன செய்ய! தமிழ்நாடு ஒரே செவிட்டுநாடாக அல்லவா இருக்கிறது!''

இன்னொரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் இன்னோரு பகுதியைப் பாருங்கள்:

''உலகம் எங்குமே சங்கீதம் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. அந்தச் சங்கீதத்தில் பாவமுள்ள சங்கீதம் என்றும் பாவமற்ற சங்கீதம் என்றும் இருக்கின்றன.

தமிழ்நாட்டுக்கு வருவோமானால் இங்கேயும் சங்கீதத்தை இரண்டு விதமாகப் பிரிக்கவேண்டும். பாவமான சங்கீதம், பாவமற்ற சங்கீதம் என்பதாக! தெலுங்கு சங்கீதத்திலும் அப்படியேதான். தெலுங்கு சாகித்தியத்தை உணர்ச்சியோடும் பக்தியோடும் பாடும்போது அது பாவ சங்கீதம். வெறும் விளையாட்டாக, உணர்ச்சி யில்லாமல் பாடும்போது சாமான்யம் என்று சொல்லிவிட வேண்டியதுதான்! ஏதோ காதின் ஜவ்வுக்குச் சுகமாய் இருக்கலாம். அவ்வளவு தான். ' Tympanic ' என்று பெயர் இட்டு அழைக்கலாம்.

தெலுங்குக்குச் சொன்னது தமிழுக்கும் அப்படியே பொருந்தும்!

ராகம் பாடும்போது தமிழருக்கும் தெலுங்கருக்கும் பொது தான். இருவரும் அனுபவிக்கலாம். அதில் பாஷை கலப்பில்லாததால் இருவருக்கும் பொது என்கிறோம்.

ராகம் பாடுவது என்பது கெண்டியை வைத்துக் கொண்டு சுண்ணாம்புக் கோலம் போடுவது போன்றது. கை லாவகத்தைக்

**வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கு ஓய்வு ஊதியம் உயர்த்தப் பட்டுள்ளது.**

வீரபாண்டிய கட்டபொம்மன் நேர் வாரிசுதாரர்களுக்கு 1-8-81 முதல் ஓய்வூதியத் தொகை ரூ. 100/-லிருந்து ரூ. 150/-ஆக உயர்த்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இனிமேல் ஓய்வூதியத் தொகை ரூ. 150/-ஆக இருக்கும். ஓய்வூதியம் ஆயுட்காலம் வரை வழங்கப்படும். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்குவது போல இத்தொகை அரசு செலவிலேயே பணவிடைத்தாள் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

கண்டு அனுபவிக்கிறோம். வளைவும், நெளிவும் அந்த லாவகத்தைக் காட்டுகின்றன. அதே போல சாரீரத்தின் லாவகத்தைக் கண்டு ராகத்தின் நயத்தை அனுபவிக்கிறோம்.

ஆனால் சாகித்தியத்துக்கு வரும்போது, பாவத்தை எதிர் பார்க்கிறோம். உள்ளிருக்கும் உணர்ச்சி வேகம் சங்கீதத்துக்கு ரூபம் கொடுக்கிறது. கவியைப் பற்றிச் சொல்லும்போது— Metre forging argument (argument emotional reality) என்று மில்டன் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சங்கீதத்தில் பாவ ரூபம் என்று ஒன்று இருக்கிறதென்றும், அதுவே சங்கீதத்துக்கு லட்சியம் என்றும் தெரியவரும்.

நான் சொல்வதெல்லாம் சங்கீதம் பாவ சங்கீதமாகவே இருக்க வேண்டும். (அப்படியானால்தான் மக்களிடம் போய்ச் சேரும்) தெலுங்கர்கள் பாவத்தை உணர வேண்டும் என்றால், தெலுங்கு பாஷையில் தான் சாகித்தியமும் இருக்க வேண்டும். தமிழில் இருந்தால் விஷயம் புரியாது. உணர்ச்சியை உணர முடியாது. பாவத்தைக் காண முடியாது!

கேட்பவர்களுக்காகவே சங்கீதம்! கேட்பவர்களுக்காகவே இலக்கியம். அனுபவிக்கிறவர்களுக்காகவே கலைகள் எல்லாம்!

டி.கே.சி. கவியும் சங்கீதமும் ஒன்று என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் என்று (பத்திரிகைகளில்) எழுதுவார்கள்! எனக்கோ சர்க்கரைக்கும் கடலை மாவுக்கும் வித்தியாசம் தெரியும்! கடலை மாவை மாத்திரம் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது! சர்க்கரையைத் தனியாக சாப்பிடவும் முடியாது! ஆனால் லட்டு செய்து கொடுத்தால் சாப்பிட முடியும்.

மானச உலகத்திலுள்ள ஆனந்தத்தை (மக்களுக்காக) ஜட உலகத்துக்குக் கொண்டு வருவது தான் கலை. கல்வி, கலை விஷயங்களில் தாகூர் தெளிவான உண்மை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதாவது, பள்ளிக்கூடங்களிலும், யூனிவர்சிட்டிகளிலும் மூளையை வளர்க்கிற காரியந்தான் நடக்கிறது. அதற்குப் பதிலாக இதயத்தை வளர்த்தால் அளவில்லாதபடி கல்வி, கலை எல்லாம் வளரும் என்பதாக! இதில் சந்தேகமே இல்லை!

இந்த உண்மையை மனத்தத்துவத்தோடு இணைத்தும் தமது வாழ்நாள் முழுவதும் இதய ஒலியை ஒலித்துவந்த எழிலரசரே ரசிகமணி டி.கே.சி!.

# ரசிக்கவைத்த மேதை

## பாஸ்கர தொண்டைமான்

ஆங்கிலம் கற்ற தமிழர்களையெல்லாம் தமிழிலே மோகம் கொள்ளச் செய்தவர் டி.கே.சி.

அறிவியல் சாத்திரங்கள் மாத்திரம் அல்ல, அழகுக் கலைகளைப் பற்றியெல்லாம் தமிழில் சொல்லுதல் கூடும் என்று நிரூபித்தவர் டி கே. சி.

எல்லாம் தமிழில் முடியும் என்று கட்டியங்கூறி இளைஞர்கள் பலரை முன் நடத்தியவர் டி.கே.சி. இந்தப் பணி ஒன்றுக்கே அவரை வாழ்த்தலாம், வணங்கலாம், வந்தித்துப் போற்றலாம்.

டி.கே.சி. மிக்க துணிச்சல் உடையவர். கிட்டத்தட்ட முப்பது வருஷங்களுக்கு மேலாக ஆற அமர இருந்து கம்பனது காவியமான இராமாயணத்தைப் படித்தார். அதில் கம்பன் பாடாத பாடல்கள் பல இடைச் செருகல்களாக இருக்கின்றன, என்று கண்டார். மேலும் பல பாடல்கள் பிழைபட அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்றும் கண்டார். மிக்க துணிச்சலாக, ஆம், எத்தனையோ பண்டிதர்களுடைய எதிர்ப்புகளுக்கிடையே இடைச் செருகல்களையெல்லாம் நீக்கினார். கம்பன் அவன் பாடிய கவிகளுக்குக் கொடுத்த உருவம் எப்படி இருக்க வேண்டும் என்று கண்டுபிடித்து அதன்படியே திருத்தி அமைத்தார்.

அப்படியே 'கம்பர் தரும் இராமாயணம்' என்று ஒரு புதிய பதிப்பையே வெளியிட்டார். கம்பராமாயணம் என்றாலே பயந்து ஒடிய அன்பர் பலரும் கம்பன் பாடல்களில் மோகம் கொண்டு கம்பன் காவியத்தைப் படிக்க ஆரம்பித்தனர். கம்பராமாயணப் பிரசங்கங்கள் ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி நடத்த ஆரம்பித்தனர். கம்பனுக்குத் திருநாள், கவிஞனுக்குப் பல்லாண்டு, அவன் பிறந்த தேரழுந்தூரிலும், அவன் அமரனான நாட்டரசன் கோட்டையிலும் இன்னும் சென்னையிலும் கோவையிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. அத்தகையதொரு அரிய பணியைச் செய்தவர் ரசிகமணி டி.கே.சி.

இன்னும் ஒன்று, அன்று தமிழ் நாட்டு இசை அரங்குகளில் தமிழில் பாடுவது அநுசிதம். இதைக்கண்ட ஒரு சிலர் நெஞ்சம் குமுறினார்கள். இதயத்தை வளர்க்கும் பாவம் கலந்த இசையே தமிழர்களுக்கு வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். மேடைகளில் பேசினார்கள். இப்படிப் பேசினவர்களில் முதன்மையானவர் தான் டி.கே.சி. அவருடைய பேச்சைக் கேட்ட பின்தான் செட்டி நாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் தமிழிசை இயக்கத்தையே ஆரம்பித்தார். அது நாளும் வளர்ந்து தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கும்படி செய்திருக்கிறது. தமிழிசை வளர்ச்சிக்குத் தலையாய தொண்டு புரிந்தவர் டி.கே.சி.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் செய்த சேவை அன்பர் பலரைத் தமிழ்க் கவிதையை அநுபவிக்கும்படியும், அநுபவித்த ஆனந்த பரவச நிலையையே அடையும்படியும் செய்துதான் ஏதோ ஒரு நாட்டில் பெரிய கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் வேண்டிய தில்லையாம்; கண்ணீர்ப்புகை வேண்டியதில்லையாம். 'சரி இப்போது ஒரு கவி சொல்லப் போகிறேன்' என்று சொன்னால் கூட்டம் கலைந்து விடுமாம்! அதே நிலையில் இருந்த தமிழகத்தை, அங்கு வாழ்ந்த தமிழர்களையெல்லாம் நல்ல கவிதைகளை அநுபவிக்கவும், அக்கவிதைகளைக் கேட்டு அதில் லயித்து, ஆனந்தமடையவும் செய்தவர் டி.கே.சி.

அவர் விளக்குகிறது போல் தமிழ்ப்பாட்டையோ, ஆங்கிலக் கவிதையையோ வேறு யாரும் விளக்கி நாம் கேட்டதில்லை. அவர் பாட்டுக்கு பதவுரையோ, பொழிப்புரையோ, கருத்துரையோ கூறமாட்டார். பாட்டைப் படுவதற்கு முன் ஒரு விரிவான முன்னுரை சொல்லுவார். பாட்டின் பொருளையும் கூறுவார், அதன்பின் அவருக்கே உரிய பாணியில் பாட்டைப் பாடுவார். அடி அடியாக நிறுத்தி நிறுத்திப் பாடுவார். மடக்கி மடக்கிப் பாடுவார். அவர் பாட்டைப் பாடி முடித்ததும் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த அன்பர் எல்லோருக்குமே பாட்டு, மனப் பாடம் ஆகிவிடும். அவருடைய சொற்பொழிவுகளில் ஆவேசம் இருக்காது; அடுக்குச் சொல் இருக்காது; ஆரவாரம் இருக்காது.ஆனால் அமைதி இருக்கும். அதைவிட அழகு இருக்கும். ஆழமாகக் கேட்போர் உள்ளத்தில் பதியவும் செய்யும். கம்பனைப் பற்றி, தமிழ்க் கவிதையைப் பற்றிப் பேசும் போது அவருடைய அடர்ந்த நெற்றிப் புருவம் பேசும்; செழித்து வளர்ந்துள்ள மீசை பேசும். எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய இதயமே நம் இதயத்தோடு பேசும்.

(1963-ல் கல்கி இதழில் வெளிவந்த கட்டுரையிலிருந்து.)

# பாரதியார் நூற்றாண்டு விழா

**''தேசீயக் கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவை 1981 டிசம்பர் 11-ஆம் தேதி துவங்கி, ஓராண்டுக் காலம் முழுவதும் தலைநகரங்களிலும், உலக நாடுகளின் தலை நகரங்களிலும், சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது''.**

இது குறித்து மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் பத்திரிகையாளர் கூட்டத்தில் கூறியதாவது:

"தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பிறந்து நூறு ஆண்டுகள் ஆகின்றன. இதையொட்டி, நூற்றாண்டு விழா கொண்டாட தமிழக அரசு ஏற்பாடு செய்து வருகிறது. விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான திட்டங்களை வகுக்க ''நூற்றாண்டு விழா குழு''வை தமிழக அரசு அமைத்துள்ளது.

பாரதியார் நூற்றாண்டு விழாக்குழுவின் முதல் கூட்டம் ஆகஸ்டு 5-8-81 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

### நேரில் அழைப்பார்

பாரதி நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைப்பதற்காக மாண்புமிகு இந்திய பிரதம அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களை அழைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. வெகு விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதுடில்லிக்குச்சென்று விழாவைத் துவக்கி வைக்குமாறு நேரில் அழைப்பு விடுப்பார்கள். இந்த விழாவுக்கான நிர்வாகக் கமிட்டியும், பணிக்குழுக்கள் பலவும் அமைக்கப்படும். கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியான முடிவுகள் அரசு ஆணையாக அறிவிக்கப்படும்.

### சமுதாய சீர்திருத்தப்பணி

மாவட்டத் தலைநகரில் மட்டுமின்றி தமிழகம் முழுவதிலும் பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒருநாள் வீதம் ஒரு கிராமப் பகுதியைத் தேர்ந்தெடுத்து பாரதிவிழா கொண்டாடப்படும்-மேலும் பாரதியார் கூறிய சமுதாயச் சீர்திருத்தப் பணிகளை அடிப்படையாகக் கொண்டு, கொள்கை அடிப்படையிலான விழாவாக இதனை நடத்தவும் முடிசெய்யப்பட்டுள்ளது. சமுதாயச் சீர்திருத்தம் தீண்டாமை ஒழிப்பு, தமிழ் வளர்ச்சிபோன்ற பல்வேறு துறைகளில் பாரதி கனவு கண்ட சமுதாய அமைப்பு ஏற்பட இவ்விழா பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**பாரதியாருடைய வாழ்க்கை வரலாற்றை ஒரு திரைப்படமாக எடுக்க வேண்டும் என்ற** கருத்து பொதுவாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**ஆண்டு முழுவதும் கொண்டாட முடிவு**

பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றுப் படம் தயாரிக்கும் பொறுப்பை தானே ஏற்றுக் கொள்வதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பல்கலைக் கழகங்களில் பாரதியார் படைப்புகள் பற்றிய திறனாய்வு நடத்தப்பட வேண்டும் என்றும், இதற்கு மத்திய அரசு பல்கலைக் கழக மான்ய குழு ஆகியவற்றின் உதவி நாடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பாடத் திட்டங்கள்

பாரதியாரின் படைப்புகளை உலக மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் தேசீய மொழிகளிலும் அவருடைய படைப்புகளை மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்ற ஒரு கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ராமலிங்க அடிகள் காலம்தொட்டு, பாரதியார், பாரதிதாசனார் காலம் வரையில் அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை இலக்கியப் படைப்புகளை கவிதை, பாடப் புத்தகங்கள் ஆக்க வேண்டும் என்ற கருத்தும் கூறப்பட்டது

ஆரம்பப் பள்ளிகள் மட்டத்தில் இருந்து கல்லூரி வரை பல்வேறு போட்டிகளை நடத்த வேண்டும். பாரதியார் நினைவுச் சின்னம் அமைக்கவேண்டும் என்பனபோன்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் பரிசீலித்து தகுந்த முடிவெடுக்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். இந்த நூற்றாண்டு விழா துவக்கத்தின்போது 'பத்திரிகைகள்'' ''வெளியீடுகள்'' ''விழா மலர்'' ஆகியவற்றை வெளியிட வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

### விழாக் குழுவினர்

விழாக்குழுவின் காப்பாளர்களாக மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள், தலைவராக மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் திரு ம.பொ.சிவஞானம் அவர்கள், துணைத்தலைவர்களாக தமிழக முன்னாள்முதல்வர்கள் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள், திரு. மு. கருணாநிதி அவர்கள். முன்னாள் சென்னை உயர்நீதி மன்றத தலைமை நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில் அவர்கள் ஆகியோர்களை இருக்கும்படி அழைப்பு விடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இறுதியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில், இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அனைத்துக் கருத்துக்களுக்கும் பதிலளித்து விரைவில் இந்த விழாப்பணிகளை நிறைவேற்றுவதற்கு ஒரு செயற் குழுவும், பல்வேறு பணிக்குழுக்களும் அமைக்கப்படும் என்று தெரிவித்தார். இந்தக் குழுக்கள் பரிசீலித்து அளிக்கும் திட்டங்களைஅரசு ஏற்று அமல் படுத்தும.





# மேலுலகம் இல்லையென்றாலும்...

**- எஸ்.வி.எஸ்**

ஏதையும் நுட்பமாகவும் கூர்மையாகவும் பார்ப்பது டி.கே. சி. யின் இயல்பு. உடம்போடு, உள்ளத்தோடு ஒட்டிய பண்பு.

உதாரணத்திற்கு ஒரு சம்பவம் சொல்கிறேன்.

டி. கே. சி.-க்கும் எனக்கும் அறிமுகமான நண்பர் ஒருவர் ஒரு கதை எழுதியிருந்தார். ''அந்தக் கதை நன்றாக இருக்கிறது'' என்றேன்.

''என்ன கதை அது?'' என்று கேட்டார்கள்.

நான் கதையைச் சொன்னேன். ஓர் இளைஞன் ஒரு கல்வெட்டுள்ள பாறையைக் கண்டான். அந்தப் பாறையிலுள்ள எழுத்துக்கள் கன்னாபின்னாவென்று சிதறிக் கிடந்தன. அவற்றையெல்லாம் ஒரு மாதிரி ஒழுங்குபடுத்திப் பார்த்தபோது, ''இதனடியில் ஒரு நகரம் இருக்கிறது'' என்று பொருள்பட்டதாம்.

உடனே புதைபொருள் இலாகாவிற்கு எழுதினான் இதைப் பற்றி.

புதைபொருள் இலாகாவினரும் அந்தக் கல்வெட்டைப் பார்த்தார்கள். இளைஞன் சொல்வது போல் பொருள் கொள்ளக்கூடும் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஒரு பெரிய நிலப்பரப்பை ஆழமாகவும் அகலமாகவும் தோண்டினார்கள். ஒரு நகரம் இருப்பதற்கான ஒரு தடயமும் இடைக்கவில்லை. அரசாங்க புதைப்பொருள் இலாகாவினர் சோர்ந்து திரும்பிப் போய்விட்டனர்.

ஆனால் ஊரார் குடிநீர் வசதிக்கான ஒரு குளம் கிடைத்தது.

இப்படியொரு குளத்தை வெட்டச் செய்யவே அந்த இளைஞன் சூழ்ச்சி செய்து அந்தக் கல்வெட்டைத் தயாரித்தான் என்று முடித்திருந்தார்.

இந்தக் கதையைச் சொல்லி முடித்தேனோ இல்லையோ, டி. கே. சி, ''கதையை இப்படி முடித்திருக்க வேண்டும்'' என்றார்.

''எப்படி?''

''வெட்டி வெட்டி சோர்ந்து போன புதைபொருள் இலாகாகாரர்கள் அலுத்துப்போய் மீண்டும் ஒருமுறை ஆராய்வோம் என்று வருகிறார்கள். அப்போது யதேச்சையாக - எதிர்பாராதவிதமாக - அக்கல்லை அவர்களில் யாரோ ஒருவர் குப்புறக் கவிழ்த்துப் போடுகிறார். அப்போது அந்தக் கல் அளவு 'ந' கரம் (எழுத்து ''ந'') காணப்படுகிறது' என்றாரே பார்க்கவேண்டும்!

கதையை எவ்வளவு கூர்மையாக எதிர்பாராத திருப்பத்தை முடித்து வைக்கிறார். ஓ ஹென்றி ஸஸ்பென்சை மிஞ்சிவிடுகிறதல்லவா இது? எவ்வளவு இயல்பாக ஒரு வினாடி யோசனைகூட செய்யாமல், நான் கதை சொல்லி முடித்தவுடனேயே எப்படி இவ்வளவு திருத்தமாகச் சொல்கிறார்!

கற்பனைக் களஞ்சியம் டி. கே. சி. அவ்வளவுதான்....

...ஒரு நாள் டி. கே. சி. யின் புத்தக அலமாரியில் மகாகவி ரவீந்திரநாத தாகூரின் 'ஸ்ட்ரே பேர்ட்ஸ்' (Stray birds) என்ற புத்தகத்தைப் பார்த்தேன்.

அது ஒருவரி இரண்டு வரிகளில் ஆழமான கருத்தைத் தெரிவிக்கும் தாகூரின் சிந்தனைச் சிதறல்கள். அந்த வயதில் அவற்றைப் படிக்கும்பொழுது ஒருசில விளங்குவதுபோல் தோன்றும். ஒரு சில ஒன்றுமே விளங்காது.

ஆனால் அந்தப் புத்தகத்தில் ஒரு சுவையென்ன வென்றால், குறட்பா போலிருக்கும் அந்த மணிமொழிகளுக்கு ஒட்டினாற் போல் மார்ஜினில் குறிப்புக்கள் இருக்கும்.

தாகூரின் ஒரு கருத்துக்குப் பக்கத்தில் புத்தகத்தின் மார்ஜினில் ''நல்லாறை குறள்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

எனக்கு இதென்ன குறள்! தாகூரின் கருத்துக்கும் இக்குறளுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் ? என்று தோன்றிற்று.

முதலில் தாகூரின் கருத்தே புரியவில்லை.

"He who is too busy doing good finds no time to be good''

' good ' என்ற சொல்லை வைத்து தாகூர் ஏதோ சிலம்பம் ஆடுகிறார் என்று தோன்றியதே தவிர பொருள் விளங்கவில்லை.

டி. கே. சி. யைக் கேட்போம் என்று துணிந்தேன். கேட்டவுடன் விளக்குவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. இருக்கட்டும் அப்புறம் சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் இருந்தது.

பல விஷயங்கள் கேட்டுத் தெரிந்து கொள்வதை நம்மை அறியாமல் நாம் உணர வேண்டும். அதுதான் மனதில் ஆழமாகப் பதியும்! கருத்துவிளைவிக்கும் இன்பத்தோடு மனதில் பதிந்தால் என்றென்றும் கேட்போர் மனதில் நிரந்தரமாக நின்று வாழ்க்கையையும் செம்மைப்படுத்தும் என்று கருதுபவர் டி. கே. சி. இருந்தாலும் முயல்வோம் என்று டி. கே. சி. யிடம் கேட்டேன்.

''இது என்ன? தாகூரின் இந்தக் கருத்தே விளங்கவில்லை. அதற்கு மேல் குறட்பாவை வேறு நீங்கள் குறித்திருக்கிறீர்களே'' என்றேன்.

என் அதிர்ஷ்டம் டி. கே. சி. உடனே விளக்க ஆரம்பித்து விட்டார்கள்:

ஒருவன் ஊருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு ஒரு பள்ளிக்கூடம் கட்டுவோம் என்று ஆரம்பிக்கிறான்.

பள்ளிக்கூடம் கட்டுவது என்பது எளிதான காரியமாகவா இருக்கிறது? நாலு பேரிடம் டொனேஷன் - நன்கொடை வசூலிப்போம் என்று புறப்படுகிறான்.

உள்ளூரில் ஒரு பெரிய பண்ணையார் இருக்கிறார்; நல்ல செல்வந்தர். பள்ளிக்கூடம் என்ற பொதுப்பணிக்கு உதவுவார். அவருக்கும் பரந்த ஆஸ்திக்கும் செல்வாக்குக்கும் தகுந்தாற்போல ஐயாயிர ரூபாயாகிலும் தருவார் என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு போகிறான். பொதுநல சேவகன் பண்ணையாரிடம் தான் வந்த நோக்கத்தை விளக்குகிறான்.

''நல்ல பணிதான்'' செய்ய வேண்டியதுதான்' என்று உற்சாகமூட்டுகிறார்.

நன்கொடை வசூலிக்க வந்த நோட்டுப் புத்தகத்தை நீட்டுகிறான்.

அந்தப் பெரிய மிராசுதார் ஒரு தொகையைக் கொடுக்கிறார்.

அவனுக்கோ பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது.

ஆம், ஐயாயிர ரூபாய் எதிர்பார்த்து வந்த இடத்தில் ஐநூறு கிடைத்தால் வேறு எப்படியிருக்கும்?

அடுத்தாற்போல் சிங்கப்பூரிலிருந்து ஒரு பெருத்த பணக்காரர் பக்கத்து ஊரில் குடியேறி இருக்கிறார். அவர் கோவில்களுக்கு ஏராளமான நன்கொடை வழங்கியிருக்கிறார் என்று கேள்விப் படுகிறான். அவரிடம் ஒரு ஐம்பதினாயிரம் ரூபாயாகிலும் கிடைக்கும் என்று எதிர்பார்த்துப் போகிறான். அங்கும் அவனுக்கு ஏமாற்றம்தான். அவர் ஆயிர ரூபாய் கொடுத்து அனுப்பிவிடுகிறார்.

இப்படி அவன் ஏதோ ஒரு தொகை எதிர்பார்த்துச் செல்ல, அவர்கள் ஏதோ ஒரு சொற்பத் தொகை கொடுக்க, சென்றவிடமெல்லாம் ஏமாற்றம்தான்! அதன் விளைவு அவன் உள்ளம் கசிந்து வழிகிறது.

ஊரில் யாராவது 'பண்ணையார் நல்லவர், என்று சொல்லி விட்டால்போதும், இந்தப் பொது நல சேவகருக்குக் கோபம் வந்து விடும்.

'அவரா? படுகருமி! எச்சிற் கையால் காக்காய் கூட ஓட்ட மாட்டான். வள்ளல் என்று வேஷம் போடுகிறான்!'' என்று கடல் மடை திறந்தாற்போல் திட்டத் தொடங்கி விடுவான்.

வேறு யாராகிலும் ''சிங்கப்பூரானால்தான் நம் இடிந்த கோயில் ஜீரனோத்தாரமாகியது'' என்று சிங்கப்பூர் செல்வந்தரைப் பாராட்டினால் இந்தப் பொதுநலத் தொண்டர், 'அவரோ படு அயோக்கியர்! சிங்கப்பூரில் என்ன கொலை பாதகங்கள் செய்து பணம் திரட்டினாரோ, அந்தப் பாபங்கள் கழிய இப்படி கோயில் கட்டுகிறார், அவரிடம் இருப்பது பணம் அல்ல, பாவ மூட்டை'' என்று ஏசுவான்.

இன்னும் யாரையாகிலும் பற்றிப் பேச்சு வந்தால், அவரையும் நாக்கில் நரம்பில்லாமல் திட்டுவான்.

இப்படி நல்ல காரியம் செய்கிறேன் என்று தொடங்கிய பேர்வழிக்கு, உலகில் நல்லவராக ஒருவர்கூட இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாரையும் ஏசுவது தான் எப்போதும் ஏசுவதுதான்.

நல்ல காரியம் செய்யத் தொடங்கிய மனுஷனுக்கு ஒரு நிமிஷம் கூட நல்லவனாக இருக்க முடியவில்லை இதைத்தான் தாகூர் சொல்கிறார்.

He who is too busy doing good finds no time to be good.

ஆனால் குறளாசிரியரோ, அதற்கு மேல் ஒரு படி

''நல்லா(று) எனினும் கொளல்
கொளல் தீது மேலுலகம்,
இல்லெனினும் ஈதலே நன்று''

''நல்லாறு'' நல்ல வழிக்காக, அதாவது நல்ல பணிக்காக என்றாலுமே ஒருவரிடம் கையேந்தி பொருள் பெறுவது. ''தீது, கொடிது, பாவம் என்று எவ்வளவு அழுத்தமாகச் சொல்கிறார் குறளாசிரியர்.

அதைவிட அழுத்தமாக சொல்கிறார் ஈகையைப் பற்றி.

நீ ஒருவனுக்கு தர்மம் செய்வதால் மோட்ச சாம்ராஜ்யம் கிடைக்காது. மேலுலகப் பேறு வாய்க்காது என்றால் பயந்து கொடுக்காமல் இருந்துவிடாதே! கொடு! கொடு! அதுதான் நல்லது! அதுதான் நீ கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறி என்கிறார் குறளாசிரியர்.

தாகூர் நம்மை வியப்பில் ஆழ்த்தினார் தமது மணிமொழியினால் என்றால் அதைவிட எத்தனையோ மடங்கு அதிக வியப்பில் ஆழ்த்திவிட்டார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்

இதுதான் டி. கே. சி. முறை!

இதிலென்ன புதுமுறையிருக்கிறது! டி. கே. சி. யின் தனிப்பாணியிருக்கிறது .என்று கேட்கலாம்.

புலவர்களும் மற்ற அறிஞர்களும் கையாளும் முறையை முதலில் சொல்கிறேன்.

ஒரு கருத்து சொன்னால் அதே மாதிரியான கருத்தை சங்கப் புலவர் சொல்லியிருக்கிறார், கடிகைமுத்துப் புலவரும் சொல்லியிருக்கிறார் என்று ஆயிரம் புலவர்களை மேற்கோள் காட்டுவார்கள்.

இதன் நோக்கமே தாங்கள் இத்தனை நூல்கள் படித்திருப்பதாக விளம்பரப்படுத்திக் கொள்வதே தவிர வேறில்லை.

இந்த வியாதி தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும்தான் என்றில்லை. ஆங்கிலம் படித்தவர்களுக்கும் உண்டு. ஷேக்ஸ்பியர் சொன்னான். கோதே சொன்னான், பாஸ்வல் சொன்னான் என்று காண்டப் பிரண்டமாக மேற்கோள் காட்டுவார்கள். மொத்தத்தில் தமிழ்ப் பண்டிதரும் ஆங்கிலப் பண்டிதரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களில்லை.

' டி. கே. சி. யோ ''அவர்கிடக்கட்டும், நீ என்ன சொல்கிறாய்? அதைச் சொல்!'' என்று கேட்பார்கள்.

டி. கே. சி. யோ ஒரு கருத்தை எடுத்து விளக்கப் போனால், நம் உள்ளம் மேலே மேலே சிறகடித்துப் பறக்கச் செய்யும் ஓர்ஆனந்த அனுபவத்தை அடையச் செய்வார்!

இந்த அனுபவத்தைப் பெற்றவர்கள் 'ஆகா! டி. கே. சி. மாதிரி உண்டா?'' என்கிறார்கள்.
மற்றவர்கள் ''இவர்கள் ஒரு வகை பயித்தியக்காரர்கள்''என்று நினைக்கிறார்கள்.

யார் பயித்தியம்? நீங்களே சொல்லுங்கள்!




## பிரபந்தத் திரட்டு

**பதிப்பும் உரையும் : டாக்டர் அன்னி தாமசு**

**வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600 020**

**விலை ரூ. 16 பக்கம்: 382**

தமிழில் உள்ள பிள்ளைத் தமிழ், தூது, மாலை, கோவை, அந்தாதி, சிந்து முதலிய சிற்றிலக்கியங்கள், பிரபந்தங்கள் என அழைக்கப்படுகின்றன. அவை 96 வகையின எனப் பலரும் கூறுகிறார்கள். அவற்றிற்குரிய இலக்கணங்களைத் தெளிவுறச் சொல்கிறது இந்நூல்.

இந்நூல் இதுவரை அச்சேறாமல் ஓலைச் சுவடி வடிவிலேயே உறைந்திருக்கிறது. இதனை அச்சு வாகனத்தில் ஏற்றி உலா வரச் செய்யும் அரியசாதனையை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் நிகழ்த்தியிருக்கிறது.

'ஜாதகம்' என்பதும் தொன்னூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று என்பதை இந்நூலின் வாயிலாக அறியும்போது வியப்பு மேலிடுகிறது. பதிப்பாசிரியரே உரையாசிரியராகவும் செயல்பட்டு, தெளிவான உரையெழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

நமது கிராமங்களில் சொல்லப்படும் கோடாங்கி மிகச் சிறப்பாக உள்ளது. பாவாணர் பாணியில் அவ்விளக்கம் அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

இன்று தொழில் நுணுக்கம் குறித்து வெளியிடப்படும் பல்வேறு நூல்களைக் கண்டு நாம் புகழ்கிறோம், பாராட்டுகிறோம். அவற்றைப் போன்றே பாமாலை சமைக்கும் தொழிலுக்குத்தேவையான கருத்துக்களை-செய்முறைகளைத் தெரிவிக்கிறது இந்நூல் என்று குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

கவி பாடுவோரும், கவிதையைச் சுவைப்போரும் ஆய்வு மனப்பான்மையோரும் அவசியம் கற்கவேண்டிய அரும் நூல் இது.

## சோவியத்துக் கவிஞர் நூற்றுவர்

**தமிழாக்கம்: த. கோவேந்தன்.**

**வெளியீடு: தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை-600 032**

**விலை: 19 பக்கம்: 262**

பிறநாட்டுச் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் சிறந்த தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து வெளியிடும் சிறப்பிலக்கிய மொழிபெயர்ப்புத் திட்டத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசின் முயற்சியின்படி வெளிவந்துள்ள முதல் வெளியீடு இந்நூல்.

சோவியத் நாட்டைச் சார்ந்த நூறு கவிஞர்களின் கவிதைகளை இத்தொகுப்பில் அமைந்துள்ளன.

கவிதைகள், இயன்றவரையில் இலக்கண அமைதியுடனும் இனிய சொல்லமைப்புடனும் விளங்குகின்றன. மொழி பெயர்ப்பு என்னும் உண்மை - ஒப்புக்கொள்ள முடியாத வகையில் மூலப்படைப்புப்போலவே இது திகழ்கிறது.

ஓரிரண்டு கவிதைகளில் புதுக் கவிதைப் பாணி காணப்படினும், மொழி பெயர்ப்பு என்பதனால் அதனைக் குறையாகக் கருதக் கூடாது.

நூலிலுள்ள கவிதைகள் அன்பைப் போதிக்கின்றன; நாட்டுப் பற்றை எடுத்துரைக்கின்றன. உழைப்பைப் போற்றுகின்றன. தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன. இதிலுள்ள தாய்நாடு என்னும் கவிதை ரஷ்ய நாட்டுக்கு மட்டுமல்ல, எல்லா நாட்டுக்கும் பொருந்தக் கூடியது.

இப்படி, நூல் முழுதும் பல கருத்துக்கள் உலகளாவிய உணர்வுக்கு உறுதுணையாக உள்ளன. அருமையான வெள்ளைத்தாளில் உன்னதமான முறையில் அச்சிடப்பட்டு, உறுதியான முறையில் காலிகோ பைண்டுடன் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

## இரவலராற்றுப்படை

**ஆசிரியர்: புலவர் கோ. பெரு. திருவரங்கன், பி.லிட்.,**

**வெளியீடு: இராமலட்சுமி பதிப்பகம், 3. 7வதுதெரு, நேரு குடியிருப்பு நங்கநல்லூர், சென்னை-600 091**

சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் ஐந்து, ஆற்றுப்படை நூல்களாகும். பல்வளம் பெற்ற மன்னர்களிடம் பரிசில் பெற்ற ஒருவர், பரிசில்பெறவேண்டிவந்தவரை ஆற்றுப்படுத்தும் விதத்தில் அமைக்க பெற்றது இவ் இலக்கிய மரபு. பிற்காலத்தில் இது வளர்ச்சியுறாது போய்விட்டது. அந்தக் குறையைப் போக்கும் வகையிலே அமைந்துள்ளது இந்நூல்.

பாட்டுடைத் தலைவரான பொன்மனச் செம்மல் -மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர்.அவர்களின் அருமை பெருமைகளையும் கொடைச் சிறப்பையும் தெள்ளத் தெளிவாக மரபுவழிக் கவிதையில் தீட்டித் தந்திருக்கிறார் நூலாசிரியர். இவரதுகவிதை நடையில் இனிமையும் எளிமையும் அழகும் பொருட்செறிவும் மிளிர்கின்றன. நடுநிலை உணர்வுடன் - உண்மையை ஒலிபரப்பும் பண்புடன் இந்நூலை யாத்திருக்கும் ஆசிரியர் பாராட்டுக்குரியவர். இவரது தமிழ்ச் சொல்லாட்சிபடிப் போரைக்கவர்கிறது. நூலுக்கு ஆசிரியரே எழுதியுள்ள உரை, அதற்குரிய மேற்கோள் வரிகள், ஆசிரியரின் புலமைத் திறனை எடுத்துரைக்கின்றன.

**—புலவர் தமிழ்ப்பித்தன்.**

**இப்பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும். அரசியல் கட்சிகள் தொடர்புள்ள நூல்கள், இப்பகுதியில் மதிப்புரை செய்யப்படுவதில்லை.**

**—ஆசிரியர்.**

## எழுத்தும் அச்சும்

**ஆசிரியர் :** மா. சு. சம்பந்தன்
**வெளியீடு:** தமிழர் பதிப்பகம்,
243, லிங்க செட்டித் தெரு,
சென்னை-1.
**விலை** ரூ. 5.00

சென்னை மாநகர், அச்சுக் கலை, அச்சும் பதிப்பும், ஆகிய மூன்று நூல்களின் ஆசிரியர் மா.சு.சம்பந்தன் எழுதிய நூல் தான் எழுத்தும் அச்சும்.

அச்சுக்கலையும், அச்சும் பதிப்பும் பற்றி சுருக்கமாகவும் அதே சமயத்தில் அனைத்துத் தகவல் களையும்தொகுத்துத்தரப்பட்டது தான் எழுத்தும் அச்சும். இந்நூலை படிக்கும் பொழுது, கலைக் களஞ்சியம் போல நிரல்பட செய்திகளைத் தொகுத்துள்ள ஆசிரியரின் அறிவாற்றல், உழைப்பு நமக்கும் புலப்படுகிறது.

எழுத்துகளும், முத்திரைகளும், காகிதமும் தோன்றியதிலிருந்து பதிப்புக்கும் முறை வளர்ந்துள்ள வரலாறு வரை பலவற்றையும் ஆசிரியர் எழுதியுள்ளார். ஆராய்ச்சியாளர்களுக்குப் பயன் தரவல்லது இந்நூல். பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடமாக அமையும் தகுதி உடையது. மயிலை சீனி. வேங்கடசாமி போல ஆராய்ச்சியாளர்களுக்கு நூல் எழுதும் தகுதியுடையவர் என்பதை ஆசிரியர் செய்திகளைத் தெரிவிக்கும் முறை நமக்கு உணர்த்துகிறது.

பதினாறு பக்கங்களுக்கு மேல் படங்கள் உள்ள இந்நூலில் படங்களைத் தொகுப்பாக அச்சிட்டிருப்பதை, பரவலாக அச்சிட்டிருக்கலாம். எனினும் தமிழர் பதிப்பகத்தின் ''எழுத்தும் அச்சும்'' அருமையான நூல் என்பதில் ஐயமில்லை.

—மாமூலன்.

## வடதிருநாகேசுவரம் நாகேசுவரர் நான்மணிமாலை

**ஆசிரியர் :** கே. பி. அறிவானந்தம்
**வெளியிட்டோர் :**
அருள்மிகு நாகேசுவர
சுவாமி திருக்கோயில்
வெளியீடு,
குன்றத்தூர்,
சென்னை-69
**விலை,** ரூ. 4-00

வரலாற்றுப் பின்னணி மிக்க வடதிருநாகேச்சுரம் அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில் தலவரலாறாகவும் — சோணாட்டு முதல்வராகவும், பெரியபுராணம் ஆக்கியவராகவும் திகழ்ந்த சேக்கிழார், அவர் வழிபட்ட தலம் இவற்றின் பல்வேறு சிறப்புக்களை எடுத்து விளக்கும் இனிய எளிய நூலாகவும் விளங்குகிறது இந்தநூல்.

வாரியார், கி. வா. ஜ., அரசவைக் கவிஞர் கண்ணதாசன், தி. க. தேவராஜன், புலவர் க. ஆறுமுகனார் ஆகியோர் இதற்கு அளித்துள்ள மதிப்புரைகளே இந்நூலின் பெருமை கூறுவனவாக அமைந்துள்ளன.

## மனையடி சாஸ்திரம் என்னும் வீடு கட்டும் சாஸ்திரம்

**ஆசிரியர் :** ஸ்ரீ காமாட்சிதாசர்.
ஜோதிஷ பூஷணம்
கே. பி. நடராஜ
பிள்ளை.
**வெளியிட்டோர் :** அபிராமி பப்ளிகேஷன்ஸ்,
307, லிங்கி செட்டித்
தெரு,
சென்னை-600 001.
**விலை.** ரூ. 5-00

வீடுகட்டுவதற்கான மனையைத் தேர்ந்தெடுப்பது எப்படி? வீட்டைக்கட்டுவது எப்படி? வீடு கட்டுவதற்கான மரங்களைத் தேர்வு செய்வது எப்படி? என்றெல்லாம் சிலபல பழம்பாடல்கள் நம் பார்வையில் தட்டுப்படுவதுண்டு.

அவற்றையெல்லாம் ஆராய்ந்து எளிய தமிழ் உரைநடையில் கட்டுரைகளாகத் தொகுத்திருக்கிறார் ஆசிரியர். பிழைதிருத்துவதில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம்.

சாஸ்திர சம்பிரதாயங்களில் நம்பிக்கையுடையோர் இந்நூலில் 101 தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளைப் படித்துப் பயன் பெறலாம்.

## காவல் துப்பாக்கி

**ஆசிரியர்:** சாலை இளந்திரையன்,
**வெளியிட்டோர் :**
சாலை வெளியீடு,
பேரவை இல்லம்,
11, திருவீதியான்
தெரு,
கோபாலபுரம்,
சென்னை-86.
**மலிவுப் பதிப்பு விலை :** ரூ. 2-50

சமுதாய மாற்றத்திற்குத் தேவை எனத் தாம் கருதும் கருத்துக்களை வெளியிடும் சாதனங்களாகத் தங்கள் எழுத்துக்களைக் கையாள்வோர் மிகச் சிலரே. அவர்களில் குறிப்பிடத் தக்கவராக விளங்குபவர் இந்த நூலாசிரியர்.

'அறிவியக்கம்' இதழிலும் வேறுபல ஏடுகளிலும் அவ்வப்போது எழுதிய 60 கட்டுரைகளை (உரை வீச்சு) தொகுத்து இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. கால ஓட்டத்தின் தவிர்க்கமுடியாத ஓர் இலக்கிய வடிவமாகப் பிறப்பெடுத்து கவிதை வடிவத்தையே புறந்தள்ளி விட்ட ஓர் எளிய எழுச்சி வடிவங்களாகத் திகழ்கின்றன இதில் அடங்கியுள்ள எழுத்தோவியங்கள்.

சுயமரியாதை நோக்குடையோர், தன்மான நெறியுடையோர் விரும்பிப் படிக்கலாம்.


தமிழரசு
ஆண்டுச் சந்தா : ரூ.12.
அரையாண்டுச் சந்தா : ரூ.6.


## ஐந்தாவது தமிழ் மாநாடு

**ஆசிரியர் :** சாலை இளந்திரையன்,
**வெளியிட்டோர் :** சாலை வெளியீடு
9ஏ/7 டபுள்யூ. ஈ. ஏ.
கரோல்பாக்,
புதுடில்லி-110 005.
**விலை** ரூ. 5-00

'கடந்த சனவரித் திங்களில் மதுரை மாநகரில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு பற்றிய விளக்க விமர்சன நூலாகத் திகழ்கிறது இது.

'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே' என்பதற்கிணங்க - இந்த மாநாடு பற்றி மட்டுமின்றி, முன்னர் நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடுகள் குறித்தும் இந்நூலில் ஆசிரியர் ஆங்காங்கே விளக்கிக் கருத்துரைக்கிறார்.

ஒவ்வொரு மாநாடும் உலகத் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியிலும் உலகத் தமிழர் பண்பாட்டு இணைவு வரலாற்றிலும் ஒரு மைல் கல்லாக நிலைபெற்ற செய்தி இந்நூலில் நன்முறையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

—இல. இராசேந்திரன்

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

தொகுப்பு : ஜி. ஆனந்தன்

## 17—7—81

தொழிலாளர்களுக்கான பணிக்கொடை (கிராஜுவட்டி) மீண்டும் நன்மை கிடைக்கச் செய்யும் சட்டத்தை விரைவில் கொண்டுவர தமிழக அரசு முடிவு செய்து இருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தெரிவித்தார்.

## 18—7—81

ஆண்டு ஒன்றுக்கு 12 ஆயிரம் டன் நிலக்கடலையை அரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த எண்ணெய் ஆலை தர்மபுரி மாவட்டத்திலுள்ள பேச்சம்பள்ளியில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

மின்வெட்டு அமலில் உள்ளபோது உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன என்பதைக் கண்டறியவும், மின்சார அளவை நிர்ணயிக்கவும் மின்சக்தி நிர்வாக மையம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 19—7—81

பெட்ரோல் மற்றும் டீசல் எண்ணெய் விலைகளை மத்திய அரசு உயர்த்திய போதிலும் தமிழகத்தில் மீண்டும் பேருந்துக் கட்டண உயர்வு வராது என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தெரிவித்தார்.

இடநெருக்கடியைத்தவிர்க்கும்பொருட்டு தற்போது மேலும் புதியதாக 125 உயர்நிலைப்பள்ளிகளை மேல் நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

உணவு பண்டங்களின் தரத்தை மேம்படுத்தவும் விலைகளைக் குறைக்கவும் சட்டம் ஒன்றைக் கொண்டுவர தமிழக அரசு யோசனை செய்து வருகிறது

## 20—7—81

கோவில் நிலங்களில் குடியிருப்போர் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள குறைந்த வாடகையைக் கூட செலுத்துவதில்லை. அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

## 21—7—81

புதிதாக உருவாகும் கோவை மாநகராட்சிக்கு ரூ. 47 கோடி செலவில் ஒரு பெருந்திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது

வறட்சி நிவாரணப் பணிகள் வரும் செப்டம்பர் மாதம் 30ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.

உயர்நிலைப் பள்ளிகளில் 8 முதல் 10ம் வகுப்புகளில் படிக்கும் ஆதிதிராவிட மலைவாழ் மக்களின் பிள்ளைகளுக்கு தினமும் மாலையில் பாடவேளைக்குப் பின் ஒன்றரை மணி நேரம் ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படும் என்றும் இத்திட்டத்தை 1981-82ஆம் ஆண்டிலிருந்து தமிழகரசு அமல்படுத்த இருக்கிறது என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 22—7—81

கடந்த 115 ஆண்டுகாலமாக இருந்து வந்த கோவை நகராட்சி மன்றம் கடந்த ஜூன் முதல் தேதி முதல் ''மாநகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. மாநகராட்சியை மாண்புமிகு முதல்வர் திரு எம்..ஜி ஆர். அவர்கள் துவக்கி வைத்தார்.

## 23—7—81

தமிழகத்திலுள்ள ஆதிதிராவிட சமூகத்தினரின் வாழ்வு வளம் பெறவும், அவர்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையவும் ரூ. 561 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் வரும் 5 ஆண்டுக் காலத்திற்குள் செயல்படுத்தப்படும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

குறைந்த வருவாய் உள்ள ஏழை எளிய வீட்டுக் குழந்தைகளுக்கு 'உயர்கல்வி' கற்க வகை செய்யப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்.

## 25—7—81

கூட்டுறவுக் கடனை ஒழுங்காகச் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி, தள்ளுபடி உரம் போன்றபொருள்களுக்குகளுக்கு மேலும் நிதியுதவி முதலிய கூடுதல் சலுகைகள் அளிப்பது பற்றி தமிழக அரசு பரிசீலனை செய்யும்


ஏறத்தாழ எட்டு இலட்சம் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம்

# அமோக விளைச்சலுக்கு





# உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY







சமச்சீர் உரமிட

# விஜய்

HTM-MFL-2526



குற்றாலம் சித்திர சபையில்-இராமாயணவகுப்பு முடிந்து, ஐந்தருவிச் சாலை நோக்கிச் செல்கிறார் டி.கே.சி. நண்பர்கள் புடைசூழ...

முதல் இந்த அகவிலைப்படி தரப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

## 26—7—81

தமிழகத்தில் மேலும் எட்டு 'ஆப்செட்' அச்சகங்கள் கூட்டுறவுத்துறையின் கீழ் அமைக்கப்படும் என மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

## 27—7—81

கதர்—கிராமத் கைத்தொழில் வாரியத்தைச் சேர்ந்த ஊழியர்களின் ஊதியத்தைத் தமிழக அரசு திருத்தி அமைத்திருக்கிறது. இந்த ஆணைப்படி 50 ஆயிரம் ஊழியர்கள் பயனடைவார்கள். இந்த ஆண்டு மேலும் 150 நெசவுத் தொழில் நிலையங்கள் ஏற்பட விருப்பதால் மேலும் 33 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படும் என்றும் மாண்புமிகு கதர் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ்.என் ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்.

## 29—7—81

வேளாண்மை தொழில் வாரியத்தின் சார்பில் 5 ஆயிரம் டன் எண்ணெய் தயாரிக்கும்ஆலை அமைக்கப்படும் என்று அதன் தலைவர் திரு லியாகத் அலிகான் அறிவித்தார்.

## 30—7—81

மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் ரூ. 80 கோடி கொள்ளை லாப சுரண்டலை ஒழிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார் என்றும் மரவள்ளிக்கிழங்கைக் கொள்முதல் செய்ய சேலத்தில் தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க உள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

அரசு அங்கிகாரம் பெற்ற 204 தனியார் மருத்துவ மனைகளில் 'குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை' செய்யபடும். அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு அனைத்து சலுகைகளும் கிடைக்கும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்தில் வறட்சிப் பணிகளுக்காக இதுவரை 30 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. அதனால் தினமும் 4 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கப்படுகிறது. என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்.

தமிழகத்திலுள்ள 12 கோவில்களில் இருந்து ஆண்டு ஒனறுக்கு ரூ. 15 இலட்சம் எடுத்து ஏழை-எளிய ஆதிதிராவிட மக்களுக்குத் திருமணம் செய்துவைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

# தங்கத்தட்டில் கவி அமுது



ரசிகமணி டி.கே.சி.

கவிச் செல்வம் என்பது அரிய செல்வம். அதற்காக ஒரு இனத்தார் எதையும் சடாகக்கொடுத்து விடலாம் என்று தெள்ளத் தெளிந்த ஆசிரியர்கள் சொல்லு வார்கள்.

தமிழரது கவிச் செல்வம், இதர பாஷைகளைக் கவனிக்கும் போது, மிக வளமான செல்வம், ஆயுள் முழுதும் ஒருவர் திளைத்து அனுபவிக்கத்தக்க செல்வம்.

ஆனாலும், இழந்துபோன தமிழ்ச் செல்வத்தைக் கணக் கிட்டுப் பார்த்தால், எக்களிப்பை விட ஏக்கந்தான் அதிகமாகிறது.

அகஸ்தியரைப்பற்றி எத்தனையோ விஷயம் தெரிய வருகிறது. பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் பொதிகை மலைச் சாரலில் இருந்தவர் என்று நமக்குத் தெரியும். இசையில் மிக உயர்ந்த அநுபவங்களைக் கண்டவர் என்பது தெரிய வருகிறது. இதையெல்லாம்விட, தமிழ்க் கவிக்கு அவர் செய்த தொண்டு மிகப் பெரிதாயிருந்தது. கைக்கு வந்த அளவில்லாத தமிழ்க் கவிகளை அவர் திரட்டி வைத்திருந்தார். அது மாத்திரம் அல்ல; கேட்டவர் மனசையும் இறைவனது மனசையுமே உருக்கும்படியான எத்தனையோ கவிகளை அவராகவே பாடியும் வைத்திருந்தார். தமிழ் மக்களால் என்றுமே மறக்க முடியாதபடி இருந்தன அந்தக் கவிகள்.

> என்றும் உள தென்தமிழ்
> இயம்பி இசை கொண்டான்

என்று எப்படிப் பாராட்டியிருக்கிறார், கம்பர் !

ஆனாலும், அந்த அகஸ்தியர் திரட்டிவைத்த நூலிலிருந்தோ பாடி வைத்த நூலிலிருந்தோ, ஒரு வரிகூட நமக்குக் கிடைக்கவில்லை. அகஸ்தியர் போகட்டும்; இன்னொரு விஷயம்.

* * *

ஏதோ இரண்டாயிர வருஷங்களுக்கு முன் ஒரு கவிஞர் இருந்தார். அவர் பாடிய முத்தொள்ளாயிரக் கவிகள் அபார வேகங் கொண்டனவாயும் கேட்பவர் உள்ளத்தைக் கவர்வனவாயும் இருந்தன.

கவிஞர் கொச்சி என்று இப்போது வழங்குகிற வஞ்சியில் சில வருஷங்கள் இருந்தார். அப்படியிருக்கும்போது ஒரு நாள் அவருக்குக் கவியொன்று தோன்றியது. மன்னனும் சகாக்களுமாகக் குழுமி இருக்கும்போது பாடலைப் பாடினார். கவியைக் கேட்டார்களோ இல்லையோ எல்லாரும் அதிசயித்துப் போனார்கள். போனபோன இடமெல்லாம் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார்கள். குளிக்கும் போதும், சாப்பிடும்போதும் பாடிக்கொண்டே இருந்தார்கள்; நண்பர்களைக் கண்டால் க்ஷேமம் விசாரிப்பதற்குப் பதிலாகப் பாடலைக் கேட்டீர்களா என்று பாடினார்கள். கவிஞரை இப்படியும் அப்படியுமாகப் புகழ்ந்தார்கள்.

இத்தனை உத்ஸாகமும் கும்மாளியும் கவிஞருக்குத் தெரிய வந்தது. கண்கூடாகவும் பார்த்துக் கொண்டார். அவருக்குண்டான ஆனந்த பரவசத்தைச் சொல்லவா வேணும்! இதயமானது நெகிழ்ந்து, கரை இல்லாத ஆனந்த சமுத்திரமாய் விட்டது. ஆனந்த சமுத்திரம் சும்மாவா இருக்கும்? எப்படி எப்படி எல்லாமோ அலைகள், சுழல்கள், கொந்தளிப்புகள்! பாற்கடலிலிருந்து அமிர்தம் என்றும், சந்திரன் என்றும் லட்சுமிதேவி என்றும் கிளம்பி வந்த மாதிரி, பாடல்கள் வந்தன.

ஒவ்வொரு நாளும் ஒரு பாடலாவது வரும். சூரியோதயமானதும், சரி, இன்று ஒரு பாடல் வரும் என்றுஅரசனும் அரசனைச் சேர்ந்தவர்களும் எதிர் பார்ப்பார்கள். எதிர்பார்த்தபடியே பாடல் ஒன்று நிச்சயமாய் வரும். பாடலைக் கேட்ட பிறகுதான் அன்றைக்குஅவர்களுக்குச்சூரியன் உதித்ததாகத் தோன்றும், அன்றைய வாழ்க்கைக்கு அவ்வளவு தெளிவையும் இன்பத்தையும் ஊட்டியது, அந்த ஒரு பாடல்!

இந்தவிதமாக வருஷம் ஒன்று இரண்டு, மூன்று என்று கழிந்தது. பாடல்களைக் கணக்கிட்டுப் பார்த்ததில் தொள்ளாயிரம் என்று கண்டார்கள். வாய் நிறைந்த எண்ணாய் இருந்தது. 'சேரத் தொள்ளாயிரம்' என்று பெயர் கொடுத்து நூலைப் போற்றி வந்தார்கள்.

சேர மன்னன் பல பரிசுகளைக் கவிஞருக்கு, அளித்தான். கவிஞரும், மன்னனிடம்விடை பெற்றுக் கொண்டு வஞ்சியிலிருந்து உறையூருக்குப் போனார். உறையூரில்தான் சோழ மன்னன் அப்போது வசித்து வந்தார். சோழனைப் பற்றித் தினம் தினம் கவியொன்று பாட அதுவும் ஒரு தொள்ளாயிரம் ஆயிற்று.

கடைசியாக மதுரைக்குச் சென்றார். பாண்டியனுடைய பாராட்டுதலையெல்லாம் பெற்றார். அற்புதமான கவிகளைப் பாண்டியன் மீதும் பாடினார். அவைகளும் தொள்ளாயிரமாயின.

ஆகவே, சேரன், சோழன் பாண்டியன் இவர்கள் மீது பாடிய தொள்ளாயிரம் தொள்ளாயிரமான மூன்று தொள்ளாயிரங்களும் சேர்ந்து ஒரு நூலாகி முத்தொள்ளாயிரம் என்ற பெயரோடு வழங்கி வந்தது.

* * *


கவிஞரைப் பற்றிய பெயர் தெரியாது. ஊர் தெரியாது. காலமும் தெரியாது. ஆனாலும், பாடல்களைப் பார்க்கும்போது ஏதோ இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னுள்ளன என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

வெண்பாவில் அமைந்துள்ள எதுகைகளும் மோனைகளும் பூர்வமான வைப்பைக் காட்டுகின்றன.

கவிஞருக்கு, மக்கள் இதயப் பண்பு இன்னதென்று தெரிந்திருக்கிறது; தமிழ்ப் பண்புஇன்னதென்று தெரிந்திருக்கிறது; எல்லாவற்றையும்விட, கவிப் பண்பு இன்னதென்று தெரிந்திருக்கிறது.

உள்ளத்தில் கண்ட ஒவ்வொரு உண்மையும், எப்பேர்ப்பட்ட உண்மையானாலும் சரி, அற்புத

முத்தொள்ளாயிரம் புதிப்பின் முன்னுரையிலிருந்



# அரசுப்பணியில் இருக்கும்போது இறந்தால்....?

அரசுப் பணியில் இருக்கும் போது இறந்துபோகும் அரசு ஊழியரின் குடும்பத் துயரைப் போக்குவதற்காக, அந்த ஊழியரின் மகன் அல்லது திருமணம் ஆகாத மகளுக்கு அரசுத் துறையில் ஏதாவது ஒரு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்ற சலுகையை தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

இதற்காக அவர்கள் அரசுக்கு விண்ணப்பம் செய்யும் கால அளவு, ‘‘மறைந்த அந்த ஊழியர், ஓய்வுபெறத் தொடங்கும் தேதிக்கு முன்பாக’’ என்று விதிக்கப்பட்டு இருந்தது. இதைத்தளர்த்தும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்தன.

அப்படி வந்த கோரிக்கைகளை ஏற்று, இப்பொழுது அந்த ஊழியரின் மகன் அல்லது திருமணம் ஆகாத மகள் 30 வயது நிறைவு அடைவதற்குள் அரசின் ஏதாவது ஒரு வேலைக்கு மனுச் செய்யலாம்.

அந்த ஊழியரின் விதவை மனைவி 31வயது நிறைவு அடைவதற்குள், ஏதாவது ஒரு அரசுப் பணிக்கு மனுச் செய்யலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மான கவியாக உருவெடுத்து ஒளி வீசுகிறது. ஒவ்வொரு கவியும் பலவர்ணப் படலங்களை வெளியிடும் மணியாக இருக்கிறது. இந்த விதமாக இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களை உதவிப் போனார் கவிஞர்.

ஏதோ சிலர் அவைகளைப் பாராட்டியு மிருக்கிறார்கள். சமீப காலம்வரை, அதாவது நானூறு, ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வரையில், முத்தொள்ளாயிரத்தைச் சிலர் போற்றி வந்திருக்கிறார்கள். அவர்கள் கையில் முத்தொள்ளாயிர ஏடு இருந்தது என்பது தெரிய வருகிறது. பிறகு ஏட்டைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

கடைசியாக, புறத்திரட்டு என்னும் நூலை யாரோ ஒருவர் தொகுக்க நேர்ந்தது. விஷயங்களை நாலடியார். திருக்குறள் முதலிய நூல்களில் பாகுபாடு செய்த மாதிரி, கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நீத்தார்பெருமை பொறையுடைமை, அரண், நகர், கைக்கிளை (காமத்துப் பால்) என்று வகுத்துக்கொண்டு, அந்த அந்த அதிகாரங்களுக்கு ஒத்த செய்யுள்களை, கண்ட கண்ட நூல்களில் இருந்தெல்லாம் எடுத்து வைத்தார். ஏதோ நம்முடைய புண்ணிய வசத்தால், முத்தொள்ளாயிர ஏடும் அவர் கையில் இருக்க நேர்ந்தது. அந்த ஏட்டிலிருந்தும் சில பாடல்களைப் புறத்திரட்டில் ஆங்காங்கு பெய்து வைத்தார். நமக்குக் கிடைத்துள்ள முத்தொள்ளாயிரப் பாடல்கள் எல்லாம் புறத்திரட்டில் பெய்துள்ளவைதான்.

அப்படிக் கிடைத்துள்ளவை எந்த விதத்திலும் நூற்றெட்டுக்கு மேல் இல்லை. ஆகவே, 2700—108=2592 பாடல்கள் ஒழிந்தே போய்விட்டன. அத்தனை அற்புதமான மணிகளை இழந்து நிற்கிறது தமிழுலகம். இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களும் கிடைத்திருந்தால், ஆயுள் நாள்முழுதும் அவைகளைப்பாடிப் பாடி ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கலாம் நாம். நம்மோடு மட்டுமல்ல; இன்னும் ஆயிரக்கணக்கானவருஷங்களுக்கு நம்முடைய சந்ததியாரும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இந்த அனுபவத்திலிருந்து எத்தனையோ அரிய நூல்களை எழுதித் தமிழையும் வளப்படுத்தலாகும்.

இந்த விதமான நம்முடைய நஷ்டத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், நம்மைவிடத் துர்ப்பாக்கியர்கள் வேறு யாருமில்லை என்றே சொல்லலாம்.

நமக்குக்கிடைத்த பாடல்கள் எல்லாம் வெண்பாக்கள்தான். வேறு பாவினங்களைக் கவிஞர் கையாண்டிருக்கலாம். ஆனால் அவைகள் நம் கைக்கு வரவில்லை.

ஒவ்வொரு வெண்பாவும் ஒரு தனியான தாளத்தோடு நடனமாடுகிறது. அதனுடைய உறுப்புக்கள் அற்புதமான பாவங்களைப் பிடித்துக் காட்டுகின்றன.

நீராட்டி நீங்(கு) என்றால்
நீங்குமோ

இது சொல்லபிநயந் தான்.

கோபவெறி கொண்ட போர் யானையின் கைவரிசையைப் பாருங்கள்: (வெண்பாவின் கடைசி அடி).

திங்கள்மேல் நீட்டுந்தன்
கை!

பவனி வரும்போது சேரனைத் தன் பெண் பார்த்து விட்டால் மோசம்; காதல் நோய்க்கு உள்ளாய் விடுவாள். ஊரார் வம்புக்கும் உள்ளாகி விடுவாள் என்று மகளை வீட்டுக்குள் போகச் சொல்லி வாசல் கதவையும் அடைத்துவிடுகிறாள் தாய்.

ஆனால், மகள் தோழியிடம் என்னசொல்லுகிறாள்பாருங்கள்!

ஆயிழையாய்! என்னை
அவன்மேல் எடுத்துரைப்பார்
வாயும் அடைக்குமோ தான்?

‘கதவு ஒன்றைத்தானேஅடைக்கலாம்? வேறு என்ன செய்ய முடியும் தாய்’ என்ற பாவத்தை இந்த இரண்டு அடிகளும் எப்படி அபிநயம் பிடித்துக் காட்டுகின்றன பாருங்கள்!

பாட்டுக்கு உருவம் என்றால், இந்த விதமாக அதன் உறுப்புகள் பாவத்தை எடுத்துக் காட்ட வேண்டும். இவ்வளவுக்கும் தமிழ் பாஷை அதிசயமாய் உதவுகிறது.

கவி என்று சொல்லும்போது ஏதோ அதிலுள்ள விஷயம் ஒன்றைச் சொல்ல வந்தது என்று சாமான்ய ஜனங்கள் எண்ணலாம். வேறு சிலர், அதிலுள்ள உணர்ச்சியைத் தெரிந்து கொண்டால் போதும் என்று எண்ணலாம். ஆனால், கவியில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, உணர்ச்சியானது பாவ உருவத்தில் வந்து வெளிப்படுகிறதா என்பதுதான். இந்த உருவத்தின் மூலமாகவே, கவிஞருடைய உள்ளத்தில் எழும் உணர்ச்சியைப் பார்க்கிறோம். அதோடு, அந்த உணர்ச்சியை வார்த்தை தாளங்களிலுள்ள நேரான, இயல்பான சம்பந்தத்தில் பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போதுதான் கவிஞரது இதயத்திலுள்ள அற்புதமான சிருஷ்டி தத்துவம் நம்முடைய இதயத்துக்கும் வந்து சேருகிறது. கவிஞருடைய சிருஷ்டி தத்துவத்தால், கவிஞர் இதயத்தில் பெருகிய ஆனந்தம் அவ்வளவிலும், நாமும் பங்கு கொள்கிறோம். முத்தொள்ளாயிர ஆசிரியர் இரண்டாயிர வருஷத்துக்கு முன் அடைந்த ஆனந்தத்தை இன்று நம்முடைய இதயம் அடைகிறது, நமது பாக்கியம்தான் என்ன!

முத்தொள்ளாயிரம் என்னும் பெயரோடு நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் தொண்ணூற்றொன்பது. இந்தத் தொண்ணூற்றொன்பது பாடல்களையும் ஆயுள் நாள் முழுவதும் நாம் பாடிப்பாடி அனுபவித்துக்கொண்டிருக்கலாம். பாடப்பாட, வாய் பால்மயமாகும்!

இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இருந்த கவிஞர், கவியமுதைத் தங்கத் தட்டில் வைத்து நீட்டுகிறார் நமக்கு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்···அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23 தமிழரசு

